ANGLO ASIAN MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.



Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 5 12 – 18 ஒகஸ்ட் 1999 முழக்கம்: 239



CAR CHECK
Mot & Repair Center
உங்களுடைய சகல திருத்த
வேலைக்கும், M.O.T க்கும்
தொடர்புகொள்ளவேண்டிய இடம்:
(Honda & Nisson Dealer க்கு அருகாமையில்)
Unit 17 Stonefield Close.
Off Stonefield Way
Ruislip - Middx.
தொடர்புகளுக்கு: 0181-841 1880
(குமார்)
Pub.


# புலிகளும் இராணுவமும் 4 1/2 வருடங்களின் பின் சந்திப்பு

## மாங்குளம் ஊடாக வன்னிக்கான புதிய பாதை

(09.08.1999)

95ம் ஆண்டிற்குப் பின்னர் சிறீலங்கா இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் முதன்முதலாக மாங்குளப்பாதைத்திறப்பு விடையத்தில் சந்தித்து கொண்டுள்ளனர். விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல்துறை துணைப் பொறுப்பாளரும் மூத்த உறுப்பினருமான திருசுரிகாலன், கேணல் ஜெயம், தளபதி சுரேஷ் ஆகியோரும் சிறீலங்கா இராணுவத்தரப்பில் மேஜர் ஜெனரெல் பலகல்லையும் அவரது களநிலை அதிகாரிகளும் பாதைத்திறப்பு விடயத்தில் பங்கெடுத்துக் கொண்டுள்ளனர். இரு தரப்பினரையும் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினர் ஒருங்கிணைத்தனர்.

(☞ 2ம் பக்கம்)

# ஐ.நாமுன் அலையாக எழுந்த மக்கள்

## * சுயநிர்ணய உரிமை எமக்கு உண்டு
## * விடுதலைப் புலிகளே தமிழர் பிரதிநிதிகள்

(09.08.1999)

இந்த நூற்றாண்டின் இணையற்ற போராட்டங்களில் தமிழீழ விடுதலைப் போராட்டமும் தனது வரலாற்றினைப் பதித்து அடுத்த நூற்றாண்டில் தனது இலக்கான வெற்றிக்காக நடைபோடும் இவ்வேளையில் புகலிடத் தமிழர்கள் தமது தேசத்திற்கான அங்கீகாரத்தினை மீண்டும் ஒருமுறை ஐநா. அமைப்பின் முன் கோரியுள்ளனர். ஐரோப்பாவின் பல நாடுகளிலும் இருந்து வந்து ஐ.நா முன்றலில் அலையென



திரண்ட இம் மக்கள் விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதையும், தமிழ் மக்களுக்கான தேசிய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளனர். 7,000ற்கும் மேற்பட்ட மக்கள் இவ் அமைதிப் பேரணியில் பங்கெடுத்துக் கொண்டதாக ஈழமுரசின் சுவிஸ் செய்தியாளர் அறிவித்திருக்கின்றார்.

இன்று நண்பகல் இரண்டு மணியளவில் ஜெனீவா தொடருந்து நிலையத்திற்கு அருகாமையில் ஒன்றுகூடிய மக்கள் ஐ.நா நோக்கி மாபெரும் அணியாக அணிவகுத்தனர். பேரணியில் 'எமது தலைவர் - பிரபாகரன்', 'எமது தாயகம் - தமிழீழம்', 'எம் மக்கள் மீது போடப்பட்ட தடைகளை சிறீலங்கா அரசே உடனடியாக நிறுத்து' போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன. பேரணியில் கலந்துகொண்ட மக்களுக்கு தமிழீழ தேசியக்கொடியும், தலைப்பட்டியொன்றும் விடுதலைப் புலிகளின் சுவிஸ் பணியகத்தால் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து, 2.50 மணியளவில் பேரணி ஐக்கிய நாடுகளை சபையை நோக்கி நகரத்தொடங்கியது.

பேரணியின் முன்னால் நாகர் கோவில் சிறீலங்கா விமானக் குண்டுவீச்சினை நினைவுபடுத்தும் ஊர்தியும், அதனைத் தொடர்ந்து செம்மணி புதைகுழி தொடர்பான நிகழ்வுகளை தாங்கியவாறு இன்னொரு ஊர்தியும் செல்ல, அதனைத் தொடர்ந்து மேள வாத்தியம், பொய்கால் குதிரை, கரகாட்டம், பறையடி என்பன இடம்பெற தேசியத்

(☞ 2ம் பக்கம்)

11.08.1999

## நூற்றாண்டின் இறுதி கிரகணம்

(மேக மூட்டத்தோடு)




எச்சரிக்கை: வெறுமையான கண்களால் சூரியனைப் பார்க்க வேண்டாம்!

## வாகரை முகாம் பொறுப்பதிகாரி மீது தற்கொடைத் தாக்குதல்

வாகரையில் உள்ள சிறீலங்கா படைமுகாமின் பொறுப்பதிகாரியான மேஜர் கருணா நாயக்க கடந்த 9-ம் திகதியன்று நண்பகல் நடாத்தப்பட்ட தற்கொடைக்குண்டுத்தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டுள்ளார். இத்தாக்குதலில் அவரின் மெய்பாதுகாவலர் உட்பட 3 சிப்பாய்கள் படுகாயமடைந்துள்ளார்கள். முகாமுக்கு உட்புறமாக இத் தாக்குதல் நடாத்தப்பட்டமை கிழக்குப் பாதுகாப்பு வட்டாரங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. கடந்த 3-ம் திகதி கிழக்கின் பாதுகாப்பின் ஏற்பாடுகள் குறித்து சிறீலங்கா

(☞ 2ம் பக்கம்)


தமிழினி
பல்பொருள் அங்காடி
TAMILINI Cash and Carry
195-197 The Broadway, Southall
Middx Ub1 1LZ
Tel: 0181-606 9900 Fax: 0181-813 8269

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் சு. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
**Leama**
**Tel: 0208 2053650**
**Fax: 0208 2053651**

டென்மார்க்:
T. சுரேஸ்காந்த்
Møller vcj - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: மக்கள் கடை
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin,
Swiss.
Natel: 079 635 02 16

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
ஹரி - Tel: 07887874177

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
'EELAMURASU'
P.O Box S-109
Homebush South
N.S.W 2140
Australia
E-Mail:ccsydney@one.net.au

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## ஐ.நா. முன்...

தலைவரின் பிரமாண்டமான உருவப்படத்தைத் தாங்கியவாறு மக்கள் பின் தொடர்ந்தனர்.

ஜெனிவா தொடருந்து நிலையத்தில் இருந்து ஐநாவரை போக்குவரத்துக்களை கட்டுப்படுத்தி பேரணிக்கான ஒத்துழைப்புக்களை சுவிஸ் பொலிசார் வழங்கினர்.

மாலை 4.15 மணியளவில் ஐ.நா முன்றலை பேரணி சென்றடைந்ததும், தேசிக்கொடியேற்றப்பட்டு அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து வணக்கத்திற்குரிய இமானுவேல் அடிகள், சுவிஸ் பாராளுமன்ற உறுப்பினர் அல்சலின் பிராங்கோ, அமெரிக்காவை சேர்ந்த கரன்பாக்கர் அம்மையார், இங்கிலாந்தில் இருந்து வருகைதந்த செல்வி டியற்றி, விடுதலைப் புலிகளின் சர்வதேச செயற்பாட்டாளர் சிவா ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

இறுதியாக இப் பேரணியின் முக்கிய நிகழ்வான பேரணித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஆவன,

★ சிறீலங்கா அரசு உணவையும், மருந்தையும் போராயுதமாக பயன் படுத்தி தமிழ்மக்களை பட்டினிச்சாவிற்கு உட்படுத்தி தனது இன அழிப்பு நடவடிக்கையை கூட்டியுள்ளது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

★ கடந்த 50 வருடங்களுக்கு மேலாக தமிழர் தாயகப்பகுதியில் தமிழின அழிப்பை நடாத்திக் கொண்டிருக்கும் சிறீலங்காப் படைகளும், கைக்கூலிகளும் தமிழர் பகுதிகளை விட்டு முற்றாக வெளியேற வேண்டும்.

★ சிறீலங்கா அரசின் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களாலும், மண் பறிப்புக்களாலும் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டும், துண்டாடப்பட்டும் வரும் தமிழர் தாயகப்பகுதியான தமிழீழத்தை தமிழரின் தாயகம் என அனைத்துலகம் அங்கீகரிக்க வேண்டும்.

★ மனித உரிமைகள் சாசனத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் உரியதான தேசிய சுயநிர்ணய உரிமை தமிழ் மக்களுக்கு உண்டு என்பதையும் அனைத்துலகமும் அங்கீகரிக்க வேண்டும்.

★ தமிழீழ மக்கள் சார்பான எந்த அரசியல் விடயங்களையும் தமிழீழ மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேசித் தீர்க்கவேண்டும்.

★ சிறீலங்கா அரசும், தமிழீழ அரசும் இலங்கைத் தீவில் போரை நிறுத்தி நீதியான நிரந்தர சமாதானத்தை கொண்டுவர உண்மைக்கும், நீதிக்கும் ஆதரவு கொடுக்கும் மூன்றாம் தரப்பு உதவி செய்ய வேண்டும். அல்லது இறைமையுள்ள சுதந்திர தமிழீழத்தை அங்கீகரிக்க வேண்டும்.

★ மேற்குலக நாடுகளில் சிறீலங்கா அரச பயங்கரவாதத்தால் புலம் பெயர்ந்து அகதிகளாக வந்த தமிழ் மக்களை, இலங்கைத்தீவில் ஓர் நிரந்தர அமைதி கிட்டும்வரை திருப்பி அனுப்புதல் நிறுத்தப்பட வேண்டும்.

தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற பாடல் கூடியிருந்த மக்களால் பாடப்பட்டதைத் தொடர்ந்து அமைதியுடன் கொடியிறக்கப் பட்டது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## புலிகளும்...

மாங்குளம் ஊடான பாதையை திறப்பதென இரு தரப்பினரும் இணங்கிக்கொண்டதை அடுத்து, இரு தரப்பினரும் தத்தமது பகுதியிலுள்ள கண்ணிவெடிகளையும் மிதிவெடிகளையும் அகற்றுவது என முடிவு செய்தனர். A9 நெடுஞ்சாலைப் பகுதியில் இரு தரப்பு முன்னணி காவலரண்களுக்கும் இடைப்பட்ட இடங்களில் வெள்ளைக் கொடிகளை நாட்டி இரு தரப்பினரும் தமது எல்லைகளை வரையறுத்துக் கொண்டதையடுத்து சுமார் 50 மீற்றர் தூரத்தில் இருந்த கண்ணிவெடிகளும் மிதிவெடிகளும் அகற்றப்பட்டன. இச் செயற்பாட்டினை செஞ்சிலுவை சங்கத்தின் வவுனியா, மல்லாவி கிளையினர் மேற்பார்வை செய்தனர். கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதையடுத்து சிறீலங்கா இராணுவத் தளபதிகள் உட்பட்ட அதிகாரிகளும் விடுதலைப் புலிகளின் தளபதிகளும் எல்லைகளில் சந்தித்து உரையாடிக்கொண்டனர். 95ம் ஆண்டு ஏப்பிரல் மாதத்திற்கு பின்னர் இரு தரப்பினரும் சந்தித்துக் கொண்டது இதுவே முதல் தடவை.

வெள்ளிக்கிழமை (06.08.99) காலை ஒன்பது மணிக்கு கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்படுவதாக இருந்த போதும் சற்றுத் தாமதமாகவே இப் பணி ஆரம்பித்தது. எல்லைப்புற பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பெரும் பாதுகாப்பு அரணும் அகற்றப்பட்டதையடுத்து வீதியினை செஞ்சிலுவை சங்கத்தினர் பார்வையிட்டனர். இதனையடுத்து மாங்குளம் ஊடான பாதை போக்குவரத்திற்குத் தயாரானது. ஆயினும் இன்று காலையே இதனூடான போக்குவரத்துக்கள் ஆரம்பமாகியுள்ளன.

வவுனியாவில் இருந்து வன்னிக்கான உணவு வண்டிகளும், வவுனியாவில் சிக்கியருந்த வன்னி மக்களும் இப்பாதையூடாக பயணத்தினை மேற்கொண்டனர். இந்நடவடிக்கைகளை விடுதலைப் புலிகளும் இராணுவத்தினரும் 80 மீற்றர் தொலைவில் இருந்தபடி கண்காணித்தனர். ஒரு கட்டத்தில் கரிகாலன் அவர்கள் எமது பகுதிகளுக்குள் நீங்கள் நுழையாத பட்சத்தில் நாமும் உங்கள் பகுதிக்குள் அத்துமீற மாட்டோம் என்ற உறுதியினையும் இராணுவத்தினருக்கு அளித்தார். புதிய பாதையூடான முதலாவது போக்குவரத்தினை செய்தியாளர்களும் அவதானித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து செய்தியாளர்கள் வவுனியா ஊடாக மாங்குளத்திற்கும், 'புலிகளின் குரல்' வானொலி, 'ஈழநாதம்' ஆகிய செய்தி நிறுவனங்களின் செய்தியாளர்கள் மல்லாவியில் இருந்தும் வருகை தந்திருந்தனர். 'புலிகளின் குரல்' வானொலியின் சார்பில் சத்தியா அவர்கள் பாதை திறப்பில் கலந்துகொண்டிருந்தார்.

இதேவேளை புதிய பாதை திறக்கப்பட்டதையடுத்து வவுனியா அரச அதிபர் சகல தரப்பினருக்குமான தமது நன்றியினை தெரிவித்துள்ளார். எனினும் இப் பாதையூடான போக்குவரத்திற்கு சிறீலங்கா இராணுவம் தொடர்ந்தும் அனுமதி அளிக்குமா என்ற சந்தேகம் வன்னி மக்களிடையே இருப்பதாக வவுனியா செய்திகள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க நேற்று விடுதலைப் புலிகள் தமது முன்னணிக் காவல்நிலையில் மிதிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டபோது, உருக்குலைந்த நிலையில் இராணுவச் சிப்பாய் ஒருவரின் சடலத்தைக் கண்டெடுத்துள்ளனர். பின்னர் இச் சடலம் செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக சிறீலங்கா இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## வாகரை முகாம்...

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை தலைமையில் மாநாடு ஒன்று நடாத்தப்பட்ட சில நாட்களுக்குள் இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளமை கொழும்பு பாதுகாப்பு அமைச்சினையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

வாகரை முகாமின் முன்னரங்கச் சோதனைச் சாவடிக்கு அருகே இருக்கும் குடிசை ஒன்றுக்குள் பொறுப்பதிகாரி ஓய்வாக அமைந்திருந்தபோது பாதுகாப்பு வேலிகளைத் தாண்டி உள்ளே வந்த தற்கொடைப் போராளி ஒருவர் இத் தாக்குதலை நடாத்தியதாகக் கூறப்படுகின்றது. கொல்லப்பட்ட மேஜர் கருணாநாயக்க கடந்த 9 வருடங்களாக மட்டக்களப்புப் பிரதேசத்தில் கடமையாற்றி வந்துள்ளார்.

## மரண அறிவித்தல்



பிறப்பு: 09.08.1927

இறப்பு: 07.08.1999

## திருமதி மரியநாயகம்

இளவாலையைப் பிறப்பிடமாகவும், தலவாக்கலயை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி மரியநாயகம் 07.08.1999 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி ஜோண்பிள்ளை அவர்களின் அன்பு மகளும், மரியமலர் (பிரான்ஸ்), ஞானமலர் (இலங்கை), காலஞ்சென்ற ஜேசுதாசன், மரியதாசன் (இத்தாலி), தேவமலர் (இலங்கை), அசுந்தா (பிரான்ஸ்), அமலதாஸ் (இந்தியா), ஜெயா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

காலஞ்சென்ற வேதநாயகம் (ஆசிரியர்), றோஸ்மேரி (இலங்கை), ராணி (இத்தாலி), ஜோண் பப்ரிஸ் (இலங்கை), அன்ரன் (பிரான்ஸ்), வத்சலா (இந்தியா), கிருஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

*இவர் பிரிவால் துயருறும்*
*கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்*

*தகவல்:*
*திருமதி அன்ரன்(பிரான்ஸ்)*
*தொலைபேசி: 01 39 92 00 79.*

ERRANCES TRAVELS

**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 075 95 01 37
(ADV)

# சந்திரிகா அரசிற்கான ஆதரவினை நிறுத்துங்கள்

## தமிழ் குழுக்களுக்கு யாழ். கத்தோலிக்க மதகுருமார்

வன்னி மக்களின் உணவுப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாத இந்த அரசிற்கான ஆதரவினை உடனடியாக தமிழ் குழுக்கள் விலக்கவேண்டுமென யாழ்.கத்தோலிக்க மறைமாவட்டத்தைச் சேர்ந்த 50 மதகுருமார் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர். தமது இக்கோரிக்கையினை முறையீட்டு மனுவாகத் தயாரித்து அதில் அனைவரும் ஒப்பமிட்டு பாராளுமன்ற தமிழ் குழு உறுப்பினர்களுக்கு அனுப்பியும் வைத்துள்ளனர். அம்முறையீட்டு மனுவில்,

வன்னிமக்களின் அவலக் குரல் எமது காதுகளைத் துளைக்கின்றது. உள்ளங்களை உருக்குகின்றது. உணவுப் பற்றாக்குறையால் ஏற்படும் பட்டினிச்சாவு ஒருபுறமும் மருத்துவ வசதிகள் இன்மையால் ஏற்படும் மரணங்கள் மறுபுறமுமாக மக்கள் துன்பப்படுகின்றனர். இந்த அவல நிலையை ஓரளவு நீக்குவதற்கான பாதைத்திறப்பு இன்னமும் சாத்தியப்படவில்லை. உணவை ஒரு ஆயுதமாகச் சிறீலங்கா அரசு பாவித்து வருகின்றது. இவ்வாறான நிலையை நியாயப்படுத்தும் அவசரகாலச் சட்டத்தினை தாங்களும் கண்மூடித்தனமாக ஆதரித்துவருவது கவலைக்குரியது. என்ன காரணம் கூறினாலும் இவ்வாறான பரிதாப நிலையினை ஏற்றுக்கொள்ள முடியாது. வன்னிப் பாதை திறப்பிற்கான நடவடிக்கைகளுக்குக்கூட தாங்கள் ஆதரவு தெரிவிக்காவிடில் உடனடியாக அரசிற்கு வழங்கும் ஆதரவினை விலக்கிக்கொள்ளுமாறு மக்களின் சார்பில் தங்களைக் கேட்டுக்கொள்கிறோம் என அம் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புலிகளைக் கண்டு ஓடிய பொலிசாருக்கு பதவி நீக்கம்

திருமலை குமரன் கடவைப் பகுதியில் உள்ள பொலிஸ் காவலரண் ஒன்று புலிகளின் தாக்குதலால் முற்றாக அழிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து புலிகளின் தாக்குதலை முறியடிக்க பொலிசார் எவ்விதமான பதில் தாக்குதலும் மேற்கொள்ளாமல் தப்பி ஓடியதனால் அக் காவலரணின் பொறுப்பதிகாரி உட்பட அங்கு கடமையாற்றிய சகலருக்கும் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு பதவிநீக்க அறிவித்தல்களை வழங்கியுள்ளது. கடந்த 28-ம் திகதி புலிகளால் நடாத்தப்பட்ட இத் தாக்குதலில் பல ஆயுதங்களும் தொடர்புச் சாதனக் கருவிகளும் கைப்பற்றிச் செல்லப்பட்டன.

புலிகள் தாக்குதலை நடாத்த ஆரம்பித்ததுமே பொலிசார் தப்பியோடியமையை தாம் உறுதிப்படுத்திய பின்னரே, பொலிசாருக்கான பதவிநீக்க அறிவிப்பினை வழங்கியதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

# இது குசும்புங்கோ..!

★ தமிழர்களை அழிக்க நடக்கும் போரில் வெற்றிபெறுவதே சிங்கள மக்களைப் பாதுகாக்க கூடிய ஓரே தீர்வு

*– சிங்கள இனவாத அமைப்பான 'பயங்கரவாதத்திற்கு எதிரான அமைப்பு' வெளிநாட்டிலுள்ள சிங்களவர்களுக்கு அனுப்பிவைத்துள்ள தனது கடிதமொன்றில்.*

☺ ☺ ☺

★ எமது புதிய ஐந்து ஆலோசனைகளில் [வன்னிப் போக்குவரத்திற்கான வழிகள் பற்றியது] எதையும் புலிகள் ஏற்றுக்கொள்ளாது விட்டால், புலிகளின் முன்னரங்க காவல்நிலைகள் மீது தாக்குதல் நடாத்தி பொதுமக்களின் போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வழிகளை தேடவேண்டிய அவசியம் ஏற்படும்.

*– வன்னி பாதைதிறப்பு தொடர்பாக, லக்ஷ்மன் கதிர்காமர்.*

☺ ☺ ☺

★ தமிழ் மக்கள் அத்தியாவசிய தேவைகளின்றி அவதிப்படுவதை பொறுப்புள்ள இராணுவம் என்ற முறையில் எம்மால் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஆகவேதான் வேறுவழியின்றி மக்கள் போக்குவரத்திற்கான ஐந்து வழிகளை ஆலோசனையாக வைத்துள்ளோம்.

*– வன்னி பாதை திறப்பு தொடர்பாக இராணுவத்தளபதி, பலகல்லே*

☺ ☺ ☺

★ சர்வாதிகாரத் தன்மையற்ற சிங்கள அரசியல் நிர்வாகமாக சந்திரிகா அரசு தெளிவாக காணப்பட்டுள்ளது. இந்தப்புதிய நிலமையில் எல்.ரீ.ரீ.ஈ இயக்கம் தனது அரசியல் தளம் கரைந்துவருவதை உணர்ந்துள்ளது என்பது தெளிவானது.

*– ஆங்கில ஏடான இந்துவின் ஆசிரியர் தலையங்கத்தில்.*

☺ ☺ ☺

★ நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்டதையடுத்து வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழர்கள் அனாதைகளாகி விட்டார்கள். அவர்களுக்கு முறையான தலைவர்கள் யாரும் இல்லை.

*– இந்தியா டுடேயில் வில்சன் ஞானதாஸ்*

# சிறீலங்காவிலிருந்து ரஷ்யா செல்ல புதிய கட்டுப்பாடு

போலிநுழைவு அனுமதிகளுடன் பல இலங்கையர்கள் ரஷ்யாவிற்கு நுழைவதைத் தடுப்பதற்காக கொழும்பிலுள்ள ரஷ்யத் தூதரகம் புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. உயர் கல்வி கற்பதற்காக ரஷ்யா செல்வதாகக்கூறிக்கொண்டு பல இளைஞர் யுவதிகளை பயண முகவர்கள் தந்திரமாக ரஷ்யாவிற்குள் கொண்டுசெல்வதாகவும், இவ்வாறான செயற்பாடுகளை தடுக்கும் முகமாகவே புதிய கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக ரஷ்ய தூதரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். புதிய நடைமுறையின்படி ரஷ்யாவில் கல்வி கற்க விரும்புவோரின் முழுமையான விபரங்களும் நன்றாகப் பரிசீலனை செய்யப்பட்ட பின்னரே குறிப்பிட்ட அந் நபருக்கு ரஷ்யாவிற்கான நுழைவு அனுமதியை வழங்குவதா இல்லையா என தூதரகம் தீர்மானிக்கும் எனவும், ஆனால் இந்தக் கட்டுப்பாடுகளால் உண்மையான மாணவர்கள் எக்காரணம் கொண்டும் பாதிக்கப்படமாட்டார்கள் எனவும் தூதரகம் தெரிவித்துள்ளது.

# நெருக்கடியான நேரத்தில் கிளிநொச்சி – முல்லை அரச அதிபர்களை இடமாற்றம் செய்தது ஏன்?

## – ரணில்

கிளிநொச்சி - முல்லைத்தீவு அரசாங்க அதிபர்களின் இடமாற்றத்திற்கு என்ன காரணம் என்பதை அரசு உடனடியாகத் தெரிவிக்கவேண்டும் என சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் கேட்டுக்கொண்டுள்ளார். மிகவும் நெருக்கடியான நேரத்தில் அவர்களை இடம் மாற்றியதற்கான தெளிவான காரணங்களை சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கவேண்டும் எனக் கோரிய ரணில், இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கான உணவு விநியோகம் தடைப்பட்டிருக்கும் இந்த வேளையில் இவ்வாறான இடமாற்றங்கள் இடம்பெறுவது கவலைக்குரியதெனவும் தெரிவித்தார்.

அகதிகளுக்கான நிவாரணப் பணிகளில் ஈடுபடும் அமெரிக்கக் குழு 1991-ம் ஆண்டு மேற்படி இரு அரச அதிபர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு விருப்பம் தெரிவித்துக்கொண்டது. அத்தகைய பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்டிருந்த இவ்விரு அரச அதிபர்களையும் இடம் மாற்றியதற்கான உள் நோக்கம் ஏதாவது இருந்தால் அதனை வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். ரணிலின் இக்கேள்விக்கு பதிலளித்த சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை, மேற்படி இரு அரச அதிபர்களின் இடமாற்றங்கள் அவர்களின் சுயவிருப்பத்தின் பேரிலேயே இடம்பெற்றதாகவும், அரசினால் பழிவாங்கும் நோக்கில் அவர்கள் இடமாற்றம் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்ததுடன், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபராக எஸ்.சுந்தரலிங்கம் என்பவரும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ஜி.அய்யாத்துரை என்பவரும் நியமிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் மேற்படி இடமாற்றங்கள் தொடர்பாக முன்னர் வெளியாகிய செய்திகளில் எதுவித உண்மையும் இல்லையெனவும் தெரிவித்திருக்கிறார்.

# கிழக்கு பாதுகாப்பிற்கு உயர்மட்ட மாநாடு

## ரத்வத்தையும் கலந்துகொண்டார்

கிழக்கில் எடுக்கப்படவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மட்டக்களப்பு 23-3 படைப்பிரிவுத் தலைமை அலுவலகத்தில் உயர் மட்ட மாநாடு ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. கடந்த 3-ம் திகதி இடம்பெற்ற இம்மாநாட்டில் சிறீலங்கா பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையும் கலந்துகொண்டார். ரத்வத்தையின் வருகையினையொட்டி மட்டக்களப்பில் மிகக் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கறுத்தைச் சீருடை அணிந்த விசேட இராணுவத்தினர் கனரக கவச வாகனங்கள் சகிதம் மட்டக்களப்பின் பிரதான தெருக்களில் ரோந்து புரிந்ததுடன், திடீர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ரத்வத்தையின் உலங்கு வானூர்தி இறங்கிய வெபர் அரங்கின் சுற்றாடல் பகுதிகளில் மக்கள் நடமாட்டமே தடைசெய்யப்பட்டது. வெபர் அரங்கிற்கு வந்த ரத்வத்தை உடனடியாகவே 23 - 3 படைப்பிரிவுத் தலைமை அலுவலகத்தில் முப்படை அதிகாரிகளுடனும் பொலிஸ் அதிகாரிகளுடனும் மாநாட்டினை நடாத்தினார்.

மட்டக்களப்பு நகரில் விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல்களை நடாத்தும் சாத்தியக்கூறுகள் குறித்த விடயங்களே இம் மாநாட்டில் இடம்பெற்றிருந்ததாக மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. மட்டு. மாநாட்டினை முடித்த பின்னர் ரத்வத்தை வவுனியாவிற்குச் சென்றதாகவும் தெரியவருகிறது.

# வவுனியா புளொட் இராணுவப் பொறுப்பாளரும் உதவியாளரும் சுட்டுக்கொலை

புளொட் குழுவின் வவுனியா பிரதேச இராணுவப் பொறுப்பாளர் எனக் கருதப்படும் கண்ணாடிக் குமார், கடந்த 5-ம் திகதி இரவு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவரது உதவியாளரான கோபாலகிருஷ்ணன் என்பவர் இச் சம்பவத்தில் படுகாயமடைந்து அநுராதபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதிலும் அங்கு மரணமடைந்துள்ளார். கோவில் குளம் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அப்பகுதியில் உள்ள கடையொன்றிற்கருகே இவ்விருவரும் நின்றவேளை அங்கு மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இரு இளைஞர்கள் இவ் இருவர் மீதும் துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுவிட்டனர். இரவு 7.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# படையினர் பொருத்திய கண்ணிவெடிக்கு ஓய்வுபெற்ற அதிபர் பலி

மூதூர் மல்லிகைத் தீவுப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினர் பொருத்தியதாகக் கூறப்படும் கண்ணிவெடியொன்றில் பயணிகள் வாகனமொன்று சிக்கியதில் ஓய்வுபெற்ற பாடசாலை அதிபரான விநாயகமூர்த்தி என்பவர் பலியாகியுள்ளார். மேலும் 6 பேர் காயமடைந்துள்ளனர். பலியாகிய அதிபர் மரணச்சடங்கு ஒன்றிற்காக பொருட்களைக் கொள்வனவுசெய்ய வந்தவர் எனவும் கூறப்படுகிறது. மல்லிகைத் தீவில் இருந்து புறப்பட்ட இவ் வாகனம் மூதூரைநோக்கி வந்து கொண்டிருந்தபோது, அவ்வாகனத்தினை பட்டித்திடல் பகுதியில் உள்ள இராணுவச் சோதனைச் சாவடியில் மறித்து இராணுவத்தினர் சோதனைசெய்துள்ளனர். அச்சோதனைச் சாவடியைக் கடந்து மற்றைய சோதனைச் சாவடியை நோக்கி வாகனம் சென்ற சில நிமிடங்களில் வீதியில் இருந்த கண்ணிவெடி வெடித்துள்ளது. இரு சோதனைச் சாவடிகளுக்கும் இடையே 50 யாருக்கும் குறைவான தூரமே இருப்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுக்குச் செல்ல கூட்டணிப் பிரமுகர்கள் விருப்பம்

தமிழர்விடுதலைக்கூட்டணி பிரமுகர்கள் தங்கள் பாதுகாப்புக் கருதி இந்தியாவில் தங்கவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. நீலன் திருச்செல்வத்தின் மீதான குண்டுத் தாக்குதலை அடுத்தே இவர்கள் இம் முடிவிற்கு வந்துள்ளார்கள். தமிழகம் சென்று அங்கு தங்கியிருப்பதற்கான பேச்சுக்களில் இந்திய அரசுடன் இவர்கள் தற்போது ஈடுபட்டு வருவதாகவும் இந்நடவடிக்கைக்கு சிறீலங்கா அரசு உதவிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை சிறீலங்காவின் தேசியப் புலனாய்வுப் பிரிவு வெளியிட்ட அறிவிப்பொன்றில் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களுக்கு பெரும் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

ஏற்கனவே மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டணி உறுப்பினர்கள் தமது செயற்பாடுகளை அம்மாவட்டத்தில் நிறுத்திவிட்டு கொழும்பு வந்திருந்தபோதிலும் அவர்களுக்கான பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்ந்து நிலவி வருவதாக அவ் அறிவிப்பு குறிப்பிட்டுள்ளது.

## பூநகரி கடலில் படகு விபத்து பலர் பலி என அச்சம்

கடந்த 2-ம் திகதியன்று மன்னார் நாச்சிக்குடாப் பகுதியில் இருந்து குருநகரை நோக்கிச் சென்ற அகதிகள் படகொன்று மூழ்கியதால் அதில் பயணம் செய்த பலர் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. சுமார் 25 பேர் வரை பயணம்செய்த இப்படகு பூநகரிக்கடலினூடாகச் சென்றவேளை, கடற்கொந்தளிப்பு காரணமாக கவிழ்ந்ததால் அதில் பயணம் செய்த அனைவரும் கடலுக்குள் விழுந்தனர். சிலர் நீந்திக்கரைசேர்ந்த பொழுதிலும் பலர் இதுவரை கரைதிரும்பவில்லை. இவர்கள் கடலில் மூழ்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இவ்வாறு மூழ்கியவர்களில் ஒருவரான விஜயன் பூமகள் என்ற 22 வயதான கர்ப்பிணிப்பெண்ணின் சடலம் விபத்து நடந்து 4 நாட்களின் பின்னர் மன்னார் கிராஞ்சி கடற்கரையில் ஒதுங்கியிருந்தது. இச்சடலத்தினை வீட்டிற்குக் கொண்டு செல்லமுடியாதமையினால் அப்பகுதியிலேயே உறவினர்கள் அடக்கம் செய்துவிட்டனர்.

பலியான இப்பெண்ணின் கணவனும், சகோதரியின் பிள்ளைகளும் நீந்தி இரணைதீவுக் கரையினை அடைந்துள்ளனர். எனினும் படகில் சென்ற இன்னும் சிலர் கரைதிரும்பாமையினால் அவர்கள் முடிவு குறித்து அஞ்சப்படுகிறது.

## ஈ.பி.டி.பி.யின் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு ஒரு ஏமாற்று வித்தையே!

### - குமார் பொன்னம்பலம்

அரசாங்கத்திற்கு ஆதரவாகச் செயற்படும் ஈ.பி.டி.பி. தற்பொழுது பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பதில் எவ்வித பலனுமில்லை. இது ஒரு ஏமாற்று வித்தைதான். இவ்வாறு அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் அவர்கள் தெரிவித்துள்ளார். ஈபிடிபி.யினர் சிறீலங்காப் பாராளுமன்றத்தை தற்பொழுது பகிஸ்கரித்து வருவது தொடர்பாக கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுவரைகாலமும் அரசிற்கு ஆதரவாகச் செயற்பட்டவர்கள் தற்பொழுது எதற்காகப் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்க வேண்டும்.

அரசு தமிழ் மக்களுக்கு உருப்படியாக எதனையும் செய்யவில்லை என்பதனாலேயா இப்பகிஷ்கரிப்பு? அப்படியானால் கடந்த ஆண்டுகளில் இவ்வாறு செய்திருக்கலாமே! பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியாக எம்.பி. பதவி வகித்தபின்னரே அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவதால் தற்பொழுது தமது ஓய்வூதியத்தை உறுதிப்படுத்திய பின்னர் மக்களை ஏமாற்றுவதற்காக பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கின்றனர். தமிழ் மக்களை முட்டாள்களாக இவர்கள் நினைப்பதனாலேயே இந்த நடவடிக்கை. சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை இடம்பெற்றபோது பல நூற்றுக்கணக்கானோர் இறந்ததுடன் 5 இலட்சத்திற்கும் மேலானவர்கள் தமது வதிவிடங்களை விட்டு வெளியேறினார்கள். அப்போது ஈ.பி.டி.பி.யினர் பாராளுமன்றத்தில்தான் இருந்தனர். அப்போது இவர்கள் பாராளுமன்றத்தை பகிஷ்கரித்திருந்தார்களேயானால் சில மாற்றங்கள் நேரிட்டிருக்கலாம். ஆனால் தற்பொழுது வன்னி மக்களின் துயர் துடைப்புக்கு எனக் கூறிக்கொண்டு தங்களது ஓய்வூதியத்தையும் உறுதிப்படுத்திய பின்னர் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கின்றோம் என தமிழ்மக்களை ஏமாற்றவேண்டாம் என அவர் குறிப்பிட்டார்.

## சிறீலங்கா சுங்கக் களஞ்சியத்திலிருந்து சக்திவாய்ந்த தொடர்புச் சாதனங்கள் மாயம்

சிறீலங்காவின் சுங்கக்களஞ்சிய சாலையில் மிகப் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த அதி சக்திவாய்ந்த 17 தொலைத்தொடர்பு சாதனங்கள் மாயமாக மறைந்தமை குறித்து குற்றப் புலனாய்வுப் பகுதியினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். ஊறுகொடவத்த பகுதியில் இருக்கும் களஞ்சியசாலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. களஞ்சியசாலையில் இருந்த கொள்கலன் உடைக்கப்பட்டே இத்தொலைத்தொடர்பு சாதனங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் மாதம் இஸ்ரேலில் இருந்து கொண்டுவரப்பட்ட கொள்கலன் ஒன்றில் இத்தொலைத்தொடர்புச் சாதனங்கள் மறைத்துவைக்கப்பட்டிருந்தன. இக்கொள்கலனுக்கு எவரும் உரிமைகோரவில்லை, அத்துடன் அதனைக் கொண்டுவந்த கப்பல் நிறுவனமும் இதற்கான விளக்கத்தினை அளிக்கவில்லை. இதனால் இக்கொள்கலன் முத்திரை (சீல்) இடப்பட்டு சுங்கக் களஞ்சியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டது. ஆயினும் தற்பொழுது அக்கொள்கலனில் இருந்த அதிசக்திவாய்ந்த தொலைத்தொடர்புச் சாதனங்கள் காணாமல்போயுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## கற்பிட்டியில் உலங்கு வானூர்தி தாக்குதல்

### சிறார்கள் காயம்

கற்பிட்டி ஈச்சங்காட்டில் சிறீலங்கா விமானப்படையினரின் உலங்குவானூர்தியிலிருந்து ஏவப்பட்ட ஏவுகணை ஒன்று வீழ்ந்து வெடித்ததில் இரு சிறார்கள் காயமடைந்துள்ளனர். புத்தளம் பகுதியில் உள்ள கற்பிட்டி பிரதேசத்தில் இத் தாக்குதல் நடந்தமை அங்கு பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது. இத் தாக்குதலுக்கான விளக்கத்தினை அளித்த சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு, ஈச்சங்காட்டில் உள்ள ஊர்காவல் படையினருக்கான பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்ட பயிற்சி ஒன்றின்போதே தவறுதலான இக் குண்டு வீச்சு இடம்பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 5-ம் திகதி இவ்வாறு வழங்கப்பட்ட பயிற்சி ஒன்றின் போது உலங்கு வானூர்தியில் இருந்து ஏவப்பட்ட எறிகணை ஒன்று பயிற்சி முகாம் எல்லையினைத் தாண்டி வெளியே வீழ்ந்து வெடித்ததனாலேயே இருவர் காயமடைந்ததாகவும் தெரிவித்துள்ளது.

## கண்டியில் 14 தமிழர்கள் கைது

கண்டியில் தென்னக்கும்பர, லேவல்ல ஆகிய பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட சிறீலங்காப் பொலிசார் 14 தமிழ் இளைஞர், யுவதிகளைக் கைதுசெய்து கொண்டு சென்றுள்ளனர். தென்னக்கும்பர பொலிசாரே இத் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். தொழில் நிமித்தம் அதிகாலைவேளை தென்னக்கும்பரவுக்குச் சென்ற தமிழர்களும் கைதுசெய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

## மலையகத் தமிழர்களுக்கு அடையாள அட்டை வழங்க மறுப்பு

இந்தியக் கடவுச் சீட்டினை 1970-ம் ஆண்டு பெற்றுக்கொண்டார்கள் என்ற காரணத்திற்காக பெருமளவிலான மலையகத் தமிழர்களுக்கு அடையாள அட்டையினை வழங்க சிறீலங்கா அரசு மறுத்துள்ளது. இவர்களது கடவுச் சீட்டுக்கள் பலவருடங்களிற்கு முன்னரே செல்லுபடியற்றதாகிய போதிலும், கடவுச்சீட்டு வைத்திருப்பதைக் காரணம் காட்டி அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொடுப்பதில் சில தோட்ட நிர்வாகங்கள் மறுப்புத் தெரிவித்துள்ளன. அத்துடன் இவ்வாறானவர்களின் பிள்ளைகளுக்குக்கூட அடையாள அட்டைகள் வழங்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

முன்னதாக இப்பிரச்சினையில் சிங்களக் கிராம சேவையாளர்கள் இனவாதக் கண்ணோட்டத்துடன் செயற்படுவதால் இப்பொறுப்பு, பெருந்தோட்ட குடும்பநல மேற்பார்வையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது அவ் அதிகாரிகள் கூட இம் மக்களுக்கு ஒழுங்கான உதவிகளைச் செய்வதில்லை. அடையாள அட்டைகள் இல்லாத காரணத்தினால் இவ் இளைஞர் யுவதிகள் பல பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

## கடற்படையினரின் காவலரண்களும் பாதுகாப்பு வேலிகளும் எரிக்கப்பட்டன

சுழிபுரம், திருவடிநிலை, நெல்லியான் ஆகிய பகுதிகளில் சிறீலங்கா கடற்படையினரால் அமைக்கப்பட்டிருந்த காவலரண்கள் சிலவும் அவற்றைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலிகளும் கடந்த 28-ம் திகதியன்று மாலை வேளையில் இனந்தெரியாதவர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. 4 காவலரண்கள் முற்றாகவே எரியூட்டப்பட்டுள்ளன. அத்துடன் படையினரின் மின் பிறப்பாக்கியும், அதன் இணைப்புக்களும் தீக்கிரையாகியுள்ளன. படையினரின் உயர் பாதுகாப்பு வலையத்தில் இடம்பெற்ற இம் மர்மத் தீ விபத்து குறித்து கடற்படை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விடுதலைப்புலிகள் இக் காவலரண்களை தீமூட்டியதற்கான சாத்தியக்கூறுகளையும் நாம் நிராகரிக்க முடியாதென அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். படையினர் தீயினை அணைப்பதற்கு கடும் முயற்சி எடுத்து பல மணி நேரம் போராடியதாக்வும் தெரிய வருகிறது.

## பாராளுமன்ற உறுப்பினரின் வாகனத்தில் தமிழ் பெண் கடத்தப்பட்டு வல்லுறவு

இரத்தினபுரியைச் சேர்ந்த 19 வயதான தமிழ் இளம்பெண் ஒருவர் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருக்குச் சொந்தமான வாகனமொன்றில் கடத்திச் செல்லப்பட்டு பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மேற்படி பெண் வேலை வாய்ப்புத் தொடர்பான விபரங்களைப் பெறும்நோக்குடன் இரத்தினபுரி நகரில் உள்ள தொழிற்சங்க அலுவலகம் ஒன்றிற்குச் சென்றுகொண்டிருந்த வேளை பாராளுமன்ற உறுப்பினர் வாகனத்தில் வந்த மூன்று நபர்கள் அப்பெண்ணினை அழைத்துச்சென்று மோசமான முறையில் பாலியல் வல்லுறவினை மேற்கொண்டுள்ளனர். வல்லுறவை மேற்கொண்டவர்களுள் சிறீலங்காவின் ரிசேவ் பொலிஸ்காரர் ஒருவரும் அடங்குகின்றார். தற்பொழுது இப்பெண் இறக்குவானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் தனக்கு நேர்ந்த கொடுமையைப் பற்றி விபரிக்கும்போது பாராளுமன்ற உறுப்பினரின் வாகனத்தில் வந்த மூவர் தன்னை இறக்குவானைப் பகுதியில் உள்ள அலுவலகமொன்றிற்குக் கடத்திச்சென்று அங்கு மாறிமாறி பாலியல் வல்லுறவில் ஈடுபட்டதாகத் தெரிவித்துள்ளார்.

## கவசவாகனம் புரண்டது 7 சிப்பாய்கள் காயம்

வவுனியா —கண்டி வீதியில் கடந்த 6-ம் திகதி சிறீலங்கா இராணுவத்தினர் பயணம் செய்த கவச வாகனம் ஒன்று கவிழ்ந்ததில் 7 படையினர் படுகாயமடைந்துள்ளனர். 'ரம்மியா கவுஸ்' இராணுவ முகாமினருகே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. நகருக்கு வெளியே இருந்து நகரினை நோக்கி கவசவாகனம் வந்துகொண்டிருந்தவேளையில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. கிளேமோர் தாக்குதல் அச்சம் காரணமாக, கவசவாகனம் வேகமாக வந்ததாலேயே இவ்விபத்து நிகழ்ந்ததாக விபத்தினைக் கண்ட மக்கள் தெரிவித்துள்ளனர். விபத்து நடந்ததும் அப் பகுதிக்கு வந்த மேலதிக படையினர் பெருஞ் சிரமத்துடன் கவச வாகனத்திற்குள் சிக்கியிருந்தவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்
தமிழ் அச்சகம்
(மக்கள் கடை அருகில்)
இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.
அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.
திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணி வரை
59, Rue Louis Blanc, 75010 Paris - Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42
அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம், அழைப்பிதழ் மாதிரித்தான் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்

# அதிரடிப்படையினரை அதிர வைத்த வேப்பங்குளத் தாக்குதல்

## 14 பேர் பலி; 22 பேர் படுகாயம்

மன்னார்-வவுனியா வீதியில் அமைந்துள்ள வேப்பங்குளப் பகுதியில் சிறீலங்கா அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய கிளேமோர் கண்ணித் தாக்குதலில் அதிகாரிகள் உட்பட 14 படையினர் பலியாகியதுடன், 22 பேர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர். மன்னார் பகுதியில் புதிதாக நிலைகொள்ளவிருந்த அதிரடிப்படைப் பிரிவொன்றே இத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. மன்னார் பாதுகாப்புப் படை வட்டாரங்களில் மட்டுமல்ல, கொழும்பு இராணுவத் தலைமை அலுவலகத்தையே இத்தாக்குதல் அதிர்ச்சியடைய வைத்துள்ளது. இத் தாக்குதல் பற்றி தெரியவருவதாவது:

கடந்த 4-ம் திகதி நண்பகல் அளவில் வவுனியாவில் இருந்து மன்னாருக்கு வேப்பங்குளமூடாக அதிரடிப்படையினரின் அணியொன்று சென்றுகொண்டிருந்தது. ஏற்கனவே அதிரடிப் படையினரின் வருகையினை எதிர்பார்த்து காத்திருந்த விடுதலைப் புலிகள், அவ்விடத்தில் கிளேமோர் கண்ணிவெடியைப் பொருத்தியிருந்தனர். கிளேமோர் கண்ணி பொருத்தப்பட்ட இடத்தினை படையினரின் துருப்புக் காவி வாகனம் ஒன்று கடந்த வேளை, கண்ணிவெடி வெடிக்க வைக்கப்பட்டிருக்கின்றது. கண்ணிவெடித்தாக்குதலுக்கு இலக்கான வாகனம் நிலைகுலைந்து முன்னால் இருந்த மின்கம்பம் ஒன்றுடன் மோதி தடம்புரண்டது. ஸ்தலத்திலேயே 12 படையினர் பலியாகியுள்ளனர். மேலும் இருவர் வைத்தியசாலையில் மரணமாயினர்.

இத்தாக்குதலில் 22 பேர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர். இத் தாக்குதலைப்பற்றி ஆரம்பத்தில் செய்தி வெளியிட்ட சிறீலங்கா இராணுவத் தலைமையக அதிகாரிகள், தற்கொ்லைத் தாக்குதல் ஒன்றின் மூலமாகவே இவ் இழப்புக்கள் ஏற்பட்டதாகக் குறிப்பிட்டிருந்தனர். இத் தற்கொலைத் தாக்குதலை மிதி வண்டி ஒன்றில் வந்த பெண்ணொருவரே மேற்கொண்டதாகவும் அவர்கள் தெரிவித்திருந்தனர். ஆனால் இத் தாக்குதலை அடுத்து பின்னால் வந்த படையினர் மேற்கொண்ட தாக்குதலிலேயே பெண்ணொருவர் கொல்லப்பட, அவரை தற்கொலைத் தாக்குதல் நடாத்தவந்த பெண்ணென சிறீலங்கா இராணுவம் அறிவித்திருந்தது. பலியான படையினரில் இரண்டு அதிகாரிகளும், ஒரு உதவி அதிகாரியும் அடங்குகின்றனர். காயமடைந்த படையினர் அநுராதபுர வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

## ரெலோ முகாமிற்குள் படையினர் துப்பாக்கிப் பிரயோகம்

கடந்த 6-ம் திகதி வவுனியா பட்டானிச்சி புளியங்குளத்தில் இடம்பெற்ற கிளேமோர் தாக்குதலை அடுத்து தமது உறுப்பினர்கள் மீது சிறீலங்கா இராணுவம் தாக்குத்லை நடாத்தியதாக ரெலோவின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

கிளேமோர் தாக்குதலையடுத்து ரெலோ முகாமிற்குள் நுழைந்த படையினர், அங்கு சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டதால் 8 ரெலோ உறுப்பினர்கள் காயமடைந்ததாகவும் அதன்பின்னர் முகாமிலிருந்து ரெலோ உறுப்பினர்களை பலவந்தமாக அழைத்துச் சென்ற படையினர் அவர்களை வீதியில் குப்புறப்படுக்கவைத்து துப்பாக்கிகளால் தாக்கியதாகவும் அடைக்கலநாதன் குறிப்பிட்டுள்ளார். படையினருடன் ஒத்துழைக்காதமையாலேயே தம்மீது தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் இவர் தெரிவித்துள்ளார். கிழக்கில் ரெலோ உறுப்பினர்கள் படையினருடன் இணைந்து பல அடாவடித்தனங்கள் செய்துவரும் இவ்வேளை, வவுனியாவில் தாம் படையினருடன் ஒத்துழைக்கவில்லை என அடைக்கலநாதன் தெரிவிப்பது வேடிக்கையானதென கொழும்பு செய்தி நிறுவனமொன்று தெரிவித்துள்ளது. வவுனியாவில் நடாத்தப்பட்ட தாக்குதல் பற்றி வன்னிப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவிற்கு தான் முறையீடு செய்ததாகவும் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

## அடுத்தது மாவை?

குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட, சிறீலங்காப் பாராளுமன்றத்தின் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கான தேசியப் பட்டியில் உறுப்பினர் நீலன் திருச்செல்வத்தின் இடத்திற்கு அடுத்ததாக மாவை சேனாதிராசாவை நியமிப்பதென கூட்டணியின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ஆயினும் மாவை சேனாதிராசா இந்நியமனத்தை ஏற்றுக்கொண்டாரா இல்லையா என்பது பற்றி உறுதிபட தெரிவிக்கப்படவில்லை.

கடந்த 6-ம் திகதி கொழும்பில் கூட்டணியின் செயற்குழு கூடியபோது இம் முடிவினை கூட்டணியின் உபதலைவர்களில் ஒருவரான ஆனந்த சங்கரி அறிவித்துள்ளார்.


## உங்கள் தலைமுடி உதிர்கின்றதா? கவலை வேண்டாம் இதோ ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு

தலைமுடி உதிர்வு, கணைவெடிப்பு, இளநரை, மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம் போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!

இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வை தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.

இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.

**Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.**

இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.

எமது புதிய தயாரிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் சர்மம் பளபளப்புத் தன்மையையும், ஆரோக்கியமான தோலினையும், பலமான நகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது Naturina®தயாரிப்புக்களான கூட்டுக்குளிகைகள், ஷம்பு, கூந்தல் தைலம் (Capsules. Shampoo, Hair tonic) ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக பயன்படுத்தினால் பய்ன் நிச்சயம்.

***இன்றே பாவியுங்கள் Naturina® உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்!***



எமது ஸ்தாபனத்தின் தயாரிப்புக்களை உபயோகித்து பலன் பெற்றோர் கூறுவதைக்கேட்டு நீங்களும் பயன்பெறுங்கள்.

இப்பொழுது ஜேர்மனி, பிரித்தானியாவிலுள்ள Naturina® முன்னணி மருந்தகங்களிலும் (Apotheke) கிடைக்கும்




**சுவிற்சலாந்திலிருந்து: திரு. ராஜன்.**
*நான் இந்த Naturina® தயாரிப்புக்களைக் கடந்த 3 மாதங்களாகப் பாவித்து குறுகிய காலத்தில் எனது தலைமயிர் உதிர்வைக் குறைத்துக்கொண்டேன்.*

**டென்மார்க்கிலிருந்து: திருமதி துரைராஜா.**
*நான் Naturina® மாத்திரைகளைப் பயன்படுத்தி எனது தோல் பிரச்சினைகளையும் நக அழகையும் பேணிக்கொண்டுள்ளேன்.*

**இங்கிலாந்திலிருந்து: திருமதி ரேணுகாதேவி.**
*இந்த Naturina® தயாரிப்புக்களைப் பற்றி பத்திரிகையில் படித்தபோதும் அதன் பிரதி பலன்களை நான் முழுமையாக நம்பவில்லை. இருந்தும் இவற்றை பயன்படுத்தியதில் முழுப் பலனையும் அடைந்துள்ளேன்.*

மேலதிக விபரங்களுக்கு:
**Intercare Handels GmbH**
Munster str 5, 59065 Hamm-Germany
Tel: 0049 2381 688347 / Fax: 0049 2381 688349 (நாம் தமிழும் கதைப்போம்)
Internet: http://www.intercare-naturina.com

பிரித்தானிய தொடர்புகளுக்கு:
Tel: 0171-5150550
Mobil: 07930-471356

# நீலனுக்கான புகழாரங்கள் வெளிப்படுத்தும் விடயங்கள்

இந்தியாவிலிருந்து வெளியிடப்படும் இந்து நாளிதழில், குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்ட நீலன் திருச்செல்வத்தின் நண்பரான கலாநிதி ஜயதேவஉயன்கொட அவர்கள் எழுதிய கட்டுரையொன்றில் நீலன் திருச்செல்வத்தின் மரணம் குறித்து அவர் குறிப்பிடும்பொழுது, நீலன் ஒருசில நிமிடங்களிலேயே துன்பத்தினை அனுபவித்து மரணத்தைப் பெற்றுக்கொண்டார். ஆனால் சிறீலங்காவின் புதல்வர்களாகிய நாமோ நீண்ட காலத்துன்பத்தின்ன அனுபவிக்கப்போகின்றோம் என அவர் சுட்டிக்காட்டியிருந்தார். சிறீலங்கா மக்களைப் பொறுத்தவரை உயங்கொட அவர்களின் கூற்று சரியானதென்றுதான் கூறவேண்டும். தமிழர்களுடைய தேசியப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கப்படும்வரையில் ஒவ்வொரு சிங்களக் குடிமகனின் வாசல்கதவினையும் துன்பங்கள் தட்டிக்கொண்டிருக்கும் சூழ்நிலைதான் இருக்கமுடியும். 80-களின் ஆரம்பத்தில் வேண்டுமானால் சிங்கள மக்கள் தமிழர்கள் மீதான அரசுகளின் கொடுமைகளுக்குத் துணைபோவதில்லையெனக் கூறிக்கொள்ளலாம். ஆனால் இன்று நிலைமை அவ்வாறில்லை. ஒவ்வொரு சிங்களக் குடிமகனுக்கும் தமிழர்களின் பிரச்சினையின் வடிவம் நன்றாகவே தெரியக்கூடிய சாத்தியக்கூறுகள்தான் உண்டு. பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டுமென ஒட்டுமொத்தமான சிங்கள இனம் நினைத்தால் தேர்ந்தெடுக்கப்படும் அரசுகளுக்கு அவர்கள் ஏன் அழுத்தத்தினைக்கொடுக்கமுடியாது என்றொரு வாதம் எழுமல்லவா? அடிப்படையில் பெரும்பாலான சிங்கள மக்களுக்கு தமிழர்களுக்கான உரிமை கொடுக்கப்படவேண்டும் என்பதில் விருப்புக்கிடையாதென்ற நிலையைத்தான் தற்பொழுது காணக்கூடியதாக இருக்கிறது. தமிழர் தாயகத்தின்மீது தமது அரசுகள் விதிக்கும் பொருளாதார மருத்துவத் தடைக்கெதிராகக்கூட எத்தனை சிங்களக் கரங்கள் எழுந்தன என்பதைக்கூட நாம் ஒரு உதாரணமாகக் காட்டலாம். ஆகவே உயன்கொட அவர்கள் கூறியதுபோல தமிழர் தாயகத்தின் வாழ்வியல் உரிமையானது அச்சுறுத்தல் இல்லாமல் பேணப்படும்வரை சிங்கள மக்களுக்கும் நிம்மதி கிடைக்கமாட்டாது.

நீலன் திருச்செல்வம் அவர்களின் மரணத்தை அடுத்து தான் விரும்பியோ விரும்பாமலோ சிங்களத் தரப்பினர் தமக்கு நீலன் செய்த காரியங்களை நாளாந்தம் வெளிப்படுத்தி வருகின்றனர். சிங்களத் தரப்பு கொல்லப்பட்டவருக்கான புகழாரமாக இதனைச் சூட்டச் சூட்ட கூட்டணியினரோ எல்லா குட்டும் வெளிப்பட்டுவிட்டதே என்ற ஆற்றாமையினால் கைகளைப் பிசைந்து கொண்டிருக்கின்றனர். சிங்கள தரப்பினரின் இப் புகழாரங்கள் கூட ஒரு விதத்தில் நன்மையைத் தான் கொடுத்துள்ளது. இப்புகழாரங்கள் மூலமாக கூட்டணியினர் தமிழர் தாயகத்திற்குச் செய்த கைங்கரியத்தினை பாமரத் தமிழ் குடிமகன் முதல் புத்திஜீவிகள் வரை தெளிவாகவே அறிந்துகொண்டுள்ளார்கள். சந்திரிகா அரசின் குறைகேள் முறைமை, தொல்லைத் தவிர்ப்பு போன்ற சட்டமூலங்களிலும் நீலனின் முக்கிய பங்களிப்பு இருந்ததினை அரசின் முக்கிய பிரமுகர்கள் தற்பொழுது வெளிப்படுத்தியுள்ளனர். எதிர்வரும் 19-ம் திகதி சிறீலங்காப் பாராளுமன்றத்தில் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ள அரசியலமைப்புச் சீர்திருத்த மசோதாவின் உருவாக்கத்திற்கும் நீலனின் மிகக் கணிசமான பங்களிப்பு இருந்ததாக அரச தரப்பினர் ஒத்துக்கொண்டுள்ளார்கள்.



ஐ.தே.கவின் அரசுக்கெதிரான போராட்டம்

> சிங்களத் தரப்புகொல்லப்பட்டவருக்கான புகழாரமாக இதனைச் சூட்டச்சூட்ட கூட்டணியினரோ எல்லா குட்டும் வெளிப்பட்டுவிட்டதே என்ற ஆற்றாமையினால் கைகளைப் பிசைந்துகொண்டிருக்கின்றனர்.

ஆகமொத்தம் நீலன் திருச்செல்வம் கூட்டணியில் அங்கம் வகிப்பதாக இருந்தாலும் சந்திரிகாவின் அமைச்சரவையில் ஒரு முக்கிய அமைச்சரைப் போலத்தான் அவரது பொறுப்புக்கள் இருந்தன என்பதையும் மறுக்கமுடியாது.

நீலனின் மரணத்தால் பொதுஜன ஐக்கிய முன்னணியினர் கொஞ்சம் ஆடித்தான் போயிருக்கின்றார்கள். எதிர்வரும் 19-ம் திகதி பாராளுமன்றத்திலே அரசியல் அமைப்புச் சீர்திருத்த மசோதா கொண்டுவரத் திட்டமிட்டவேளையில் நீலன் கொல்லப்பட்டது அவர்களுக்கு அதிர்ச்சியினை அளித்துள்ளது. எனவே கொண்டுவரப்படும் இந்த மசோதா குறித்து ஜி.எல். பீரிஸ் தமிழ்க்குழுக்களின் ஆதரவினைப் பெறுவதற்கு முயற்சிசெய்து வருகின்றார். இதுகுறித்து அவர் கூட்டணியின் சம்பந்தன், புளொட் சித்தாத்தன், தொண்டமான் ஆகியோருடன் பேச்சுக்களை ஏற்கனவே நடத்தியிருக்கின்றார். ஆனால் இக் கூட்டத்தின்போது தீர்வுப் பொதி தொடர்பான விடயங்களும் அலசப்பட்டுள்ளன. விரைவில் கொண்டுவரப்படவிருக்கும் தீர்வுப்பொதிக்கு முன்னோடியாகத்தான் இவ் அரசியலமைப்பு சீர்திருத்த மசோதா அமைகின்றது. இதன்மூலம் தீர்வுப்பொதிக்கான ஆதரவினை நாடிபிடித்துப்பார்ப்பதுதான் அரசின் திட்டம். ஆனால் அரசிற்கு ஒரு விடயம் இந்தவேளை நன்றாகவே தெரியும். அதாவது தீர்வுப்பொதிக்கான ஆதரவு ஐக்கியதேசியக்கட்சியினரிடமிருந்து கிடைக்காத பட்சத்தில் ஐக்கியதேசியக் கட்சியினரை தமிழருக்கு எதிரான கட்சியாகக் காட்டிக்கொண்டு அதே வேளை தீர்வுப்பொதியினை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்களால் அதனைத் தம்மால் நிறைவேற்றமுடியவில்லை எனவும் போலிக்கண்ணீர் வடித்தும் கொள்ளலாம் என்பதுதான் அரசின் உள்நோக்கம். ஆனால் இவற்றையெல்லாம் விளங்கிக்கொள்ளாத தமிழ் குழுக்கள் இன்னமும் சந்திரிகாவினை தமிழர்களுக்கு நியாயம் தரும் ஒரு சக்தியாகத் தான் கருதிவருகின்றனர்.

இது ஒருபுறமிருக்க எதிர்வரும் 11-ம் திகதி அன்று நீதி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஐக்கிய தேசியகட்சியினரைச் சந்தித்து பேச்சுக்களை நடாத்த உள்ளார். இப் பேச்சுக்களின்போது உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்த மசோதா, தீர்வுப்பொதி தொடர்பான விடயங்களும் அலசப்படவுள்ளன. ஆனால் ஐக்கியதேசியக் கட்சியினர் இன்றைய நிலையில் தீர்வுப்பொதி பற்றிப் பேசுவதினை விரும்பவில்லை. அவர்களுக்கு அரசினை கவிழ்க்கவேண்டும் என்பதுதான் தற்பொழுது குறியாக இருக்கின்றது. அதனால்தான் அரசிற்கெதிரான போராட்டங்களை அவர்கள் முடுக்கிவிட்டுள்ளனர். முன்னதாக சந்திரிகாவின் நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்கக்கோரி போராட்டம் நடாத்திய ஐ.தே.கட்சியினர் இன்று அரசிடம் ஊழல் மலிந்துவிட்டதாகக்கோரி அதற்கெதிரான போராட்டங்களை நடாத்த ஆரம்பித்துள்ளனர். ஐ.தே.கட்சியினரின் இப் போராட்டத்திற்கு பதிலடி நடவடிக்கைகளையும் சந்திரிகா ஆரம்பித்துவிட்டார். கடந்தவாரம் லஞ்ச ஆணையாளர் அலுவலகத்திற்கு முன்னால் ஐ.தே.கட்சியினர் 48 மணிநேர சத்தியாக்கிரகத்தினை நடாத்தியதையடுத்து சந்திரிகா அதிரடியாக ஒரு அறிவிப்பினை அறிவித்தார். அதாவது லஞ்ச ஆணையாளர் பதவிக்கு தாமே பொறுப்பு என அறிவித்த அவர் பொதுமக்கள் ஊழல், லஞ்சம் தொடர்பான தமது முறைப்பாடுகளைத் தமக்கு நேரடியாகத் தரலாம் எனக்கூறி அதற்கென ஒரு தொலைநகல் இலக்கத்தினையும் அறிவித்தார். ஆனால் சந்திரிகாவின் இந்த அதிரடி நடவடிக்கை குறித்து ஐக்கியதேசியக் கட்சியினர் சட்டப்பிரச்சினைகளைக் கிளப்பியுள்ளனர். நாட்டில் நிரந்தரமாகவே லஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணையக அலுவலகமொன்று இருக்கும்போது ஜனாதிபதிக்கு இப்பிரச்சினைகள் தொடர்பாக விசாரணை செய்ய சட்டப்படி அதிகாரம் இல்லை என்பதே அவர்களது கருத்து. தீர்வுப்பொதிக்கு ஐ.தேகட்சியினர் மட்டும் தான் எதிர்ப்பு என்றில்லை பொதுஜன ஐக்கிய முன்னணியின் அமைச்சரவையில் உள்ள சுமார் 10 அமைச்சர்கள் தீர்வுப்பொதிக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக கொழும்பில் பேச்சுக்கள் அடிபடுகின்றன. சிறீலங்கா சுதந்திரக்கட்சியில் அங்கம் வகிக்கும் சிங்கள பேரினவாதப்போக்குடைய அமைச்சர்களே இவர்களில் பெரும்பாலானவர்கள் எனவும் கூறப்படுகிறது. 94-ம் ஆண்டு சந்திரிகாவின் தலைமைத்துவத்தில் இச் சிங்கள கடும்போக்காளர்கள் ஓரளவு அடங்கியிருந்தாலும் தற்பொழுது அவர்கள் மீண்டும் வீச்சான பேரினவாதப்போக்கோடு எழுந்துள்ளார்கள். தற்பொழுது இது சந்திரிகாவிற்கு ஒரு நெருக்கடிநிலை தான். உள்ளூர அவருக்கும் தீர்வுப்பொதியில் விருப்பமில்லாவிடிலும் சர்வதேச அரங்கில் தான்போடும் சமாதானப் புறா வேடத்திற்கு இச் சிங்களக் கடும்போக்காளார்கள் வேட்டு வைப்பதாகவே அவர் கருதுகிறார். எனவே சிங்களக் கடும்போக்காளர்களையும் தனது வழிக்கு இழுப்பதுதான் சந்திரிகாவின் நோக்கம். ஆனால் அதில் அவர் வெற்றிபெறுவாரா தோல்வியைத் தழுவுவாரா என்பது இனிமேல்தான் தெரிய வரும்.

இது ஒருபுறமிருக்க தற்பொழுது சிறீலங்காவின் தென்பகுதியில் பொதுக்கூட்டங்களை நடாத்திவரும் ஐக்கியதேசியக் கட்சியினர் மக்களிடம் கேள்விக் கொத்தொன்றினைச்

> ஆனால் ஐக்கியதேசியக் கட்சியினர் இன்றைய நிலையில் தீர்வுப்பொதி பற்றிப் பேசுவதினை விரும்பவில்லை. அவர்களுக்கு அரசினை கவிழ்க்கவேண்டும் என்பதுதான் தற்பொழுது குறியாக இருக்கின்றது.

சமர்ப்பித்து அதற்குப் பதில்களைச் சேகரித்து வருகின்றனர். ஐக்கியதேசியக் கட்சி தொடர்பாக மக்கள் கொண்டிருக்கும் உள்ளக் கிடக்கையை அறிவது தான் இக்கேள்விக்கொத்துக்களின் நோக்கம் எனக் கூறப்பட்டாலும் எதிர்வரும் தேர்தல்களின்போது ஆட்சியினைக் கைப்பற்றுவதற்கமைவாகவே இக்கேள்விக்கொத்துக்கள் அமைகின்றன என்றுதான் கூற முடியும். தான் கலந்துகொள்ளும் கூட்டங்களில் எல்லாம் கலந்துகொள்ளும் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க

**பேம்பி**

ஒருவிடயத்தினை மட்டும் திரும்பத்திரும்ப கூறிவருகிறார். அதாவது இனப்பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கப்படும் எந்தவொரு விடயமானாலும் அத்தீர்வு ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு அமைவாகவே இருக்கவேண்டும் என்பதே அவரது கணிப்பு. அதாவது அவரது கூற்று தமிழ் மக்களுக்கு பூரண சுயாட்சியினை வழங்குவதற்கு ஐக்கியதேசியக் கட்சி ஒரு போதும் விரும்பவில்லை என்பதையே காட்டுகிறது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாத்திரமல்ல பெரும்பாலான சிங்களக் கட்சிகள் நிலையும் இதுவே தான்.

# சிறீலங்காவின் மனோ பலத்தைத் தகர்த்த கின்ஸி வீதியும் வேப்பங்குளமும்

சிறீலங்காவின் யுத்த களத்தின் நிலைமை மீண்டும் அமைதியான ஒரு நிலையை அடைந்துள்ள வேளை, சிறீலங்கா தனது பாதுகாப்புப் பிராந்தியம் எனக் கூறிக் கொள்ளும் பிராந்தியங்களில் எதிர்பார்த்திராத வேளையில் சில சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவை நிச்சயமாக சிறீலங்காவின் மனோ பலத்திற்கு சவால் விடுத்துள்ள விடயங்கள் தான் என்பதில் சந்தேகமில்லை.




கலாநிதி நீலன் கொழும்பில் தற்கொலைக்குண்டுதாரி ஒருவரின் தாக்குதலில் கொல்லப்பட்டு நான்கு நாட்கள் சென்ற போது, வேப்பங்குளம் பகுதியில் சிறீலங்காவின் விசேட பாதுகாப்பு படையணி தாக்கியழிக்கப்பட்டது. இது நடந்து மேலும் மூன்று நாட்களில், அதே பகுதியில் அதேமுறையில் மற்றுமொரு குண்டுத் தாக்குதல். இச் சம்பவங்கள் நடந்தது, சிறீலங்காவின் பாதுகாப்பு அதிகமான பகுதிகளில் என்பதுவும் அடிக்கடி இரா்ணுவ பொலிஸ்வாகனங்கள் பயணம் செய்யும் பகுதி இது என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் அதிஉயர் பாதுகாப்பு ஏற்பாடுகள் கொண்ட அதுவும், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் உள்ள பிராந்தியத்தில் எப்படி தற்கொலைக்குண்டுதாரி புகுந்தார் என்பதுவும், மிகவும் அதிகமான பாதுகாப்புடன் பொலிஸ் காவல் அணியுடன் செல்லும் நீலன் மேல் எப்படி தாக்குதலை நடத்த அவர் துணிந்தார் என்பதுவும் சிறீலங்கா அரசிற்கு புரியாத புதிராகவே உள்ளது. அதேபோல் வன்னியில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை பாதுகாப்புப் பிரதானிகளுடன் ரணகோச நடவடிக்கைகள் குறித்த பேச்சுக்களை மேற்கொண்டு சரியாக 24 மணிநேரத்தில் முதலாவது வேப்பங்குளத் தாக்குதல் நடந்துள்ளது என்பதும், எடிபல இராணுவ நடவடிக்கையின் மூலம் சிறீலங்காப் படைகள் ஏற்கனவே கைப்பற்றியிருந்த வவுனியா—மன்னார் வீதியிலேயே இக்குண்டுத்தாக்குதல் நடந்தது என்பதுவும்கூட சிறீலங்கா அரசினால் நினைத்தே பார்த்திருக்க முடியாத ஒரு நிகழ்வாகும். அத்துடன் முதலாவது தாக்குதல் நடந்த பகுதியில் 500 மீற்றர் தூரத்தில் அதே பாணியிலான தாக்குதல் நடத்தப்பட்டது என்பதும் சிறீலங்காவின் பாதுகாப்பு கட்டமைப்பை அதிரவைத்த நிகழ்வாகும்.

கொழும்பில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுக்கு யார் காரணமானவர் என்பது முக்கியமல்ல. அது யார்மேல் நடத்தப்பட்டது; எங்கு நடத்தப்பட்டது என்பதுதான் முக்கியமானவை. கொழும்பில் தற்கொலைக் குண்டுதாரிகள் நுழைந்துள்ளனர் என்று சிறீலங்காவின் உளவுத்துறை ஏற்கனவே எச்சரித்திருந்தது. அத்துடன் முன்னெச்சரிக்கையாக பலர் கைதுசெய்து தடுத்தும் வைக்கப்பட்டனர். இவர்தான் குண்டுதாரி என ஒரு பெண்ணின் படமும் பிரசுரமாகியிருந்தது. இப்படியான நிலையில் ஒரு இளைஞன் தாக்குதலில் ஈடுபட்டுள்ளதானது, தலைநகரில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளின் குறைபாடுகளையும் உளவுத்துறையினரின் இயலாமையையுமே காட்டுவதாக இராணுவ ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள். நீலன் திருச்செல்வம் தாக்குதலுக்கு உள்ளானதன்பின் பாதுகாப்புப் பிரதானிகளின் அவசர மாநாடு ஒன்று கொழும்பில் கூட்டப்பட்டது. அதன்போது சிறீலங்காவின் இரகசிய உளவுப் பிரிவுகளின் தலைவர்கள் கடும் கண்டனத்துக்கு ஆளானார்கள். அத்துடன் நீலன் திருச்செல்வத்தின் வழமையான பயணத்துக்கு பாதுகாப்பு வழங்கும் பொலிஸ் விசேட பிரிவினரின் நடவடிக்கைகள்கூட விமர்சனத்துக்குள்ளானது. அவரது வாகனத்துக்கு முன்பும் பின்பும் ஆயுதபாணிகளாக பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்புக்குச் சென்றபோதிலும் சம்பவம் நடந்தபோது இந்த பாதுகாப்பு அணிகளுக்கு எதுவுமே நடக்கவில்லை. அத்துடன் நீலனின் வாகனம் வருவதை அவதானித்தபடி நின்ற குண்டுதாரி இளைஞன் சாவகாசமாக அவரது வாகனத்தை அணுகியுள்ளார். இதனையும் பாதுகாப்புப் பிரிவினர் அவதானித்துள்ளனர்.

ஆனால் உடனடி நடவடிக்கை எடுக்க அவர்கள் தவறிவிட்டனர் என்றும் இது நீலனின் பாதுகாப்புப் பிரிவினரிடம் மட்டும் உள்ள அசமந்த நிலை அல்ல எனக் கூறும் பாதுகாப்புப் பிரதானிகள், கொழும்பில் முக்கிய பிரமுக்ர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சகல பாதுகாப்பு அணிகளுமே இப்படித்தான் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எப்படியிருந்தபோதிலும் அதிஉயர் பாதுகாப்பு பிராந்தியத்திற்குள் நடத்தப்பட்ட இத் தாக்குதலை சிறீலங்கா எதிர்பார்த்திருக்கவில்லை. எப்படித்தான் பாதுகாப்பை பலப்படுத்தி தனது மக்களின் மனோபலத்தினை திருப்திப்படுத்த சிறீலங்கா முனைந்தாலும், இப்படியான தாக்குதல்கள் எப்படியும் தொடரத்தான் போகின்றனவோ!

கொழும்பில் நீலனின் குண்டுத் தாக்குதல் நடந்து சில தினங்களில் சுமார் 200மைல்கள் தூரத்தில் மற்றுமொரு பேரிடியாக வேப்பங்குளத்தொடர் தாக்குதல்கள் அமைந்தன. எடிபலவின் மூலம் தாம் கைப்பற்றிக்கொண்ட வவுனியா—மன்னார் வீதியில் இராணுவ பொலிஸ் அணித் தொடரொன்று சென்றுகொண்டிருந்தது. இதில் முதலில் இராணுவ விசேட அணியினரின் இரண்டு ட்ரக் வாகனங்களும் அதனையடுத்து மூன்று பொலிசாரின் மூன்று ட்ரக் வாகனங்களும் சில ஜீப் வண்டிகளும் சென்றுகொண்டிருந்தன.

லீவிற்கு வீடுசென்று, வேலைக்கு மீண்டுகொண்டிருந்த பொலிஸ், இராணுவ அதிகாரிகளும் அரச சேவை அதிகாரிகளும் இதில் பயணம் செய்து கொண்டிருந்தனர். தாக்குதலுக்கு உள்ளான இரு ட்ரக் வாகனங்களிலும் 36 இராணுவ அதிகாரிகள் இருந்தனர். இவை தொடரின் இறுதியில் சென்றுகொண்டிருந்தன என்றும் சொல்லப்படுகிறது. இந்த வீதியில் தினமும் பல தடவைகள் இராணுவ வாகனங்கள் சென்றுவருவது வழக்கம் என்றும் அன்றைய தினமும் மதியம் 12.10 அளவில் வேகமாக சென்றுகொண்டிருந்த இவ்வாகனத் தொடரின் இறுதிப்பகுதிமேல் மிகப் பலத்த சத்தத்துடன் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும், தங்களது பாதுகாப்பிற்கு உட்பட்ட பிராந்தியம் என்பதாலும் அதிலும் பட்டப்பகலில் மதியத்தில் இப்படியான தாக்குதலை எதிர்பார்த்திராத இராணுவத்தினர் அதிர்ந்து போயினர். முன்னர் சென்று கொண்டிருந்த வாகனங்கள் உடனடியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி மீண்டும் திரும்பியபோது ஒரு ட்ரக் முற்றாக சிதைவடைந்தும் மற்றொன்று சேதமடைந்தும் போயிருந்தன. ஏராளமான விசேட இராணுவ அணியினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டும், எஞ்சியோர் படுகாயமடைந்த நிலையில் அருகில் உள்ள பகுதிக்குள் ஓடிமறைந்து கொண்டனர். சம்பவம் நடந்த இடத்தில் ஒரு துவிச்சக்கர வண்டி கிடந்ததாயும் அருகே ஒரு வயோதிபமாது இறந்து கிடந்ததாயும் கூறப்படுகிறது. முதலில் இதுவும் தற் கொலைத் தாக்குதல் என பாதுகாப்புத் துறையினர் கூறியபோதிலும், அன்று மாலையே இது கிளைமோர் குண்டுத்தாக்குதல் என உறுதிசெய்யப்பட்டது. அதுவும் ரிமோட் கருவியொன்றின் மூலமே இக்குண்டு வெடிக்க வைக்கப்பட்டுள்ளது என்றும் இத்தாக்குதலின் பின் தொடர்ச்சியாக தாக்குதல்களை மேற்கொள்ளாது விடுதலைப் புலிகள் விலகிவிட்டார்கள் என்றும், பாதுகாப்பு வட்டாரம் தகவல் கூறியது. இந்தத் தாக்குதலில் 14 விசேட படையினர் கொல்லப்பட்டனர்; 22 பேர் படுகாயமடைந்தனர். இதில் நானாட்டான் விசேட படைப்பிரிவுப் பொறுப்பாளரும் அடங்குவார். சரி புலிகளால் ஒரு முறைதானே இங்கு ஊடுருவித் தாக்கமுடியும் என பாதுகாப்பு அதிகாரிகள் கூறிக் கொண்டிருக்க, அதே பகுதியில் 500 மீற்றர் தூரத்தில் அதே வழியில் அதே பாணியிலான தாக்குதல். இதில் 7 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்று உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

**சரி புலிகளால் ஒரு முறைதானே இங்கு ஊடுருவித் தாக்கமுடியும் என பாதுகாப்பு அதிகாரிகள் கூறிக் கொண்டிருக்க, அதே பகுதியில் 500 மீற்றர் தூரத்தில் அதே வழியில் அதே பாணியிலான தாக்குதல்.**

இந்த இரண்டு தாக்குதல்கள் மட்டுமன்றி யாழ்குடாவில்; மட்டக்களப்பு நகர்ப்பகுதியிலும் இராணுவ பாதுகாப்புப் பிராந்தியத்திற்குள் சில இராணுவ நடவடிக்கைகள் புலிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு அதிர்ச்சியில் இருந்து மீளமுன் அடுத்த அதிர்ச்சி! இப்படி அடுத்துவரும் வாரங்கள் எத்தனை அதிர்ச்சி வைத்தியங்களை சிறீலங்காவிற்கு தோற்றுவிக்கப் போகின்றதோ?


## ஆசிரியர்கள் தேவை

பின்வரும் பாடங்களுக்கு ஆசிரியர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

- கம்பியூட்டர் பயிற்சி நெறி (Cours d' informatique)
- கணிதம், பௌதீகம், இரசாயனம் (Collège, Lycèe)
- பரதநாட்டியம், வயலின்,
- வாய்ப்பாட்டு (கர்நாடக சங்கீதம்)
- ஓவியம்-வரைதல் (Cours d'art de dessine)

தகமையும்—அனுபவமும் உள்ள, தமிழ்—பிரெஞ்சு கற்றறிந்த ஆசிரியர்கள் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

**Centre d'Insertion et d'Information des Tamouls**

தமிழர் வித்தியாலயம்

**75, Rue Philippe de Girard, 75018 Paris.**

ச.சச்சிதானந்தம் மாஸ்ரர்

# இந்திய தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளும் அவற்றின் சின்னங்களும்:

## தேர்தல் ஆணையம் வெளியிட்டது

(07-08-99)

மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் தேர்தல் சின்னங்களை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இந்திய அளவில் 6 கட்சிகளும், மாநில அளவில் 59 கட்சிகளும் அங்கீகரிக்கப்பட்டு அவற்றின் சின்னங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதேவேளையில் கட்சியாக பதிவு செய்து அங்கீகாரம் பெறாமல் 657 கட்சிகள் உள்ளதாகவும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தமிழ்நாட்டிலும், புதுவை மாநிலத்திலும் அங்கீகரிக்கப்பட் கட்சிகளின் விபரமும் சின்னங்களும்:

**அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் - இரட்டை இலை**

**திராவிட முன்னேற்றக் கழகம் - உதயசூரியன்**

**மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் - பம்பரம்**

**தமிழ் மாநில காங்கிரசு - சைக்கிள்**

**பாட்டாளி மக்கள்கட்சி - மாங்கனி**

இந்திய அளவிலான கட்சிகள்.

**பகுஜன் சமாஜ் - யானை**

**பாரதீய ஜனதா - தாமரை**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி - கதிர், அரிவாள், சுத்தியல்.**

**இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி - அரிவாள், சுத்தியல், நட்சத்திரம்.**

**இந்திய தேசிய காங்கிரஸ் - கை**

**ஜனதா தளம் - சக்கரம்**

ஜனதா தளக் கட்சி சரத்யாதவ் தலைமையிலும், தேவகௌடா தலைமையிலும் உடைந்தது. இரு அணிகளும் தேர்தல் ஆணையத்திடம் சக்கரச் சின்னத்தைக் கேட்டு, தமது ஆதாரங்களை தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பித்தன. இதனை விசாரித்த தேர்தல் ஆணையர், சக்கரம் சின்னம் எந்த அணிக்கும் ஒதுக்கப்படாமல் இந்த தேர்தலில் முடக்கி வைக்கப்படும் என அறிவித்துள்ளார். இதேபோன்று சரத்பவார் தலைமையிலான தேசியவாதி காங்கிரசுக்கு ராட்டைச் சின்னம் ஒதுக்க முடியாது என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. சரத்பவாருக்கு கடிகாரம் சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது.

# திமுக கூட்டணியில் சிக்கல் மதிமுக விலகுமா ?

(07-08-99)

நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில் திமுக தலைமையிலான கூட்டணி அமைக்கப்பட்டு தொகுதிப் பங்கீடுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி தமிழ்நாடு - புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளில் திமுக 18 தொகுதிகளிலும், வாழப்பாடி ராமமூர்த்தியின் தமிழ்நாடு ராஜீவ் காங்கிரசும் உள்ளிட்டதான பாட்டாளி மக்கள் கட்சிக்கு 9 தொகுதிகளும், பாரதிய ஜனதாக் கட்சிக்கு 6 தொகுதிகளும், எம்.ஜி.ஆர் அதிமுகவுக் 1 தொகுதியும், எம்.ஜி.ஆர் கழகத்திற்கு 1 தொகுதியும் ஒதுக்கப்பட்டுள்ளன. வைகோ தலைமையிலான மதிமுகவுக்கு 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன.

பாட்டாளி மக்கள் கட்சிக்கு ஒதுக்கிய அளவில் தமக்கும் ஒதுக்க வேண்டும் எனக் கோரி, இதை ஏற்பதற்கு முதலில் தயங்கிய வைகோ, பின்னர் வாஜ்பாய், அத்வானி போன்றோர் மேற்கொண்ட சமரசத்தின் அடிப்படையில் ஏற்றுக் கொணடார். ஆனால் தற்போது தொகுதி உடன்பாட்டில் கையெடுத்திடுவதற்கு புதிய நிபந்தனையை வைகோ அறிவித்துள்ளார். திருநெல்வேலி, திருச்செந்தூர், தஞ்சாவூர், திருச்செங்கோடு ஆகிய நான்கு தொகுதிகளில் இரண்டு தொகுதிகளை எங்களுக்கு விட்டுக்கொடுத்தால் உடனேயே தொகுதி உடன்பாட்டில் கையெழுத்தி தயாக இருக்கிறோம் எனக் கூறியுள்ளார். ஆனால் மதிமுக கேட்கும் இரண்டு தொகுதிகளை தர இயலாது என்ற திமுக தலைவர் கருணாநிதி அறிவித்துள்ளார். இந்நிலைமை கூட்டணிக்குள் சிக்கலைத் தோற்றுவித்துள்ளது.

# இந்தியச் செய்திகள்

## எலிசபெத் திரைப்படம் இந்திய தணிக்கைக்குழு அனுமதிக்குமா?

(07-08-99)

பிரபல இந்திப் பட இயக்குநர் சேகர்கபூர், பதினாறாம் நூற்றாண்டில் பிரிட்டன் இராணியாக இருந்த முதலாம் எலிசபெத் பற்றிய ஆங்கிலத் திரைப்படத்தை இயக்கியுள்ளார். எலிசபெத் எனும் அந்த ஆங்கிலப் படம் சர்வதேச அளவில் புகழ் பெற்றுள்ளது. சர்வதேச அளவில் புகழ் பெற்றுள்ள சேகர் கபூருக்கு ஆங்கில படங்களை இயக்கும் வாய்ப்புகள் குவிந்த வண்ணம் உள்ளன. வெளிநாட்டில் புகழைக் குவித்துள்ள இந்தப்படம் இந்தியாவில் அப்படியே திரையிட ஏற்றதல்லவென்றும், படத்தில் மூன்று பகுதிகளை வெட்ட வேண்டும் என்றும் தணிக்கைக் கருதியுள்ளது. இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தார் சேகர் கபூர். தணிக்கைக் குழுவின் மறுபரிசீலனைக்கு இந்தப்படம் உட்படுத்தப்பட்டது.

இந்தப் படம் இந்தியாவில் திரையிடப்படுவதற்கு அந்த மூன்று பகுதிகளும் வெட்டப்பட வேண்டியது அவசியம் என்று மறுபரிசீலனைக் குழு கூறியுள்ளது.

இதுபற்றி கருத்து தெரிவித்த சேகர் கபூர் 'உலகிலுள்ள மற்ற நாட்டு மக்களைவிட இந்தியர்களுக்கு மனப்பக்குவம் இல்லை என்று தணிக்கைக் குழு கருதுகின்றதென்றால், நான் அவர்களுடைய பெரும் புத்திசாலித்தனத்திற்கு அடிபணிகிறேன். இந்தப் படத்திற்கு 'ஏ' சான்றிதழ் வழங்கவும் ஒப்புக்கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார். அதேவேளையில் இந்த இரண்டு மணி நேர படத்தின் ஒவ்வொரு நொடியும் முக்கியமானது. இந்தப்படம் அழகிய சிறுவண்ண காகிதங்களால் உருவாக்கப்பட்ட சித்திரம் போன்றது. அந்த சித்திரத்தில் சிறு துண்டு காகிதம் எடுக்கப்பட்டாலும் சித்திரத்தின் அழகு சிதைந்துவிடும். இந்தப்படமும் அப்படித்தான். இந்த வெட்டுகள் படத்தின் மொத்த அழகையும் கெடுத்துவிடும் எனக் கவலையும் வெளியிட்டுள்ளார்.





Réseau WWA

உலகம் உங்கள் கைகளில்




மீண்டும் அதிகரித்த நிமிடங்களுடன் உங்கள் சேவையில்!

Maghrab 80Mn

Afrique 50Mn

Asie 50Mn

Surcharge : 3F à chaque connexion.

KING Telecom
92, Rue de Bellville,
75020 Paris.
(M°: Pyrénées)
Tél.: 01 44 62 93 96
Fax: 01 44 62 94 96

WWA
86, Rue de Bellville,
75020 Paris.
(M°: Pyrénées)

KING Telecom
33, Place de Général de Gaulle
60100 Creil.
(Place de la Gare)
Tél:03 44 55 41 59
Fax: 03 44 55 42 51

வர்த்தகர்களுக்கு விசேட கழிவுண்டு

அனைத்துத் தொடர்புகளுக்கும்: 01 43 15 17 17 - விற்பனையின் பின்னான சேவைகளுக்கு: 01 43 15 17 18

Pub.

# அடையாளம் காணப்படாத 204 உடல்கள் ஒரே இடத்தில் தகனம்!





(07.08.99)

இரயில் விபத்தில் பலியாகி அடையாளம் காணப்படாத 204 பேரின் உடல்கள் நேற்று இரவு பலாசன் ஆற்றங்கரையில் ஒட்டுமொத்தமாக தகனம் செய்யப்பட்டது.

கடந்த திங்கள் அதிகாலை மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள கெய்சால் என்ற இடத்தில் அவத்-அசாம் எக்ஸ்பிரஸ் இரயிலும், பிரமபுத்திரா தபால் இரயிலும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. இந்த விபத்தில் 450க்கும் அதிகமானோர் பலியானார்கள். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். பலியானவர்களில் பெரும்பாலான உடல்கள் அடையாளம் காண முடியாமல் சிதைந்து போய் உள்ளன.

மீட்கப்பட்ட 289 உடல்களில் 85 உடல்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டன. மற்ற உடல்கள் அடையாளம் காண முடியவில்லை. அவர்களது உறவினர்கள் எவ்வளவோ முயன்றும் அடையாளம் காண முடியவில்லை. மருத்துவமனை முழுவதும் உடல்கள் குவிந்து கிடப்பதால் உடல்கள் அழுகி துர்நாற்றம் வீச ஆரம்பித்துவிட்டன. அதனால் அனைத்து உடல்களையும் ஒட்டுமொத்தமாக தகனம் செய்ய முடிவு செய்யப்பட்டது. 204 உடல்களும் தனித்தனியே நிழற்படம் எடுக்கப்பட்டு பின்னர் மாஜிஸ்ரேட் அனுமதி பெற்று பலசான் ஆற்றங்கரையில் நேற்று ஒட்டுமொத்தமாக தகனம் செய்யப்பட்டது. இத் தகவலை மேற்கு வங்க உள்துறை அமைச்சர் புத்ததேவ் பட்டாச்சார்யா தெரிவித்தார்.

# பாதிரியார் கொலையில் இந்து அமைப்புகளுக்கு தொடர்பில்லை

## – நீதிபதி வாத்வா

(05-08-99)

ஒரிசாவில் கிறிஸ்தவ பாதிரியார் கிரஹாம் ஸ்டெயின்சும் அவரது இரு மகன்களும் எரித்து கொல்லப்பட்ட சம்பவத்தில் இந்து அமைப்புகள் சம்பந்தப்படவில்லை என்று நீதிபதி வாத்வா கூறியுள்ளார். கடந்த ஜனவரியில் நடந்த இச் சம்பவம் குறித்து விசாரிப்பதற்கு உச்ச நீதிமன்ற நீதிமதி டி.பி.வாத்வா தலைமையில் விசாரணை ஆணைக் குழு அமைக்கப்பட்டது. வாத்வா ஆணைக்குழுவின் 300 பக்கங்களைக் கொண்ட அறிக்கை வியாழக்கிழமை வெளியிடப்பட்டது. இதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொடூரமான இக் கொலை, எந்த அமைப்புகளுடனும் சம்பந்தப்படாத தனி நபரான தாரா சிங்கின் செயலே. இவருக்கு ஆதரவாக சிலர் செயல்பட்டுள்ளனர். ஒரு மதபோதகராக ஸ்டெயின்ஸ் பணியாற்றியுள்ளார். மதமாற்றம் எதிலும் அவர் ஈடுபடவில்லை. தாம் தங்கியிருந்த பகுதியில் மிகச் சிறப்பாக பணியாற்றியுள்ளார் இருப்பினும் தமக்கு எதிராக ஒரு குழு உருவாகி இருந்ததை அவர் உணரவில்லை.

ஸ்டெயின்ஸ் மற்றும் அவரது இரு மகன்கள் கொலை செய்யப்பட்டதை தொடர்ந்து இச் சம்பவத்தில் இந்து அமைப்புகளுக்கு தொடர்புள்ளதாக எதிர்க் கட்சிகளும் கிறிஸ்தவ அமைப்புகளும் குற்றம் சாட்டின. ஆனால் தற்போது வெளிவந்துள்ள அறிக்கை இக் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளது.

# பவார் கட்சியுடன் கூட்டுக்கிடையாது

## – பா.ஜ.க. அறிவிப்பு

சரத்பவாரின் தேசியவாதக் காங்கிரஸ் கட்சியுடன் தேர்தல் உடன்பாடோ அல்லது பேச்சுக்களோ ஏதும் கிடையாதென பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் குஷாபாவ் தாக்கரே அறிவித்திருக்கின்றார். காங்கிரஸ் கொள்கைகளைவிட்டு எவ்வளவு தொலைவு தள்ளி இருக்கின்றோமோ அதே அளவு தொலைவில்தான் பவார் கட்சியிடமிருந்தும், விலகியிருப்போமென தாக்கரே தெரிவித்திருக்கின்றார். இதேவேளை பாரதிய ஜனதா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் வாஜ்பாய் தீவிரப் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளார். பஞ்சாப்பில் அவர் பிரச்சாரத்தை ஆரம்பித்து தொர்டர்ந்தும் நடாத்திவருகின்றார். டெல்லியில் பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய வாஜ்பாய் பாரதிய ஜனதாக் கூட்டணியில் ஜெயலலிதாவைச் சேர்ப்பது மிகப்பெரிய தவறு எனவும் இனிமேல் இப்படியான முடிவுகளை எடுக்கமாட்டோம் எனவும் தெரிவித்தார். கார்கில் பிரச்சினை பற்றித் தெரிவித்த அவர் தேர்தல் பிரச்சாரத்தில் கார்கில் பிரச்சினையைப் பாவித்து நமது வீரர்களின் தன்னலமில்லா உழைப்பிற்கு களங்கத்தை ஏற்படுத்த நான் விரும்பவில்லை எனக் குறிப்பிட்டதுடன் பாகிஸ்தான் தீவிரவாதிகள் இந்தியாவிற்குள் ஊடுருவ நாமே பாதுகாப்பான பாதை அமைத்துக்கொடுத்ததாக எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டுவது வேதனையளிப்பதாகவும் தெரிவித்தார்.

# தி.மு.க., ம.தி.மு.க. சிக்கல் தீர்ந்தது

(பிந்திய செய்தி)

தி.மு.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகளுக்கிடையேயான தொகுதிப் பங்கீட்டுப் பிரச்சினைக்கு கடந்த 8-ம் திகதியன்று சுமுகமான தீர்வு எட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய உடன்பாட்டின்படி ஐந்து மக்களவைத் தொகுதிகளையும் தத்தம் சட்டப்பேரவைத் தொகுதியையும் ஏற்றுக்கொண்டு ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ உடன்பாட்டில் கையொப்பமிட்டார். புதிய ஒப்பந்தம் எட்டப்படமுன்னர் சிவகாசி, திண்டிவனம், பழனி, திருச்செங்கோடு, பொள்ளாச்சி ஆகிய தொகுதிகளின் எண்ணிக்கை குறித்து இரு கட்சிகளுக்கும் சிக்கல்கள் இருந்து வந்தன. அதனையடுத்து அறிவாலயத்தில் கருணாநிதியும் வைகோவும் மேற்கொண்ட பேச்சுக்களின் முடிவில் புதிய உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. புதிய உடன்பாட்டில் திருப்தி அளிப்பதாக வைகோ செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார். இரு கட்சிகளுக்குமிடையே தொகுதி உடன்பாடு ஏற்பட்டமை குறித்து பிரதமர் வாஜ்பாய் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

# அசாமில் தீவிரவாதிகளின் தாக்குதல்

அசாமின் பர்பேடா மாநிலத்தில் தீவிரவாதிகள் தாக்குதல் நடாத்தியதில் இரு மின்விநியோகக் கோபுரங்களும் ஒரு சரக்கு தொடருந்தும் தகர்க்கப்பட்டுள்ளன. அத்துடன் தேசிய நெடுஞ்சாலைப் பாலம் ஒன்றும் தகர்க்கப்பட்டுள்ளது. சனிக்கிழமை இரவும் ஞாயிற்றுக்கிழமையும் இத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன. இத்தாக்குதல்கள் அனைத்திற்கும் போடோ தீவிரவாதிகளே பொறுப்பென பொலிசார் தெரிவித்துள்ளனர். தொடரூந்து தகர்க்கப்பட்ட தாக்குதலின்போது சக்திவாய்ந்த வெடிகுண்டு பாவிக்கப்பட்டதாகவும் 'றிமோட் கொன்றோல்' மூலம் இக்குண்டு வெடிக்க வைக்கப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# காஷ்மீர் பிராந்தியத்தில் பாகிஸ்தானின் பீரங்கித்தாக்குதல்கள் இந்தியாவும் பதிலடி

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் எல்லைமாவட்டமான குப்வாராவில் அமைந்துள்ள இந்திய இராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் நடாத்திய தாக்குதலில் ஒரு இந்தியச் சிப்பாய் உயிரிழந்ததுடன், மேலும் அறுவர் காயமடைந்துள்ளனர். இத் தாக்குதலை அடுத்து அருகில் உள்ள காட்டுப் பகுதியில் இந்திய இராணுவத்தினர் தேடுதலை நடாத்தி இரு தீவிரவாதிகளையும் சுட்டுக்கொன்றுள்ளனர். காஷ்மீரின் குறிப்பிட்ட சில பகுதிகளில் இப்பொழுது தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. இதேநேரம் எல்லைக்கப்பால் இருந்து பீரங்கிகள் மூலம் பாகிஸ்தான் ஜம்மு பிராந்தியத்தின் மீது தாக்குதல் நடாத்தி வருகின்றது. பாகிஸ்தானின் தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியா மேற்கொண்ட தாக்குதலில் பாகிஸ்தான் இராணுவத்தின் பதுங்குகுழிகளும் கண்காணிப்பு நிலையங்களும் அழிக்கப்பட்டுள்ளன. இத்தாக்குதலின்போது பாகிஸ்தான் சிப்பாய் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார்.

# ஆந்திர கம்யூனிஸ்ட் தலைவர் கட்சியில் இருந்து விலகினார்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆந்திரத் தலைவரான ராஜேஸ்வரராவ் கட்சியிலிருந்து விலகியுள்ளார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டப் பேரவை கட்சித் தலைவராக இருந்த இவர் தனது முடிவினை அறிவித்ததை கட்சியின் மாநில உதவிச் செயலாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

# சிவகாசியில் வைகோ ராமசாமிக்குப் போட்டி

சிவகாசித் தொகுதியில் ம.தி.மு.க. சார்பாக மக்களவைத் தொகுதிக்கு வைகோ போட்டியிடுகின்றார். கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்ட ம.தி.மு.க. வேட்பாளர் பட்டியலில் இவ்விபரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதே நேரம் சிவகாசித்தொகுதியில் ம.தி.மு.க கூட்டணி சார்பாக முன்னாள் நீதிபதி இராமசாமி நிறுத்தப்பட்டுள்ளார்.

## முகமூடிக் கொள்ளையனுக்கு 310 ஆண்டு சிறை

31 வழக்குகளில் சம்பந்தப்பட்ட மூகமுடி கொள்ளைக்காரன் ஒருவனுக்கு கள்ளக்குறிச்சி நீதிமன்றம் 310 ஆண்டு சிறைத்தண்டனை விதித்துள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் 43 இடங்களில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட கொள்ளைக் கோஸ்டி ஒன்று பொலிசாரின் விசேட அணியினரால் மொத்தமாக கைது செய்யப்பட்டனர். இக்குழுவில் 13 பேர் அடங்கியிருந்தனர். இவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்ட போதே நீதிபதி இத் தீர்ப்பினை வழங்கினார். கொள்ளைக் கும்பலின் தலைவன் கணேசன் என்பவருக்கு அதியுச்ச தண்டனையாக 310 ஆண்டுகள் கிடைத்தன.

# ஆந்திராவில் தி.மு.க. போட்டி

ஆந்திர சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் மூன்று தி.மு.க. வேட்பாளர்களை முதல்வர் கருணாநிதி கடந்த 8-ம் திகதியன்று அறிவித்துள்ளார்.

புத்தூர் தொகுதியில் கே.எ. முனுசாமியும் நகரித்தொகுதியில் ஜெ. ஜலீலிலும் சித்தூர் தொகுதியில் எஸ். சரவணன் ஆகியோரே அறிவிக்கப்பட்ட வேட்பாளர்களாவர்.




# யூகோஸ்லாவிய கூட்டமைப்பிலிருந்து விலக மொண்டிநேக்ரோ நடவடிக்கை

யூகோஸ்லாவிய கூட்டமைப்பில் தற்போதைய நடைமுறைகள் மாற்றி அமைக்கப்பட்டு புதிய இருதேச உறவுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். இல்லாதுவிடின் மொண்டிநேக்ரோ யூகோஸ்லாவிய கூட்டமைப்பிலிருந்து நிரந்தரமாக விலகி சுதந்திரநாடாக தன்னை அறிவிக்குமென அந்நாட்டின் பிரதமர் பிலிப் வுக்கானோவிச் தலைநகர் பொக்கோரிச்சாவில் பத்திரிகையாளருடன் பேசும் போது கூறினார்.

கடந்தசில நாட்களுக்கு முன் மொண்டி நேக்ரோ பாராளுமன்றத்தில் புதிய உறவுகள் பற்றிய சட்டமூலம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதன்படி யூகோஸ்லாவியா புதிய நடைமுறைகளுக்கு ஒத்துவராதவிடத்து சுதந்திரத்திற்கான சர்வஜன வாக்கெடுப்பு மொண்டி நேக்ரோவில் இடம் பெறும். இந்த மொண்டிநேக்ரோவின் புதிய நகர்வானது, யூகோஸ்லாவிய ஜனாதிபதி மிலோசவிச்சுக்குத் தோன்றியுள்ள புதிய நெருக்கடியாகும்.

மொண்டிநேக்ரோ கடந்த வியாழனன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய சட்டமூலங்களின்படி சேர்பிய - மொண்டிநேக்ரோ கூட்டமைப்பு என தற்போதைய யூகோஸ்லாவியக் கூட்டமைப்பு பெயர்மாற்றம் பெற வேண்டும். அத்துடன் மொண்டிநோக்ரோ தனியான நாணய அமைப்பையும் வெளிவிவகார, பாதுகாப்பு அமைச்சர்களையும் கொண்டிருக்கும். தற்போதைய யூகோஸ்லாவிய டினாருக்கு சமனாக புதிய மொண்டிநேக்ரோ நாணயம் புழக்கத்திற்குக் கொண்டுவரப்படும். இவ்வாறு பல திருத்தங்களைக் கொண்டிருக்கும் சட்டமூலம், இன்னும் சில தினங்களில் சேர்பிய அரச தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அதற்கு அவர்கள் ஒப்புக் கொள்ளாவிடில் அடுத்த கட்ட நடவடிக்கையாக சுதந்திரத்திற்கான சர்வஜன வாக்கெடுப்பு அமையும்.

மொண்டிநேக்ரோ 630,000 மக்கள் தொகையைக் கொண்ட ஒரு குடியரசாகும். இந்நாட்டின் சனத்தொகையில் பெரும்பகுதியினர் சேர்பியர் என்பது குறிப்பிடத்தக்கது. மொண்டிநேக்ரோ அரசின் புதிய நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்நாட்டின் தீவிர தேசியவாத கட்சியின் தலைவர் வொஜிஸ்லாவ் செசெல்ச், யூகோஸ்லாவிய தலையீடு உடனடியாகத் தேவை எனக் கோரியபோதிலும், இதுவரை யூகோஸ்லாவிய அதிபர் மிலோசோவிச்சிடமிருந்து எந்தவித பதிலும் வரவில்லை.

# கொசோவோவில் அதிகரித்துவரும் சேர்பியக் கொலைகள்

கொசொவோவில் சேர்பிய சிறுபான்மையினரின் கொலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. தினமும் பிரிஸ்டினாப் பகுதியில் ஒரு சேர்பியராவது அல்லது ஜிப்சி இனத்தவராவது அல்பேனியர்களால் கொலைசெய்யப்படுவது வழக்கமாகியுள்ளது. ஐ.நாவின் கொசோவோ பாதுகாப்பு படையினர் கொசோவோவின் சகல சமூகத்தினருக்கும் பாதுகாப்பு வழங்கும் என அதன் நிர்வாகப் பிரதிநிதியான பேர்னாட்குஷ்னர் கூறியுள்ளபோதிலும், அமெரிக்க வெளியுறவுப் பேச்சாளர் ஜேம்ஸ் ரூபின் கொசோவோவின் சேர்பியருக்கு முழுமையான பாதுகாப்பு வழங்குவதென்பது சாத்தியமாகாது என்றும் பொதுவான பாதுகாப்பினையே, Kfor இனால் உறுதிசெய்யமுடியும், அதேபோல் வெளியேறும் சேர்பியரை திரும்பி வருமாறு கோர நாம் தயாரில்லை என்றும் கூறினார்.

நேட்டோ தலைமையிலான அமைதிப் படையினர் கொசோவோ பிராந்தியத்துக்குள் நுழைந்தது முதல் இன்று வரையான காலப்பகுதியில், நூற்றுக்கும் அதிகமான சேர்பியரோ அல்லது ஜிப்சி இனத்தவரோ கொல்லப்பட்டுள்ளனர். அவர்களது வீடுகள் கொள்ளையிடப்படுகின்றன. தீயிட்டுக் கொளுத்தப்படுகின்றன. சேர்பிய அரச தொழிலகங்கள் பலாத்காரமாக அல்பேனியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு அதன் நிர்வாகிகள் வெளியேற்றப்படுகின்றனர். கடந்த எட்டு வாரங்களில் சேர்பியரின் வெளியேற்றம் தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது.

இன்றைய நிலையில் 200.000 சேர்பியர் இன்னமும் கொசோவோவில் வசித்து வருகின்றனர். இவர்களும் எப்படியாவது வெளியேற்றப்பட்டால் தனியான அல்பேனிய பிரதேசமாக கொசோவோ மாறிவிடும். இது சுதந்திரத்துக்கான நகர்வாயும் மாறலாம். ஆனால் இதனை மேற்கும் நேட்டோவும் விரும்பாதபோதிலும் அவைகளின் கட்டுப்பாட்டையும் மீறி கொசோவோவின் நிகழ்வுகள் மாறிவருகின்றன.

கொசோவோவின் சேர்பியரின் கொலைகளை கொசோவோ விடுதலை இராணுவத்தினர் மறுத்து வருகின்றனர். அத்துடன் சேர்பியர் தொடர்ந்தும் கொசோவோவில் இருக்க வேண்டும் என்றும் கோருகின்றனர். KLAயினர் சேர்பியரின் கொலைகளை மறுத்தபோதிலும் அந்நடவடிக்கைகளில் அவர்களது தலையீடு இருந்தது பல தடவைகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது என சேர்பியர்கள் தெரிவிக்கின்றனர்.

நாம் அமைதியான பல இனங்களைக்கொண்ட கொசோவோவை எதிர்பார்த்தோம். அதற்காகவே பல பில்லியன் டொலர்களை வாரியிறைத்தோம். ஆனால் எமது செயற்பாடுகள் யாவும் செயலிழக்க ஆரம்பிக்கின்றனவோ என தாம் அஞ்சுவதாக நேட்டோ பேச்சாளர் தெரிவித்தார்.

# ஆயுதப் போரை கைவிட குர்திஷ் போராளிகள் தயார்?

துருக்கிக்கு எதிராக போராடி வரும் மிகப்பெரும் போராளிகள் அமைப்பான குர்திஷ் தொழிலாளர் கட்சி தனது 14 வருடகால ஆயுதப்போரை முடிவுக்குக் கொண்டு வரலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன.



டெம் எனப்படும் குர்திஷ் சார்பு செய்தி நிறுவனம் விடுத்துள்ள செய்தியில், சிறையில் இருக்கும் தங்களது தலைவர் ஒகஸ்ட் 2-ம் திகதி விடுத்த அறிவித்தல்படி தாம் செயலாற்ற முழுமையாக தயார் எனக் கூறப்பட்டுள்ளது. ஒகஸ்ட் 2-ம் திகதி துருக்கி சிறையில் இருந்து தனது வழக்கறிஞர்கள் மூலமாக அப்துல்லா ஒசெலான் விடுத்த செய்தியில், துருக்கி தேசத்துக்கெதிரான தாக்குதல்களை உடனடியாக முடிவுக்குக்கொண்டு வரும்படியும், ஜனநாயகத்தினையும் மனித உரிமையையும் மதித்து போராளிகள் செயலாற்ற வேண்டும் என்றும் ,கோரியிருந்தார்.

அதேவேளை PKK போராளிகள் துருக்கிப் பிரதேசங்களில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும் என்றுமட்டும் கோரியுள்ளதே தவிர, போராளிகளை துருக்கியிடம் சரணடையக்கோரவில்லை. இதனை தெளிவுபடுத்திய குர்திஷ் ஆய்வாளர் ஒருவர், குர்திஷ் மக்களின் தேசிய அடையாளத்தை ஏற்றுக்கொண்டு இராணுவ தீர்வில் இருந்து அரசியல் ரீதியான தீர்வு நோக்கி துருக்கி மாறுமானால், குர்திஷ் போராளிகள் தமது போராட்டத்தை கைவிடுவதில் வினோதமில்லை எனக் கூறினார்.

# நேட்டோவின் புதிய தலைவராக ரொபேட்சன் நியமனம்

வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் அமைப்பின் அடுத்த செயலாளர்நாயகமாக பிரித்தானியாவின் தற்போதைய பாதுகாப்புச் செயலாளரான ஜோர்ஜ் ரொபேட்சன் நியமிக்கப்படவுள்ளார். பெல்ஜியத் தலைநக்ர் பிரசஸ்சில் நேட்டோவின் தூதுவர்கள் கடந்த புதனன்று கூடிய போதே, புதிய செயலாளர் நியமனம் பற்றிய முடிவுகளை மேற்கொண்டனர். திரு.ரொபேட்சன் எப்போது பதவியேற்பார் என்பது தெரிவிக்கப்படாதபோதிலும் அக்டோபர் மாதம் ஆரம்பத்தில் பதவியேற்கலாம் என நம்பப்படுகிறது. நேட்டோவின் செயலாளர் நாயகமாக ஏற்கனவே இரண்டு பிரித்தானியர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. ரொபேட்சனின் நியமனத்தை ஐரோப்பிய தலைவர்கள் வரவேற்றுள்ளனர். கொசோவோ பிரச்சினையின் பின் ரஷ்யாவுடன் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை சகஜ நிலைக்கு கொண்டுவரவும், அந்நாட்டுடன் ஆழமான உறவுகளைப் பலப்படுத்தவும் இவரது நியமனம் உதவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இஸ்ரேல் உதவி வெளியுறவு அமைச்சராக அரபு இனத்தவர்

பிரதமர் எடுட்பராக் இஸ்ரேலிய அரபு இனத்தவரான நவாஸ் மாசால்ஹாவை உதவி வெளியுறவு அமைச்சராக நியமித்துள்ளார். 55 வயதான நவாஸ் டிசால்ஹா, தொழிற்கட்சி பிரதிநிதியாவார். இவர் 1992 முதல் 96 வரையான முன்னைய தொழிற்கட்சி அரசிலும் பிரதி சுகாதார அமைச்சராகக் கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய தொழிற்கட்சி அரசானது, அரபு மக்களிடையேயுள்ள வேற்றுமைகளைக் களைந்து அவர்களையும் தமது சக உரிமையுள்ள குடிமக்களாக கருதுகிறது. அதனை தேர்தலிலும் கூறியிருந்தது. இன்று ஒரு அரபு இனத்தவரை வெளியுறவுத்துறையின் உயர்பதவியில் நியமித்ததன் மூலம் அதனை பராக் அரசு நீரூபித்துள்ளது எனக் கூறினார் புதிய உதவி வெளியுறவு அமைச்சரான நவாஸ் மசால்ஹா டெல் அவீவ் நகரின் வடக்கே கார்பர்கானா கிராமத்தில் ஆசிரியராக கடமைபுரிந்து வந்தவர், இஸ்ரேலில் அரபு மாணவர்களது கல்வித்துறை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது என்று கூறும் ஆய்வாளர்கள், புதிய அமைச்சரின் நியமனத்தால் அந்தக்குறை தீர்க்கப்படும் என்கின்றார்கள்.

# மோசடிக்குற்றத்திற்காக 6 பேருக்கு மரணதண்டனை

மோசடியில் ஈடுபட்ட குற்றத்திற்காக வியட்னாமில் ஆறு பேருக்கு மரணதண்டனை தீர்ப்பாக வழங்கப்பட்டது. அரசின் பங்கு உரிமைகொண்ட நிறுவனங்களிலும் தனியார் புடவை மற்றும் நிலம் சம்பந்தமான வர்க்கத்தில் ஈடுபடும் நிறுவனங்களிலும் கடந்த சில மாதங்களுக்கு முன் வியட்னாமின் இலஞ்ச மோச்டி தடுப்பு பிரிவினர்களும் சோதனை நடத்தினர். இதன் போது வங்கி நிர்வாகிகள் 18 பேர் உட்பட 77 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களுக்கெதிரான வழக்கு கடந்த மே மாதம் முதல் நடந்துவந்தது.

வியட்னாமின் மிகப்பெரிய மோசடி வழக்காக கருதப்படும் இந்த வழக்கின் இறுதித்தீர்ப்பு கடந்த புதனன்று வழங்கப்பட்டது. இதில் 6 உயர் அதிகாரிகளுக்கு மரணதண்டனையும் ஆறு பேருக்கு ஆயுள் 'தண்டனையும் 30 பேருக்கு முப்பது மாதங்கள் முதல் 20 வருடங்கள் வரையான தண்டனையும் வழங்கப்பட்டது.


ஜேர்மனி பொன் (Bonn) நகரில்

**யாழ் ரவல்ஸ்**

**YARL TRAVELS**

*Thomas Mann Str 21,53111 Bonn*

**உலகின் எப்பாகங்களுக்கும் மலிவு விலையில்**

*பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்*

சிறீலங்கா, இந்தியா, சிங்கப்பூர், கனடா ஆகிய நாடுகளுக்கு விசேட சலுகைகள்.

தொலைபேசி இலக்கம்: 0228/9652885 – தொலைநகல்: 0228/9652985

GE-Pub.

# எதியோப்பியாவுடனான யுத்தத்தை முடிக்க எரித்திரியா இணக்கம்

எரித்திரிய அரசு ஆபிரிக்க ஒருமைப்பாட்டு அமைப்புத் தயாரித்த சமாதானத்திட்டத்தை ஏற்றுக்கொண்டதுடன் கடந்த 15 மாதங்களாக எதியோப்பியாவுடன் தான் நடத்திவரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவும் இணங்கியுள்ளது.

எரித்திரிய அரசு கடந்த ஞாயிறு விடுத்த அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. ஆபிரிக்க ஒருமைப்பாட்டு அமைப்புடனும், ஐக்கிய அமெரிக்காவுடனும் ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதில் எரித்திரியா முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என அது உறுதி கூறியுள்ளது. ஏரித்திரியாவும், எதியோப்பியாவும் கடந்த வருடம் மே மாதம் முதல் 620 மைல் நீளமான எல்லைப் பகுதியைப் பகிர்ந்துகொள்வதில் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து மோதிக்கொள்ள ஆரம்பித்தன. கடந்தவருடம் நடுப்பகுதியில் ஆபிரிக்க ஒருமைப்பாட்டு அமைப்பு இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதிலும் கடந்த மாத இறுதியிலேயே சரியான தீர்வு ஒன்று ஏற்படும் நகர்வுகள் தோன்றத்தொடங்கின. ஆபிரிக்க ஒருமைப்பாட்டு அமைப்பின் தலைவரான அல்ஜீரிய ஜனாதிபதி அப்துல் அசீஸ் புத்தெபிளிக்காவின் பிரதிநிதிகளுடன் எரித்திரிய ஜனாதிபதி இசாயஸ் அப்கேசி நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது இந்த சமாதான முன்னெடுப்புக்கள் பற்றி ஆராயப்பட்டன. பின்னர் இந்த சமாதான நடவடிக்கை சம்பந்தமான கருத்துக்கள் பிரதிநிதிகளின் மூலம் எதியோப்பிய ஜனாதிபதி மெலஸ் சனாவியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் இதுவரை அவரிடமிருந்து எந்தவிதமான பதிலும் கிடைக்கப்பெறவில்லை என்கின்ற போதிலும் இரு தரப்பினரும் அடுத்தவார நடுப்பகுதியளவில் இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இஸ்ரேலில் யோசனைகளை அரபாத் ஏற்றுக்கொண்டார்

இஸ்ரேல் வை பிளான்டேசன் ஒப்பந்தத்தை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் நடைமுறைப்படுத்த இணங்கியதை பாலஸ்தீன அதிபர் யாசிர் அரபாத் வரவேற்றுள்ளார். மிக நீண்ட காலமாக தேக்க நிலையில் அமுல்படுத்தப்படாமல் இருந்த இவ் ஒப்பந்தம் முதலில் ஓகஸ்ட் மாதத்தில் நடைமுறைப்படுத்தப்பட இருந்தது. பின்னர் தற்போது செப்டெம்பர் மாதத்திற்கு பின்போடப்பட்டுள்ளது. இருந்தாலும் நாம் அதனை ஏற்றுக்கொள்கிறோம். இது முக்கியமான ஒரு விடயம். எப்படியும் நடந்தே தீரவேண்டும் என அவர் மேலும் கூறினார்.

இஸ்ரேல் அண்மையில் வை பிளான்டேசன் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் சிறிது தாமதத்தை விரும்பியது. மேற்குக் கரைப்பகுதியில் இஸ்ரேலியப் படைகள் இறுதியானதும், மூன்றாவது கட்டமுமான படைவிலகலை மேற்கொள்வது சிறிது தாமதமாக வேண்டும் என அது விரும்பியது. இப்பகுதியில் உள்ள இஸ்ரேலியக் குடியேற்றவாசிகளின் பாதுகாப்பிற்கு படைவிலகல் ஆபத்தாக அமையலாம் என இஸ்ரேலியப் பிரதமர் எதிர்பார்த்தார்.

ஆனால் தற்போது அது குறித்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் படைவில்கல் ஆரம்பிக்கும் என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

# பொறிஸ் யெல்சின் அமைச்சரவையை கலைத்தார் பிரதமர் பதவி நீக்கம்

ஜனாதிபதி பொறிஸ் யெல்சின் தனது பிரதமரான சேர்கெய் ஸ்ரெபாசினை பதவியில் இருந்து வெளியேற்றியதுடன் அமைச்சரவையையும் கலைத்துள்ளார். கடந்த 17 மாதங்களில் இது நான்காவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது. ரஷ்யாவின் இடைக்கால பிரதமராக சமஷ்டிப் பாதுகாப்புச் சேவையின் தலைவரான விளாடிமீர் புரீன் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையான டூமாவின் தேர்தல் டிசெம்பர் 19-ம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

திங்களன்று தொலைக்காட்சியில் மக்களுக்கு உரையாற்றிய யெல்சின் 21-ம் நூற்றாண்டில் பலமான பரந்த ரஷ்யா நிலைத்திருக்கவேண்டுமெனில் பலமான துணிவான ஓர் தலைமை அதற்குத் தேவை. தான் அடுத்தவருடம் பதவியில் இருந்து ஓய்வு பெறும்போது ரஷ்யாவின் புதிய ஜனாதிபதியாக விளாடிமீர் புரீன் பதவியேற்கவேண்டும் என தான் விரும்புவதாயும் அவர் கூறினார்.

கடந்த மேதாதம் முதல் பிரதமர் பதவி வகித்துவந்த ஸ்ரெபாசீன் என்ன காரணத்திற்காக பதவி நீக்கம் செய்யப்பட்டார் என்பது அறியப்படவில்லை. ரஷ்யத் துருப்புக்களுக்கும் இஸ்லாமியப் போராளிகளுக்குமிடையே யுத்தம் நடைபெறும் டகஸ்தான் பகுதிக்கு சென்று திரும்பிய பிரதமர் யெல்சினைச் சந்தித்து அப்பிராந்திய நிலைமையை எடுத்துக் கூறியவேளை அதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி அவரைப் பாராட்டியதுடன் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்ட விடயத்தையும் கூறினார்.

புதிய பதில் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள விளாடிமீர் புரீன் சோவியத் காலத்தில் அதன் உளவு நிறுவனமான K.G.B.யில் பல உயர்பதவிகளை வகித்து வந்தவர் என்பதும் உளவுத் துறையில் மிக நீண்டகால அனுபவம் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# எம்மை கட்டுப்படுத்த அமெரிக்காவால் முடியாது

## – வட கொரியா

வடகொரியா ஏவுகணையையோ அல்லது செயற்கைக் கோளையோ விண்ணுக்கு ஏவுவதைத் தடுக்க அமெரிக்காவுக்கு எந்த உரிமையும் கிடையாது என அந்நாட்டின் அரசியல் தலைமைப்பீடம் அறிவித்துள்ளது. ஆளும் தொழிலாளர் கட்சியின் நாளேடான 'ரொடொங் சின் முங்கில்' கடந்த சனியன்று வெளியாகியுள்ள அறிவித்தலிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப் பத்திரிகை மேலும் 'எமக்கு அவசியமானால் எம்மால் எந்தச் சந்தர்ப்பத்திலும் செயற்கைக் கோளொன்றை ஏவ முடியும். நாம் அதனையிட்டு பெருமைப்படுகிறோம். யார் எதைச் சொன்னாலும் எமது செயற்கைக் கோள் அல்லது ஏவுகணை பரிசோதனையை நாம் தொடர்ந்தே தீருவோம். அமெரிக்கா இதனை கைவிட வேண்டும் எனக் கோருகிறது. ஆனால் இக்கோரிக்கையை நாம் நிராகரிக்கிறோம்' என எழுதியுள்ளது.

வடகொரியா கடந்த வருடம் ஒரு கண்டம் விட்டு தாவும் நீண்டதூர ஏவுகணையொன்றை பரீட்சித்தது. அதனைத்தொடர்ந்து ஜப்பான் தென்கொரியா போன்ற நாடுகளுடன் அமெரிக்காவும் கடும் கண்டனங்களைத் தெரிவித்திருந்தது. இந்நிலையில் அதன் புதிய நவீன வடிவம் ஒன்றினை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9-ம் திகதி வடகொரியா பரீட்சிக்க உத்தேசித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. 1948-ம் ஆண்டு வடகொரியா தோற்றுவிக்கப்பட்டதன் நினைவு நாள் செப்டெம்பர் 9 என்பது குறிப்பிடத்தக்கது.

வடகொரியாவின் புதிய ஏவுகணை பரிசோதனை நிறுத்தப்பட வேண்டும். அல்லது அமெரிக்காவினதும் ஜப்பானினதும் மற்றும் தென்கொரியாவினதும் எதிர்ப்பை சந்திக்கவேண்டிவரும் என்றும் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. ஜப்பானில் தொழில் புரியும் வடகொரியர்கள் அனுப்பும் பணத்தை தாம் தடை செய்யப் போவதாக ஜப்பான் எச்சரிக்கையும் செய்துள்ளது.

# கிரகணம் 99

## சில செய்திகள்

இந் நூற்றாண்டின் முழுமையான இறுதி சூரிய கிரகணம் நாளை அதாவது 11-ம் திகதி புதனன்று தோன்றுகின்றது. நடுமதியம் 12 மணியளவில் மத்திய ஐரோப்பாவில் காணக்கூடிய இந்த கிரகணமானது, துருக்கி மத்தியகிழக்கு என இந்தியாவில் முடிவடைகின்றது. அமெரிக்காவின் நியூயோக் கரைப்பகுதிக்கு அண்மையில் கடலில் தோற்றம்பெறும் கிரகணம் ஐரோப்பாவில் முழுமையடைந்து, இந்தியாவரை சென்றுமுடிவடைகின்றது. வட அத்திலாந்திக் நாடுகள், ஐரோப்பா, மத்தியகிழக்கு, இந்தியா போன்ற நாடுகளில் இதனைக் காணக்கூடியதாகவும் இருக்கும்.

★ ★ ★

லெபனானில் இஸ்லாமிய மதத்துறவி ஒருவர் கிரகண நேரத்தில் சூரியனைப் பார்க்கவேண்டாம் என மக்களுக்கு அறிவித்துள்ளார். இஸ்லாமிய சட்டமான ஷரியாவிற்கு இது எதிரானது என்றும் அச்சட்டப் பிரகாரம் இதனைப் பார்ப்பது தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

★ ★ ★




ஈராக் ஐநாவிடம் சூரியக்கிரகண நேரத்தில் பிரித்தானிய அமெரிக்க விமானங்கள் தனது நாட்டின்மேல் பறப்பதைத் தடுக்கவேண்டும் எனக் கோரியுள்ளது. சூரியகிரகணத்தைப் பார்க்கும் ஒரு முக்கிய இடமாக ஈராக்கின் மொசூள் பகுதி அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி 1991–ம் ஆண்டு முதல் விமானப்பரப்புத் தடைப்பிரதேசமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

சந்திரனில் காலடி வைத்த இரண்டாவது மனிதனான புஷ்.அல்ட்ரின் நோர்வேஜியாவின், நோர்வேஜியன் ஸ்கை எனும் கப்பலில் கிரகணத்தைப் பார்வையிடக் கூடியிருக்கும் 2000 பிரயாணிகளின் மத்தியில் கிரகணம் பற்றிய உரையை நிகழ்த்தவுள்ளார். கடந்த 8–ம் திகதி முதல் இக் கப்பலில் தலா 1885 பிரித்தானிய பவுண்ஸ் செலவில் கிரகணத்தைப் பார்வையிட என பிரயாணிகள் கூடியுள்ளனர்.

★ ★ ★

ஜோர்தானும், சிரியாவும் ஒகஸ்ட் 11 இனை விடுமுறைநாளாகப் பிரகடனப்படுத்தியுள்ளன. இவ்விருநாடுகளும் பொதுமக்களை வீட்டிற்குள் கிரகண சமயத்தில் இருக்குமாறும் போதிய பாதுகாப்பில்லாமல் வெளியே நடமாடவேண்டாம் என்றும் கூறியுள்ளன. கிரகணத்தைப் பார்ப்பவர்கள் பாதுகாப்புக் கண்ணாடிகள் நிச்சயம் அணிந்திருக்கவேண்டும் எனக் கூறியுள்ள இவ் அரசுகள் இக் கிரகணம் சிலவகை தோல்நோய்களை உண்டுபண்ணும் என்றும் மக்களை எச்சரித்துள்ளன.

# ஆபிரிக்கத் தலைவர்கள் தென்னாபிரிக்காவில் மாநாடு கொங்கோ பிரச்சினை பற்றி ஆராய்ந்தனர்

நான்கு ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் கடந்த ஞாயிறு மாலை தென்னாபிரிக்காவில் கூடி ' நிரந்தர அமைதிக்கான அடுத்த கட்ட நடவடிக்கைபற்றி ஆராய்ந்தனர். இம் மாநாட்டில் தென்னாபிரிக்கா, ருவாண்டா, உகண்டா, தன்சானியா போன்ற நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர். இம்மாநாடு எத்தனை நாட்களுக்கு நீடிக்கும் என்பது இதுவரை அறியப்படவில்லை. ஆனால் சரியான ஓர் தீர்வு ஏற்படும்வரை மாநாட்டினைத் தொடர்வது என தலைவர்கள் தீர்மானித்துள்ளனர். கடந்த 6 நாட்களுக்கு முன்னர் மொசாம்பிக்கில் நடந்த தெற்கு ஆபிரிக்க அபிவிருத்திச் சமூகத்தின் மாநாட்டிலும் பிரச்சினைபற்றி ஆராயப்பட்டது.

கபிலா வெளியேற வேண்டுமென ருவாண்டாவும், உகண்டாவும் விரும்புகின்றன. ஆனால் இரு நாடுகளும் வெவ்வேறு போராளிக் குழுக்களுக்கு பின்னணியில் நிற்கின்றன. கடந்த சனியன்று உகண்டா துருப்புக்களுக்கும் ருவாண்டா ஆதரவுப் போராளிகளுக்குமிடையே துப்பாக்கிச், சமர் மூண்டது. இறுதியில் இருநாட்டு இராணுவத் தளபதிகளும் சந்தித்து யுத்த நிறுத்தத்தை அறிவித்தனர்.

யூலை 10-ல் உகண்டா, ருவாண்டா மற்றும் கொங்கோ ஜனநாயகக் குடியரசின் அதிபர் கபிலாவுடனும் செய்துகொள்ளப்பட்ட அமைதி ஒப்பந்தம் இந்த மோதல்களால் பின்னடைவை சந்திக்கப் போகிறதென அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இதற்கிடையே கடங்கா பகுதியில் நிலைகொண்டிருந்த போராளிகளில் 1300 பேர் அரச படைகளிடம் சரணடைந்தனர் என கொங்கோ வானொலி அறிவித்தது.

# 21ம் நூற்றாண்டைச் சந்திக்கும்

# தமிழர் விளையாட்டு விழா

(Bank Holiday)

**Monday 30 - 08 - 99**
**8.30am - 9.00pm**

## Tamil Sports Festival 99

**நுழைவு: £2 மட்டுமே**

(குழந்தைகள் நுழைவு இலவசம்)

Car Park (வாகனத்தரிப்பு): £3




இலண்டனில் நான்காவது வெற்றி ஆண்டாக, பிரித்தானியாவின் வரலாற்றுப் பெருமை மிகு Windsor Castle ற்கு அருகாமையில் அமைந்துள்ள மாபெரும் மைதானத்தில் இவ்விழா நடைபெறுகின்றது. தமிழீழ பழைய மாணவர் சங்கங்களின், 30இற்கும் மேற்பட்ட துடுப்பெடுத்தாட்ட, வலைப்பந்தாட்டப் பிரிவுகள் கலந்துகொள்ளும் மாபெரும் சிறப்பு விழா.

**பல் வகைச் சுவை தமிழீழ உணவு வகைகளை குறைந்த விலையில் உண்டு மகிழ, பிரித்தானியாவின் பல்வேறு பாகங்களில் பரந்து வாழும் உறவினர் நண்பர்களைக் கண்டு குதூகலிக்க ஓர் அரிய சந்தர்ப்பம்.**

***தேம்ஸ் நதியில் சிறுவர்களுக்கான உல்லாசப் படகோட்டம் உட்பட பல பொழுதுபோக்கு விளையாட்டுக்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. பல் வகை நிகழ்வுகளுடன் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு, வாகன தரிப்பிட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இறுதியில் வாண வேடிக்கைகளும் இடம்பெறும்.***

*இது ஒரு விளையாட்டு விழா மட்டுமல்ல! நேற்றைய நிகழ்வுகளை..... அந்தப் பசுமையான பாடசாலை நிகழ்வுகளை..... புலம் பெயர் மண்ணில் பெருமையுடனும் ஆவலுடனும் பகிர்ந்து கொள்ளும் நிகழ்வாகும்.*

**ஒன்று கூடி தமிழர் பலத்தை வெளிப்படுத்த திரண்டு வாரீர் ! திரண்டு வாரீர் !!**

**ஐக்கிய தமிழர் அமைப்பு (UTO), Eelam House**
**0171-403 4554, 0956-314 370, 0956-329 660**

Pub. Gra.


ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# அயராத கண்காணிப்பு மிக அவசியம்

வன்னி மக்களுக்கான 'புதிய பாதை' ஒன்று மாங்குளம் ஊடாக திறந்துவைக்கப்பட்டிருக்கின்றது. விடுதலைப் புலிகளுக்கு மக்களின் துயரங்களில் எள்ளளவும் துயரம் கிடையாது. அவர்களுக்கு தமது இராணுவ குறிக்கோளே பிரதானமானது என்று அடிக்கடி பொய் பரப்புரையைக் கூறிவிந்த சிறீலங்கா அரசின் செயற்பாட்டிற்கு முன்னால் வவுனியாவின் திறந்த வெளிச் சிறைச்சாலையில் இருந்து மீண்டும் மாங்குளம் ஊடான புதிய பாதையால் வந்த வன்னி மக்களை மூத்த தளபதிகளே வரவேற்று அழைத்துச் சென்ற நிகழ்வுகளும், சர்வதேச அரங்குகளில் செய்திகளாக விரிந்துள்ளன. தமிழ் மக்களின் தேசிய காவலர்கள் என்ற ரீதியில் மாங்குளம் பிரதேசத்திலுள்ள தமது இராணுவ முக்கியத்துவத்தைக்கூட மக்களுக்காக புலிகள் விட்டுக்கொடுத்துள்ளமையை உலகத்தின் கண்களுக்கு புதிய பாதை திறப்பு விடயம் செய்தியாகச் சொல்லிவைக்கின்றது.

இது உண்மையில் சிறீலங்கா அரசிற்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம்தான். மாங்குளப் பாதையைத் திறப்பதற்கு விடுதலைப் புலிகள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள் என்றே அரசு தனது குறுகிய இராணுவச் சிந்தனையூடாக நோக்கியிருந்தது. அதன் காரணமாகத்தான் பாதை திறப்பு விடயத்தில் ஆரம்பத்தில் யதார்த்தத்திற்கு ஒவ்வாத 'சூனியப் பிரதேசம்' என்ற பிடியில் அழுங்காக நின்றது. தமது இராணுவ இயந்திரம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளினால்தான் வன்னி மக்களுக்கான பாதை அடைபடுகின்றது என்ற உண்மையினை மறைத்து பாதைகளை மீண்டும் திறப்பதற்கு நிபந்தனைகளை வைப்பது சிறீலங்கா அரசின் கொடுரத்தின் இன்னொரு வடிவம்தான். ஆனால் மாங்குளப் பாதைத் திறப்பு விடயத்தில் விடுதலைப் புலிகள் மக்களின் நலனுக்கு சிறப்புக்கொடுத்து செயற்பட்டுள்ளார்கள். தற்பொழுது பாதை திறக்கப்பட்டு விட்டாலும் சிறீலங்கா அரச இராணுவத்திற்கு இது ஒரு மன உளைச்சலான விடையம். எனவே பாதைக்கு விரைவாக மூடுவிழா செய்வதற்காகவே அது நடவடிக்கைகளை எடுக்கும். மோதல் தவிர்ப்பு நிலவும் குறுகிய இடங்களில்கூட இனிமேல் மர்மமான கண்ணிவெடிகள் வெடிக்கலாம். திடீரென எறிகணைகள் விழலாம். இது கடந்தகாலச் சிறீலங்காவின் செயற்பாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள். செய்வதைச் செய்துவிட்டு விடுதலைப் புலிகள் மேல் அப்பழியினைப் போட்டு தப்பித்துக் கொள்ளும் வழிவகைகள் சிறீலங்காவிற்கு ஒன்றும் புதிதானவையல்ல. சர்வதேசத் தொண்டர் நிறுவனங்களின் கண்காணிப்பு கண்களில்கூட விரலினைவிட்டு குத்தும் நயவஞ்சகமும் அதற்கு நன்கு பழக்கமானது. எனவே புதிதாகத் திறக்கப்பட்ட மாங்குளப்பாதையில் சிறீலங்காவின் நயவஞ்சகத்தனம் அண்டாமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டியது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதானமான பணியாகும். இந்தப் பணியில் செஞ்சிலுவைச் சங்கத்தினர் அயர்ந்திருப்பார்களேயானால் விடுதலைப் புலிகளின் நல்லெண்ண நடவடிக்கைகளுக்கு எவ்வித பிரயோசனமும் ஏற்படாமல் போய்விடும் என்பது உண்மைநிலையாகும்.



நன்றி: 'தினக்குரல்'

## மாங்குளம் சந்திப்பு

# – புலிகள் தோற்கடித்த இராஜதந்திரப் பொறி –

தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவும், சிறீலங்கா இராணுவ உயர்மட்டக் குழுவும், மாங்குளத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் சந்தித்துக் கொண்டனர். 1995ல் சந்திரிகா சமாதானத்திற்காக போரைத் தொடுத்ததன் பின்னர் இரு தரப்பும் சந்தித்துக் கொண்டது இதுவே முதல் தடவை என்பதால் இச்சந்திப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

இச் சந்திப்பு மூலம் இணக்கப் பேச்சுக்களுக்கான சந்தர்ப்பங்கள் உருவாகியுள்ளதாக இந்தியாவின் The Hindustan Times எழுதுகின்றது. புலிகளும் சிறீலங்கா அரசும் சந்திக்க முடியும் என்ற நிலவரம் ஏற்பட்டுள்ளதாக சில பிற ஏடுகள் கூறுகின்றன.

**பார்வை**

மறுபுறம் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சரும், அவரது ஜெனிவாவுக்கான தூதுவரும், புலிகளுடன் பேச்சுக்களை நடாத்த வேண்டிவரும் எனப் பகிரங்கமாக கருத்து வெளியிட்டமை மாங்குளம் சந்திப்பை முக்கியத்துவப்படுத்த முனைகின்றது.

ஆனால் உண்மையில் மாங்குளம் சந்திப்பு தமிழ் சிங்கள தேசங்களுக்கு இடையேயான உறவின் பரிணாமத்தைக் காட்டுவது.

சிங்கள அரசையோ, அதன் தலைமையையோ, எமது தலைமையாக ஏற்றுக் கொள்ளாத தமிழர்களும், புலிகளும் சிறீலங்காவுடனான சந்திப்பை இரு சமமான தேசங்களுக்கு இடையேயான சந்திப்பாகவே கருதுகின்றனர்.

இச் சந்திப்புக்கள் மூலம் புலிகள், சிங்கள அரசை ஒரு இராஜதந்திர அரசியல் காய்நகர்த்தலில் வெற்றி கொண்டனர்.

சந்திரிகா தலைமையிலான அரசு, தமிழர்களுடனான போரில் பல இராஜதந்திர அரசியல் பரப்புரை உத்திகளைக் கடைப்பிடித்தது.

புலிகளையும், மக்களையும் பிரித்து போரை வெல்லலாம் என சந்திரிகா கடந்த நாலரை வருடகாலமாக நம்பி வருகின்றார். தனது சகா நீலன் போன்றோர்கள் இரகசியமாக கூறிவந்த இத் தந்திர அரசியலுக்காக சந்திரிகா ஆடிய நாடகங்கள் பல. தீர்வுப் பொதி கூட புலிகளையும், தமிழ் மக்களையும் பிரித்து விடும் என நம்பப்பட்டது.

இந்தக் கருத்துக்களின் மறுவடிவமாக உணவுத் தடையை மக்களுக்கு ஏற்படுத்தி புலிகளை மக்களிடமிருந்து பிரித்துவிடலாம் என்ற அற்ப சிந்தனையாகும். பிற இராணுவ நலன்களுடன் இதுவும் தடையின் நன்மை என கருதப்பட்டது.

முதலில் பாதை முற்றாக மூடப்பட்டது. பின்னர் உணவுச் சிக்கல் தலைதூக்கும் வரை காத்திருந்து பாதை திறப்பிற்கான நிபந்தனையை எதிரி அரசு முன்வைத்தது. புலிகள் இதனை மறுப்பர் என்பதும், இதன் மூலம் புலிகளையும் மக்களையும் பிரிக்கலாம் எனவும் கணக்குக் காட்டப்பட்டது. ஆனால் மக்கள் விவேகமாகச் சிந்தித்து உலக நிறுவனங்களை துணைக்களைத்தனர். புகலிடத் தமிழர்களும் அவ்வாறே செயற்பட்டனர். ஐ.நா. அகதிகள் ஆணைக் குழு மற்றும் அமெரிக்காவின் மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு போன்றன மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்த்தனர்.

கொழும்பில் பிற நாட்டுத் தூதரகங்கள் கேள்வி எழுப்பின. பாதையை தாமே மூடிவிட்டு பின்னர் பிறிதொரு வழியில் புலிகளை 5கிமீ தூரம் பின்னே செல்லுமாறு கூறும் இரணுவ அரசியல் இராஜதந்திர உத்தி பிழைக்கத் தொடங்கியது.

இங்கு புலிகள் தெளிவாகச் செயற்பட்டனர். மக்களின் உணவுச் சிக்கலை சிறீலங்காவின் உள்நாட்டு விடயமாகக் கருதும் கூட்டணி சிந்தனைகளை தூர வீசிவிட்டு மக்களுக்கான உணவு அடிப்படை உரிமை என்பதுடன் பாதையை அடைத்து வைத்து இராணுவ நோக்கத்தை சிறீலங்கா அடைய முயற்சிப்பதை புலிகள் அனுமதிக்கவில்லை.

தமது உத்தி தோற்பதைத் திசை மாற்ற கடும் சமர் நடக்கும் முனை ஊடாக 2500 தமிழ் பொதுமக்களை அனுப்பி மனித கேடயங்களை உருவாக்க எதிரி அரசு முனைந்தது. புலிகள் இதனையும் முறியடித்தனர். கண்ணிவெடிகள் நிரம்பப் பெற்ற பிரதேசங்களுக்குள் ஆடு, மாடுகள் போல் மக்களை அனுப்ப முற்பட்டபோது பதட்டப்படாது புலிகள் சிக்கலை விடுவித்தனர். அங்கும் அரசு தோற்றது.

இதனைத் தொடர்ந்து சந்திரிகாவின் இராஜதந்திர ஊழியன் கதிர்காமர், தடைக்கு இராஜதந்திர விளக்கம் கொடுத்தார். கொழும்புக்கு அழைக்கப்பட்ட சிறீலங்காவின் வன்னிக்கான தளபதி, பிற நாட்டு இராஜதந்திரிகள் முன் விளக்கம் கொடுத்தார். அரசும் படைகளும் சில திட்டவட்டமான கருத்துக்களை இராஜதந்திரிகள் முன் வைத்தன.

இக்கட்டத்தில் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு தமது நிலைப்பாட்டை மீள எழுத்து மூலமாக முன்வைத்தனர். ஏ9 நெடுஞ்சாலையில் மாங்குளம் ஊடாக பொதுமக்கள் பாதுகாப்பு வலயத்தை தற்போதுள்ள இரு தரப்பு முன் அரங்கங்களுக்கும் இடையே நிறுவுவதற்கான உறுதிமொழியை புலிகள் வழங்கினர். புலிகளினால் சரியான நேரத்தில் வழங்கப்பட்ட எழுத்து மூல உறுதி சிங்கள அரசை இராஜதந்திர வியூகத்தில் சிக்க வைத்தது, தாம் முன்பு கேட்டதுபோன்று, புலிகள் 5கிமீ பின் செல்லாமல் உலக நிறுவனங்கள் ஊடாக மனிதாபிமான சிக்கலை தீர்ப்பதற்கு ஏற்பகாய்களை நகர்த்தியபோது அதனில் சிக்கிக் கொண்ட அரசு மீள, ஒரு கடிதம் மூலம் புலிகளை பாதை தொடர்பான விடயங்களுக்கு பொறுப்பேற்குமாறு கூறினர். அன்றிரவே புலிகள் பதிலளித்து, சிறீலங்காவை புலிகள் நிர்ப்பந்த நிலைக்குக் கொண்டு வந்து மாங்குளத்தில் நேரிடையாகச் சந்தித்துக் கொண்டனர்.

இச் சந்திப்பானது புலிகளின் அரசியல் இராணுவ கண்ணியத்தினை புலப்படுத்தியதுடன் பிரச்சினையை அணுகுமுறை ஊடாக சரியான இடத்தில் நிறுத்தும் பிரபாகரன் விதியை நிறுவியுள்ளது.

*– ராஜா*

# விடைபெறும் கூட்டணியின் 'நாடகம்'

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர்(?) சம்பந்தரிற்கு ஜனாதிபதி, பாதுகாப்புப் பிரிவினரின் பாதுகாப்பையும், குண்டு துளைக்க முடியாத வாகனங்களையும் சிறீலங்கா வழங்கியுள்ளது. நீலன் திருச்செல்வத்தின் பேரிழப்பை 'ஓரளவேனும் ஈடுசெய்யும்' தொழில் விசுவாசம் கொண்டவர் எனக் கருதப்படும் சம்பந்தர், தற்போது சிங்கள அரசு மற்றும் பத்திரிகைகளால் தமிழர்களின் தானைத் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் இருந்தவாறு தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சிங்கள அரசுகளினால் நியமிக்கப்பட்டு, அதற்கேற்ப அரசியல் நடாத்தி வரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நவரச நடிப்புக்கான இறுதிக்கட்டம் நெருங்கி விட்டதை கொழும்பு நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

நீலனின் சாவையொட்டி விடுக்கப்பட்ட கண்ணீர் செய்திகளில் ஒரு உண்மை பகிரங்கமாகியது. சந்திரிகா அரசின் உத்தியோகபூர்வமற்ற வெளிவிவகார அமைச்சராக கூட்டணியின் நீலன் செயற்பட்டார் என, கதிர்காமர் 'பகிரங்கமாக' கூறுகின்றார். அமெரிக்க அதிகாரிகள் இதனை உறுதிப்படுத்துகின்றனர்.

காலம் காலமாக ஊகிக்கப்பட்ட ஒரு உண்மையை, அனைவரும் போட்டுடைத்து விட்டனர். தற்போது அது பற்றிய எதுவித வெட்கமும் அற்று நீலனின் நியமன எம்.பி இடத்தை பிடிக்க மாவை சேனதிராசா முயல்வதாக அறிவிக்கப்படுகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் பொறுக்கித்தனம் நீண்ட பாதைகளைக் கடந்து வந்துவிட்டது. வலிமையானதாகவும் ஒன்றுபட்டதாகவும் தமிழர்கள் உள்ளார்கள் என்ற உண்மைத் தோற்றத்தை உடைப்பதற்காக 'கூட்டணி' சிங்கள அரசுகளால் பயன்படுத்தப்பட்டது. கூட்டணியை மிதவாத சாத்வீக தரப்பினராகவும் புலிகளுக்கு ஈடான தலைமையாகவும் கொழும்பு வர்ணித்தது(!). புலிகளும், இராணுவமும் சண்டை புரிய, சந்திரிகாவும் தாமும் பேசி உடன்பாட்டை எட்டலாம் எனக் இக் கூட்டணி, பிற நாட்டு அவதானிகளிடம் இரகசிய கருத்துக்களை விதைத்து வந்தது. நீலனை சந்தித்துவிட்டு செல்லும் வேளைகளில் எல்லாம் இவர்கள் போன்றவர்களால் அமைதி ஏற்படும் எனத் தான் நம்பியதாக அமெரிக்க இராஜங்க அமைச்சின் உதவி செயலாளர் கூறுகின்றார்.



சிவசிதம்பரம் கூட்டணியை விட்டுவிட்டு ஒதுங்கிவிட, சம்பந்தர் - ஆனந்தசங்கரி - நீலன் - மாவை சேனதிராசா கும்பலின் ஆசைகளுக்கும் கனவுகளுக்குமான கூட்டணியாக சமீப காலமாக, கூட்டணி திகழ்ந்தது. யோசப் பரராஜசிங்கம் போன்ற சிலரின் மனித உரிமைகள் பற்றிய கருத்துக்களை தமிழ் மக்களுக்குக் பரபரப்பாகக் காட்டி, தனது நம்பகத்தன்மையை தமிழ் மக்களிடம் பிரச்சாரம் செய்த கூட்டணியின் தலைமைக் கும்பல், சிங்கள அரசின் ஒவ்வொரு இராணுவ அரசியல் தேவைகளையும் 'விசுவாசமாகப் பூர்த்தி' செய்தது. யாழ் குடா நாட்டை ஆக்கிரமித்து அங்கு போலித் தேர்தல்களை நடாத்தி உலகை ஏமாற்ற அரசு முற்பட்ட போது கூட்டணி முன்நின்று அரசுக்கு உதவியது.

தீர்வுப் பொதி என்ற பெயரில் இனப்பிரச்சனையை ஒதுக்கிவிட்டு நாட்டை, பல பிராந்தியங்களாப் பிரித்து தமிழர்களின் பிரச்சனைகளை சிறுமைப்படுத்திய திட்டத்தை 'எழுத' நீலனும், கூட்டணியின் பிற விசுவாசிகளும் முன்நின்று உதவினர். வெளிநாட்டு தலைவர்களுக்கும் துாதரகங்களுக்கும் கூட்டணி தீர்வுப் பொதிக்கான பிரச்சாரத்தினை முன்னின்று செய்தது.

பாரளுமன்றத்தில் சந்திரிகா ரத்வத்தை தலைமைகளுடன் 'எழுதப்படாத விசுவாச' உடன்பாட்டை பேணினர். அவசர காலச்சட்டத்தை எதிர்த்து வாக்களிப்பர். ஏனெனில் எதிர்த்து வாக்களித்தாலும் சந்திரிகா அரசுக்கு ஆபத்தில்லை. அரசின் பட்ஜெட்டில் இராணுவச் செலவீனம் தொடர்பான வாக்கெடுப்பில் ரத்வத்தையை எதிர்ப்பது போல் எதிர்ப்பார்கள்? ஆனால் முழு பட்ஜெட்டுக்கான வாக்கெடுப்பில் அரசை ஆதரித்து இராணுவ செலவுக்கான செலவீனத்தை பாதுகாப்பர். கொழும்பு தமிழ்ப் பத்திரிகைகள் ஊடாக வன்னிக்கு உணவும் யாழிற்கு விமானமும் கேட்கும் சம்பந்தர், மறுபுறம் புலி எதிர்ப்பு தமிழீழ எதிர்ப்பு பிரச்சாரத்தை மறைமுகமாக வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு செய்வார்.

பல்லாயிரம் மக்களின் இறப்பின் மீது அமர்ந்து, பதவி சுகத்தையும் செல்வத்தையும் அனுபவிப்பதில் இல்ங்கைத் தீவின் வரலாற்றிலேயே ஒப்புவமை இல்லாத வெறி கொண்டவர்களாக சம்பந்தர், சங்கரி, நீலன் 'கூத்தணி' திகழ்ந்தது.

ஆனால் இன்று இக் கூத்துகள் தமது முடிவுக்கட்டத்தை நெருங்கி உள்ளன. காற்றுப் புக முடியாத இடத்தில் கூட நுழைவோம் எச்சரிக்கை என புலிகள் கொடுத்த துரோகிகளுக்கான எச்சரிக்கை, இரட்டை வேடத்தைக் கலைக்குமாறு கொடுக்கப்பட்ட இறுதி எச்சரிக்கை போன்றது. சிங்களப் படைகளுடன் இணைந்து அழிவைக் கொடுத்த சில தமிழ்க் கும்பல்களின் பல உறுப்பினர்கள் தமது தவறை உணர்ந்த போதும், கூட்டணி தன்னை மேதாவிகளாக நினைத்து மக்களின் அடிப்படை அறிவைக் கூட மதிக்காதது, வேடிக்கையானது, வினோதமானது.

நீலனின் சாவைத் தொடர்ந்து இன்றும் சிங்கள நாட்டின் பாதுகாப்பை நம்பும் கூட்டணியினர், முன்பு போன்று வேடம் போடுவது சாத்தியமற்றது. தமிழர்களின் துயரங்கள் அதிகரிக்கின்றன. போர் தீவிரமாகின்றது. புலிகளுடனான முரண்பாடு தீவிரமாகின்றது. இந்நிலையில் கூட்டணியின் போக்கிரித்தனமான அரசியல் வேடங்கள், நீடிப்பதற்கான சாத்தியமற்றன. செயற்கையாக தரப்படும் பின்கதவுப் பிரதிநிதித்துவம் முடிவுக்கு வரவேண்டும் என்பது மக்கள் முடிவானால் அதுவே வரலாற்று முடிவுமாகும்.

*- திருமலை சத்தியேந்திரன்*

## சிறீலங்காவுக்காகவே உழைத்தார்

*நீலன் திருச்செல்வத்திற்கு அஞ்சலி செலுத்துவதன் மூலம் நான் இன்றைய கூட்டத்தை ஆரம்பிக்க விரும்புகின்றேன். நான் இன்று இராஜதந்திரிகள் மத்தியில் இவ்வாறு செய்ய விரும்புகின்றேன் ஏனெனில் வெளிவிவகார அமைச்சில் எந்தவித பதவிகளையும் வகிக்காது கடந்த வருடங்களாக சிறீலங்காவின் வெளிவிவகார கொள்கை வகுப்புக்களிலும் பாதைகளிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நீலன் வழங்கினார். பல விடயங்களில் அவரது ஆலோசனைகள், என்னாலும் அமைச்சக பணியாளர்களாலும் பல்வேறு அரசியல் கட்சிகளாலும் அரசின் உச்ச மட்டத்தாலும் பெறப்பட்டன.*

*அவரிடமிருந்த உயரிய உலகத் தொடர்புகளை இன்றைய அரசுக்கு வழங்கினார்.*

*...ஐக்கிய இலங்கையை பாதுகாப்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார்.*

**— சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர், கொழும்பில் பிற நாட்டு இராஜதந்திரிகள் முன் ஆற்றிய உரையில் கூறப்பட்டது.**

## உங்களின் உறவு

**நீங்கள் நீலனுடன் நெருக்கமாக பணிபுரிந்ததை அறிவேன். குறிப்பாக 1994ல் சிறப்பு பாராளுமன்ற குழுக் காலத்தில் நீங்கள் அதிகாரப் பகிர்வுப் பொதியை வரைந்த காலத்தில்...**

**நீலனுக்கு அமெரிக்காவுடன் நீண்ட தொடர்பு உண்டு. எனெனில் அவர் மாணவனாக ஆசிரியராக இங்கு திகழ்ந்தார்.**

— அமெரிக்க உதவி வெளிவிவகார செயலாளர் அமைச்சர், பீரிஸிற்கு அனுப்பிய செய்தி

## தமிழர்கள் கொலையை நியாயப்படுத்துகிறார்கள்

*நீலனின் சாவு உலக சமூகத்தை கோபப்படுத்தி இருக்கலாம். ஆனால் புலிகளிடம் தமது ஆத்மாவை அடகு வைத்துவிட்ட சிறீலங்காவின் தமிழ் சமூகம், கவலைப்படவுமில்லை — எதிர்க்கவுமில்லை.*

*உடல் தகனம் செய்யப்பட்டபின்னர் வெள்ளவத்தையில் இடம் பெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் திருச்செல்வத்தின் கொலை, கதைக்குரிய தலைப்பாக இருந்தது. கலந்து கொண்டவர்களின் தகவல்களின் படி பலர் கொலையை நியாயப்படுத்தினர்....*

*உயிரோடு இருக்கும் போது தமிழரின் இலட்சியத்திற்காக திருச்செல்வம் எதுவித சாதகமான பங்களிப்பும் செய்யவில்லை. அவரது சாவு சமூகத்திற்கு எதுவித வித்தியாசத்தையும் தராது.*

**— இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர், நிருபமா சுப்பிரமணியம்.**



## மனித உரிமைகள் தொழில்?

**வாழ்வில் புனிதத்தையும் இன ஒற்றுமையையும் நம்பும் நீலன், 'மனித உரிமைகளின் பாதுகாவலன்' என்ற தன் நாளாந்த வேலையை செய்வதற்காக போய்க்கொண்டிருந்த' போது மிக கொடுரமாகக் கொல்லப்பட்டமை மிக துன்பகரமானது.**

— ஐ.நா. பாகுபாட்டினை தடுப்பதற்கும் சிறுபான்மை மக்களை பாதுகாப்பதற்குமான உப குழுமுன்பு, *சிறீலங்காப் பிரதிநிதி பாலியக்காரா—*

**நாங்கள் எம்து மிக உண்மையான அனுதாபத்தை நீலன் திருச்செல்வத்தின் மறைவையொட்டி தெரிவிக்க விரும்புகின்றோம். மேலும் மற்றுமொரு இந்து தேசியத் தலைவரை புலிப் பயங்கரவாதிகள் கொலை செய்ததைக் கண்டிக்கின்றோம்.**

— ஐக்கிய சிங்கள பொதுச் சபை வழங்கிய செய்தி

# தலைவரின் செவ்விகள்

14

## முரசின் சிறப்பு ஆவணம்

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

***— தலைவர் பிரபாகரன், பி.பி.சி. செய்தியாளர் ஆனந்தி சிவப்பிரகாசத்திற்கு அளித்த பேட்டி. இது 02.03.1993 அன்று பி.பி.சி. தமிழோசையிலும் உலக சேவையிலும் ஒலிபரப்பாகியது.***

**கேள்வி:** தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வழி முறைகள் பற்றி ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்ற சிறப்புக்குழு, தனிமாகாண அடிப்படையிலான சமஷ்டி அமைப்புத் திட்டமொன்றை முன் வைக்கப்போவதாக நம்பப்படுகிறது. அப்படியானதோர் சமஷ்டி அமைப்பை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?

**பதில்:** தனிமாகாண சமஷ்டி அமைப்புத் திட்டத்திற்கு கொழும்பிலுள்ள அரசாங்க சார்பான தமிழ்க்குழுக்களே கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

பிரேமதாசா அரசின் மூத்த அமைச்சரான திரு.தொண்டமான் அவர்களும் இத்திட்டத்தை நிராகரித்திருக்கிறார். தமிழர் தாயகத்தைத் துண்டாடும் சூழ்ச்சியாகவே இச் சமஷ்டித்திட்டம் உருவாக்கப்பட்டிருப்பதாகத் திரு.தொண்டமான் எனக்குச் சமீபத்தில் எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே, இப்படியான ஒரு திட்டத்தை, அதாவது, தமிழர் தாயகத்தைக் கூறுபோடும் திட்டத்தை நாம் எப்படி ஏற்றுக் கொள்வது?

**கேள்வி:** முஸ்லிம் மக்கள் குறித்து உங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில்:** முஸ்லிம் மக்கள் தனித்துவப் பண்பாடுடைய ஒரு இனக்குழு என்றவகையில் அவர்களது பிரச்சினை அணுகப்பட வேண்டும். முஸ்லிம் மக்களின் தனித்துவம், நில உரிமைப்பாடு பேணப்படும் அதேவேளை, அவர்கள் தமிழ்மக்களுடன் ஒன்றிணைந்து வாழ்வதே அவர்களது சமூக, அரசியல் பொருளாதார வாழ்வைச் சிறப்பிக்கும் என நாம் கருதுகிறோம்.

சிங்களப் பேரினவாதிகளும், சுயநலம்கொண்ட முஸ்லிம் அரசியல்வாதிகளும் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே வேற்றுமையையும் விரோதத்தையும் வளர்த்துவிட முயற்சிக்கிறார்கள். இந்தச் சூழ்ச்சிகளுக்கு முஸ்லிம் மக்கள் பலிக்கடா ஆகக்கூடாது.

**கேள்வி:** வட புலத்திலும் கிழக்கு மாகாணத்திலும் சிங்கள மக்கள் வந்து குடியேறுவதை நீங்கள் எதிர்க்கிறீர்கள். நாட்டின் எந்தப்பகுதியிலும் சென்று வாழ தமிழ் மக்களுக்குள்ள உரிமை சிங்கள மக்களுக்கும் உண்டல்லவா?

**பதில்:** சிங்கள மக்கள் தமிழ்ப் பகுதிகளில் குடியமர்வதை நாம் எதிர்க்கவில்லை. தமிழ்ப் பகுதிகளில் திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றத்தையே நாம் எதிர்க்கிறோம்.

தமிழ்க் கிராமங்களிலிருந்து தமிழ் மக்கள் விரட்டப்பட்டு அங்கு சிங்களக் குடியேற்றம் இடம்பெறுகிறது. தமிழர் தாயகத்தை துண்டாடி, சிதைத்துவிடும் நோக்கில் இக்குடியேற்றங்கள் இடம் பெறுகின்றன. இத்தகைய திட்டமிடப்பட்ட குடியேற்றங்களையே நாம் எதிர்க்கிறோம்.

**கேள்வி:** கிட்டுவின் மரணம் பற்றி உங்கள் உணர்வலைகள் என்ன?

**பதில்:** என்னை ஆழமாகப் பாதித்த உணர்வலைகளை வார்த்தையில் விபரிக்க முடியாது.

கிட்டு ஒரு தலைசிறந்த தளபதி. ஆற்றல்கள் நிறைந்த ஓர் இலட்சியப் போராளி. ஒரு மகத்தான செயல்வீரன். கிட்டுவின் மறைவு, எமது இயக்கத்திற்கு மட்டுமன்றி எமது தேசத்திற்கே ஒரு பேரிழப்பாகும்.



**கேள்வி:** பிரபாகரன் அவர்களே! சமாதான முயற்சிகளில் ஆத்மபூர்வமாக இறங்க நீங்கள் தயாரா? இதற்கு உங்கள் நிபந்தனைகள் என்ன?

**பதில்:** சமாதானத்தை நான் ஆத்மபூர்வமாக விரும்புகிறேன். எனது மக்கள் நிம்மதியாக, சமாதானமாக, சுதந்திரமாக, கௌரவமாக வாழவேண்டும் என்பதே எனது ஆன்மீக இலட்சியம்.

சமாதானத்திற்கு நாம் எவ்வித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை.

சிங்கள அரசுதான் சமாதானத்திற்கும், பேச்சுவார்த்தைகளுக்கும் நிபந்தனைகளை விதித்துக்கொண்டிருக்கிறது.

★ ★ ★

# ஆனையிறவில் நாம் மரபுவழி சமரை நடாத்தினோம்

*'தமிழீழ மக்களின் தேசிய பிரச்சினையின் அடிப்படைகளான தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் தன்னாட்சி உரிமை ஆகியவற்றை முதலில் சிங்கள மக்கள் அங்கீகரிக்க வேண்டும். இந்த அங்கீகாரத்தின் அடிப்படையிலேயே இன ஒற்றுமை சாத்தியமாகும். அரசியல் தீர்வுக்கும் வழி பிறக்கும்'. இவ்வாறு தலைவர் பிரபாகரன் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். யாழ்ப்பாணம் வருகைதந்த பி.பி.சி. நிருபர் திரு.கிறிஸ்மொறிஸ், தலைவர் பிரபாகரனிடம் எடுத்த பேட்டி 04.09.1991 அன்று பி.பி.சியின் ஆசிய சேவையிலும், தமிழோசையிலும் ஒலிபரப்பாகியது. அப்பேட்டியை இங்கு தருகிறோம்.*

**கேள்வி:** புலிப்படையை மரபுவழி இராணுவமாக மாற்ற நீங்கள் எடுத்துவரும் முயற்சி பற்றிக் கூறுவீர்களா? இது புலிப்படையின் முன்னேற்றத்திற்கு எந்த அளவிற்கு முக்கியமானது?

**பதில்:** சிங்கள அரசிற்கு எதிரான எமது ஆயுதப் போராட்டம் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலான நீண்ட வரலாற்றைக் கொண்டது. இந்த நீண்ட வரலாற்றுப் போக்கில் நாம் படிப்படியாக பெரும் வளர்ச்சியடைந்திருக்கின்றோம். நீண்ட காலமாக கெரில்லாப் போர்முறையைக் கையாண்டுவந்த நாம் இப்போது மரபுவழி இராணுவமாக மாறி வருகின்றோம்.

**கேள்வி:** ஆனையிறவில் தமக்குப் பெரும்வெற்றி கிடைத்திருப்பதாக இராணுவம் கூறுகிறதே. போர் உத்தி என்ற முறையில் பிழையான உத்தி ஒன்றைக் கையாண்டு விட்டதாகக் கருதுகிறீர்களா?

**பதில்:** ஆனையிறவுப் போர் ஒரு பெரிய வெற்றியென சிங்கள அரசு கூறுவது வெறும் பொய்ப் பிரச்சாரம். எமது வெற்றிகரமான தாக்குதல்களால் ஆனையிறவுத்தளம் வீழ்ச்சியடையும் நிலை இருந்தது. 800 இராணுவத்தினர் எமது முற்றுகைக்குள் சிக்கிக்கொண்டனர். இவர்களை மீட்பதற்காக 8000 பேர் கொண்டு பெரிய தாக்குதலை நடத்த சிங்கள அரசு நிர்ப்பந்திக்கப்பட்டது. இந்தத்தாக்குதலில் சிங்கள அரசுக்கு என்றுமில்லாத பெரிய இழப்புக்கள் ஏற்பட்டது. ஐந்து மைல் தூரம் படைகளை நகர்த்த 24 நாட்கள் தேவைப்பட்டன. இதனை வெற்றியென எக்காளமிடுவது சிறுபிள்ளைத்தனமானது. ஒரு பெரிய மரபுவழிப் போரை நேருக்குநேர் எதிர்கொள்ளும் பெரும் வளர்ச்சியை புலிகள் இயக்கம் அடைந்துள்ளது. ஆனையிறவுப்போர் இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டு.

**சிங்கள மக்கள் தமிழ்ப் பகுதிகளில் குடியமர்வதை நாம் எதிர்க்கவில்லை. தமிழ்ப் பகுதிகளில் திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றத்தையே நாம் எதிர்க்கிறோம்.**

இராணுவ ரீதியில் இது ஒரு பெரிய வளர்ச்சியைக் குறிக்கிறது. இந்த வளர்ச்சி எமது விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிதான். இந்த வளர்ச்சி எமது விடுதலைப் போராட்டத்தின் பெரும் திருப்புமுனையாகவும் அமைகிறது. இந்த வளர்ச்சி மூலம் சிங்கள அரசு ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ளவேண்டும். அதாவது இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்பதுதான் அது.

**கேள்வி:** விடுதலைப் புலிகள் அரசியல் கட்சியொன்றை அமைத்திருந்தும்கூட புலிப்படையினர் முக்கியமாக ஈவிரக்கமற்ற இராணுவ அமைப்பு என எதிர்த்துக் குரல் எழுப்புவோர் கூறுகின்றனர். உங்கள் இயக்கத்தின் அரசியல் பங்கு பணிபற்றிக் கூறமுடியுமா?

**பதில்:** அப்படிச் சொல்வது முற்றிலும் தவறு. நாம் பிரமாண்டமான அரசியலமைப்பைக் கட்டி எழுப்பியுள்ளோம். எமது மக்களிடையே சிவில் நிர்வாகம், உணவுற்பத்தி, நிவாரணம், சமூகசேவை, அகதிகள் சேவை போன்ற விடயங்களை எமது அரசியல்பிரிவே கவனித்து வருகின்றது. எமது பகுதிகளிலுள்ள மக்களின் அன்றாட வாழ்வில் எங்களுடைய இயக்கம் பெருமளவு பங்கு வகித்து வருகிறது என்பது உண்மை.

**கேள்வி:** பேச்சுக்கள் மூலம் அரசியல்தீர்வு ஏற்பட வழி பிறக்குமா?

**பதில்:** தமிழ் மக்களின் தேசிய பிரச்சினையின் அடிப்படைகளான தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழரின் தன்னாட்சி உரிமை ஆகியவற்றை முதலில் சிங்கள மக்கள் அங்கீகரிக்க வேண்டும். இந்த அங்கீகாரத்தின் அடிப்படையிலேயே இன ஒற்றுமை சாத்தியமாகும். அரசியல் தீர்வுக்கும் வழி பிறக்கும்.

*(முற்றும்)*

# கால நதிக்கரையில் மீள நினைக்கிறேன்

**1994 சித்திரை–வைகாசி மாத வெளியீடான 'வெளிச்சம்' வெள்ளி இதழில் 'கால நதிக்கரையில் மீள நினைக்கிறேன்' என்ற தலைப்பில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களால் வழங்கப்பட்ட சிறப்புப் பேட்டி.**

**கேள்வி:** இப்போராட்டச் சூழலில் பாதிப்புக்குள்ளான சிறுவர் நலனில் நீங்கள் அதிக ஆர்வமும் அக்கறையும் காட்டி பல செயற்திட்டங்களையும் உருவாக்கி வருகின்றீர்கள். இந்தக் குழந்தைகளை அரவணைத்து அவர்களின் எதிர்கால வாழ்வு சுபீட்சம் அடைய வேண்டும் என்று நீங்கள் விரும்புவதன் காரணம் என்ன?

பதில்: ஒரு நாட்டைக் கட்டியமைக்க நான் துடிக்கிறேன். அதனையே எனது வாழ்க்கையின் இலட்சியமாக வரித்துக் கொண்டுள்ளேன். நாம் கட்டியெழுப்ப முனையும் இந்த நாட்டுக்கு எதிர்காலச் சந்ததியே ஆதாரமானது. எனவே நாட்டை அமைப்பதோடு எதிர்கால சந்ததியையும் உயரிய பண்புகளுடனும் வளர்த்து எடுக்க வேண்டியது முக்கியமானதாக நான் கருதுகின்றேன். இதனால்தான் எதிர்காலச் சந்ததியை வளர்ப்பதில் அதிகளவு அக்கறை காட்டுகிறேன். எமது நாட்டின் எதிர்கால சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரையை உருவாக்க வேண்டும் என்பதே எனது அவா. அறிவியல் ஆற்றல் மிகுந்தவர்களாக, தேசத்தில் பற்றுக்கொண்டவர்களாக, நேர்மையும், கண்ணியமும், வீரமும், மானமும் உள்ளவர்களாக, போர்க்குணம் மிக்கவர்களாக இந்தப்புதிய பரம்பரை உருவாகவேண்டும். இந்தப் போர்ச் சூழலினால் பாதிக்கப்பட்ட சிறுவர் சிறுமிகளை நாம் அரவணைத்து வளர்த்து வருகின்றோம். இவர்களை நான் அநாதைகளாகவோ, யாருமற்றவர்களாகவோ கருதவில்லை. இவர்கள் தமிழன்னையின் குழந்தைகள். இவர்கள் எம்மண்ணில் மலர்ந்துள்ள புஷ்பங்கள். நாம் எமது மொழியையும் மண்ணையும் தாய்மொழியென்றும், தாய்மண்ணென்றும் காண்பது போன்று இவர்களையும் எமது தேசியத்தாயின் பிள்ளைகளாகவே கருதுகின்றேன். இந்தச் சிறுவர்களை சிறப்பாக வளர்த்தெடுத்து அவர்களுக்குச் செம்மையான கல்வியை ஊட்டி எமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக உருவாக்குவது எமது தலையாய கடமையாகக் கருதுகின்றேன். அதனால் தான் இவர்கள் மீது எனது விசேட கவனத்தைச் செலுத்துகின்றேன்.

# ஜேர்மனியில் ஏழாவ
# தமிழீழ தேசிய மா
# விளையாட்















ஜேர்மனியில் பரவலாக வாழும் தமிழ் மாணவர்களை ஒன்றிணைக்கும் பொருட்டு தமிழ் மாணவர் அமைப்பின் ஜேர்மன் கிளை 1993-ம் ஆண்டு முதல் தமிழீழ தேசிய மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகின்றது. இந்தப் போட்டிகள் ஜேர்மன் தழுவிய நிலையில் ஆரம்பித்து பின்பு மாநிலங்கள் அளவில் விரிவடைந்தன.

தமிழ் மாணவர்களின் ஆர்வமே இதற்கு முக்கிய காரணமாகும். நீச்சல் போட்டி உட்பட அனைத்து மெய்வல்லுநர் போட்டிகள், கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், அணிவகுப்புப் பயிற்சிக்கான போட்டிகள், நாட்டின் நிகழ்வுகளை ஞாபகப்படுத்தும் 'ஒப்பனையும் பாவனையும்' ஆகியபோட்டிகள் ஜேர்மன் தமிழ் மாணவர் அமைப்பின் 'மாவீரர் வெற்றிக்கிண்ணப் போட்டிகளில்' அடங்கும்.

இவ்வருட மாவீரர் வெற்றிக் கிண்ணப் போட்டிகள் நீச்சல் போட்டியுடன் ஆரம்பமாகின. அடுத்து கரப்பந்தாட்டப்போட்டி இடம்பெற்றது.

## மாநிலப் போட்டிகள்:

கடந்தவருடம் மெய்வல்லுநர் போட்டிகள் நான்கு மாநிலங்களில் நடைபெற்றன. ஆனால் இம்முறைபோட்டிகள் முன்ஸ்ரர், பிராங்பேர்ட் ஆகிய இரு மாநிலங்களில் நடைபெற்றன. இவ்விரு மாநிலப் போட்டிகளிலும் இறுதிப்போட்டிக்கான விளையாட்டு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

ஜேர்மனியிலுள்ள தமிழாலயங்களில் இருபது தமிழாலயங்கள் உதைபந்தாட்டத் தெரிவுப் போட்டிகளில் கலந்துகொண்டன. இந்தப் போட்டிகள் மூன்று பிரிவுகளாக நடைபெற்றனி. 10 வயதிற்குட்பட்ட மாணவர்கள், 15 வயதிற்குட்பட்ட மாணவர்கள், 20 வயதிற்குட்பட்ட மாணவர்கள் ஆகியவையே அம்மூன்று பிரிவுகளாகும்.

இதனையடுத்து கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டத் தெரிவுப்போட்டிகள் நடைபெற்றன. இதில் ஜேர்மனி முழுவதிலுமிருந்து இருபது தமிழர்விளையாட்டுக் கழகங்கள் கலந்துகொண்டன.

## இறுதிப் போட்டிகள்:

1999-ம் ஆண்டுக்கான மெய்வல்லுநர், உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகள் 17.07.99 அன்று எசன் நகர குருகா விளையாட்டு மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றன. தமிழீழ தேசியக் கொடியை மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்த திருமதி.கனகலிங்கம் ஏற்றிவைத்தார். அமைதி வணக்கத்தையடுத்து திரு. கனகலிங்கம் மங்கல விளக்கை ஏற்றிவைத்தார்.

## புலிக்கொடி வானளாவிப் பறந்தது

இவ்வைபவத்தில் தமிழ் மாணவர் அமைப்பினருடன் அதன் பொறுப்பாளர் திரு. இராஜசுந்தரம், தமிழீழ விடுதலைப் புலிகளின் இணைப்பாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர். தமிழீழ தேசியக் கொடியான புலிக்கொடி வானளாவிப் பறந்து கொண்டிருக்க, மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்றன. அதற்கு முன்னர் அணிநடைப்பயிற்சி ஆரம்பமாகியது. இதில் வியூப்பற்றால் தமிழாலயம், கிறிபில்ட் தமிழாலயம், மேயபுஷ் தமிழாலயம் ஆகியவை கலந்து கொண்டன.

### சிறந்த மெய்வ

| வயது | பிரிவு | பெயர் |
|---|---|---|
| 9–11 | ஆண்கள் | சார்லஸ் மகேசன் |
| 9–11 | பெண்கள் | நிலானி அன்ரன் |
| 11–13 | ஆண்கள் | மைக்டாணி பிரா |
| 11–13 | பெண்கள் | மிதிலா திருச்செல் |
| 13–15 | ஆண்கள் | நிராஜ் சிவஞானப் |
| 13–15 | பெண்கள் | சிந்துஜா தங்கவே |
| 15–17 | ஆண்கள் | யுகனேசன் பாஸ்க |
| 15–17 | பெண்கள் | ஜெகதா இலச்சுமி |
| 17–20 | ஆண்கள் | நடராசசுந்தரம் றத் |
| 17–20 | பெண்கள் | பைரவி திருச்செ |
| 20 மேல் | ஆண்கள் | ஜெயந்தன் குண |
| 20 மேல் | பெண்கள் | மலர்விழி லோகந |

ாவது வருடமாக நடைபெற்ற

# மாவீரர் வெற்றிக்கிண்ண

# ட்டுப் போட்டி 99





### ஓட்டப்போட்டிகள் ஆரம்பம்:

மாநில ரீதியாகத் தெரிவு செய்யப் பட்டோருக்கான ஓட்டப்போட்டிகள் முதலில் ஆரம்பமாகின. 50 மீற்றர், 75 மீற்றர், 100 மீற்றர், 400 மீற்றர் ஆகிய ஓட்டப்போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றன. இதேவேளையில் மைதானத்தின் அடுத்த பகுதியில் நீளம் பாய்தலும், உயரம் பாய்தலும் நடைபெற்றன. இந்தப்போட்டிகளில் 5 வயது முதல் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

### குண்டெறிதல் போட்டி:

மைதான மற்றுமொரு பகுதியில் குண்டெறிதல் போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்தது. இந்தப் போட்டிகளில் 15 வயதுமுதல் இருபது வயதிற்கு மேற்பட்டோர் வரை கலந்துகொண்டனர்.





### பரிசளிப்பு:

போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பரிசளிப்பும் இடம்பெற்றது. முடிந்த போட்டியில் வெற்றிபெற்றோருக்கு உடனுக்குடன் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இவற்றை மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்த திரு. திருமதி கனகலிங்கம் தம்பதிகள் வழங்கினர். போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு மாவீரர் வெற்றிக்கிண்ணங்களும், தங்கம், வெள்ளி, பித்தளைப் பதக்கங்களும் வழங்கப் பட்டன.

### உதைபந்தாட்ட இறுதிப்போட்டி:

இதனையடுத்து உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகள் ஆரம்பமாகின. தமிழாலயங்களுக்கிடையேயான பத்துவயதிற்குட்பட்ட மற்றும் 15 வயதிற்குட்பட்ட வயதினருக்கிடையேயான மாணவர்களுக்கிடையே உதைபந்தாட்டப்போட்டிகள் ஏற்கனவே இடம்பெற்று, இறுதித்தெரிவும் இடம்பெற்றிருந்தன.

இருப்பினும் இவ்விரு பிரிவினருக்கிடையேயும் காட்சி உதைபந்தாட்டப்போட்டிகள் இடம்பெற்றன. ஆனால் 20 வயதிற்குட்ட தமிழாலய மாணவருக்கிடையேயான உதைபந்தாட்டப்போட்டியில், சுட்காட் தமிழாலயமும் டியுஸ்பேர்க் தமிழாலயமும் மோதிக்கொண்டன.

மிகவும் சுறுசுறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் சுட்காட் தமிழாலயம் வெற்றிபெற்றது.

இதனையடுத்து கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டி ஆரம்பமாகியது. இதில் பெர்லின் தமிழர் விளையாட்டுக் கழகமும், பக்நாத் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன. இதில் பக்நாத் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது. போட்டி பார்வையாளர்களை பெரிதும் உற்சாகப்படுத்தியது.



### ஒப்பனையும் பாவனையும்:

நாட்டின் நிகழ்வுகளை தமிழாலயமாணவர்கள் மைதானத்திற்குக் கொண்டுவந்தனர். ஒப்பனையும் பாவனையும் போட்டியின்போது எங்கும் பரபரப்பாகப் பேசப்படும் செம்மணி புதைகுழியும் மைதானத்திற்கு வந்திருந்தது. மாணவர்கள் ஒப்பனையும் பாவனையும் செய்து காட்டினர்.

இதன்பின் குழந்தைகளுக்கான மழலையர் ஓட்டப்போட்டி நடைபெற்றது. பார்வையாளர் பகுதிகளிலிருந்து குழந்தைகள் இப் போட்டியில் பங்குபற்றினர். நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் மைதானத்தில் ஓடியதில் பார்வையாளர்கள் பலமாகக் கைதட்டி ஆரவாரம் செய்தனர். இதனையடுத்து பரிசளிப்பு வைபவம் தொடர்ச்சியாக நடைபெற்றது. சிறந்த தமிழாலயம், சிறந்த விளையாட்டு வீரர், சிறந்த உதைபந்தாட்டக் கழகம் என மாவீரர் வெற்றிக்கிண்ணங்கள் வழங்கப்பட்டன. மிகச் சிறப்பாக நடைபெற்ற இப்போட்டிகளின் முடிவுகள் இங்கு வெளியிடப்படுகின்றன.



### ையவல்லுநர்

| பயர் | தமிழாலயம் |
|---|---|
| மகேசன் | Münster |
| அன்ரன் | Coesfeld |
| ணி பிரான்சிஸ் | Münster |
| திருச்செல்வம் | Meerbusch |
| வஞானம் | Meerbusch |
| தங்கவேல் | Stutgart |
| ன் பாஸ்கரமூர்த்தி | Essen |
| இலச்சுமிகாந்தன் | Meerbusch |
| ந்தரம் றதீபன் | Bielefeld |
| திருச்செல்வம் | Meerbusch |
| ன் குணபாலசிங்கம் | Meerbusch |
| லோகநாதன் | Frankfurt |

# தமிழர் விளையாட்டு விழாவில் 'சிறுவர் முற்றம்' அறிவியல் போட்டி

**வாருங்கள்! வெல்லுங்கள்!!**
**சிறுவர் முற்ற மருமக்களே!**

இது உங்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்திதானே. எதிர்வரும் 22.08.99 அன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரான்ஸ் கிளை நடாத்தும் மாபெரும் தமிழர் விளையாட்டு விழாவைக் காண வருகின்ற சிறுவர்களை ஈழமுரசு சிறுவர் முற்றம் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது.

இவ்விழா நடைபெறும் மைதானத்தில் அமைக்கப்படவுள்ள 'ஈழமுரசு காட்சியக'த்திற்கு உங்களை அன்போடு அழைக்கின்றோம்.

அங்கு வருகை தரும் சிறுவர்களாகிய உங்களுக்கு பொது அறிவு வினா–விடை போட்டியொன்றினை சிறுவர் முற்றம் நடாத்தவுள்ளது. தமிழ் எழுத, வாசிக்கத் தெரிந்த சிறுவர்களே இதில் பங்கெடுக்க முடியும். இப்போட்டியில் வெற்றிபெறும் உங்களுக்கு ஆச்சரியமான பரிசுகள் காத்திருக்கின்றன.

சிறுவர் முற்ற மருமக்களே! தயாராகிவிட்டீர்களா? உங்களை வரவேற்க ஆவலுடன் காத்திருக்கிறோம்.

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வன் தி.சன்ஜீவ், செல்வி கஸ்தூரி சுத்தியராயன், செல்வி தாரணி ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## குறள் முற்றம்

**'கைம்மாறு வேண்டா கடப்பாடு: மாரிமாட்டு என்
ஆற்றும் கொல்லோ உலகு'**

உலகத்தாரிடம் எதையும் எதிர்பார்த்து மழை பெய்வதில்லை. அதுபோல உதவி செய்வதை கடமையாகக்கொண்டவர்கள் அந்த் உதவிக்கு கைம்மாறு கருதுவதில்லை.

# அறிவியல் முற்றம்

**சொற்சிதறல் எண் - 42**

பிள்ளைகளே!
சொற்களைக் கண்டுபிடிக்க முயன்றுபாருங்கள்.
முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | X 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | X 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | X 24 | 25 |

### இடமிருந்து வலம்

1. 1–2 நாம் வாழும் கிரகம்
2. 6–8 ஊர்ந்து செல்லும் உயிரினம்.
3. 11–12 வேகத்தைக் குறிக்கும்.
4. 21–23 தமிழ்நாடு மாநிலத்தின் தலைநகர்
5. 4–5 இதனை எம்மால் தாங்கமுடிவதில்லை. இங்கு எழுத்துக்கள் வலமிருந்து இடமாக உள்ளது.

### மேலிருந்து கீழ்

6. 1–16 தமிழீழத்தில் உள்ள சிறு நகரம் ஒன்றின் பெயர். இங்கிருந்த எதிரிப் படைகளின் முகாம் ஒன்று, முன்னர் விடுதலைப்புலி போராளிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.
7. 2–22 நண்பனையும் குறிக்கும். சூரியனையும் குறிக்கும்.
8. 8–18 பெண்ணைக் குறிக்கும் சொல்.
9. 14–19 விளக்கு ளிவதற்கும் உதவும். மூன்றையும் குறிக்கும்.
10. 5–25 சங்க காலத்து பாடல் தொகுதி ஒன்றைக் குறிக்கும்.

**சொற்சிதறல் எண் நாற்பத்தி ஒன்றின் விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| ம | து | | ம | ரை |
| தி | றை | | ற | |
| | மு | த் | தி | ரை |
| கா | க | ம் | | து |
| து | ம் | ம | ல் | ம |




# குட்டிக்கதை படிப்போம்

## காகம் தந்த பாடம்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

தம்பி தங்கைகள் மிட்டாய் கேட்டதையும், மீனா அம்பிகா அவர்களுக்குச் சொன்ன பதிலையும் அவர்கள் அப்பா பார்த்துக்கொண்டிருந்தார். அவர் மிட்டாய் கேட்ட அந்த குழந்தைகளை அருகில் அழைத்து வேறு மிட்டாய்களை வரவழைத்துக் கொடுத்து வீட்டுக்கு அனுப்பினார்.

அடுத்த நாள்!

மீனா-அம்பிகா வீட்டில் அவர்கள் அம்மா செய்து வைத்திருந்த முறுக்குகள் சில கெட்டுவிட்டிருந்தன. அவைகளைக் காக்கைகளுக்குப் போடும்படி அவர்களிடம் கொடுத்தாள் மீனாவின் அம்மா.



இருவரும் வீட்டிற்குப் பின்புறம் சென்றார்கள். அங்கே ஒரே ஒரு காக்கை உட்கார்ந்திருந்தது. ஒரு முறுக்கை எடுத்துப் போட்டாள் மீனா! காக்கை அருகில் வந்து அதை முகர்ந்து பார்த்துவிட்டு 'கா...கா...கா...' என்று கழுத்தைச் சாய்த்துச் சாய்த்துக் கத்தியது. ஆனால் முறுக்கைத் தின்னவில்லை.

அம்பிகா அடுத்த முறுக்கை எடுத்துப்போட்டாள். அதற்குள் இன்னொரு காக்கை அங்கு வந்து உட்கார்ந்தது. ஆனால் முறுக்கைத் தின்னவில்லை. முதல் காக்கையுடன் சேர்ந்து அதுவும் 'கா...கா...கா...' என்று கத்த ஆரம்பித்துவிட்டது.

மீனா இன்னும் சில முறுக்குகளை எடுத்துப் போட்டாள்! ஒவ்வொரு காக்கையாக அங்கே வந்து உட்கார்ந்தன. எல்லாமே 'கா..கா..கா' என்று கத்திக் கொண்டேயிருந்தன. கடைசியாக இருபது காக்கைகள் கூடிவிட்டன. பிறகுதான் அவை முறுக்குத் துண்டுகளைத்தின்னத் துவங்கின.

'அம்பிகா! காக்கை தனக்குக் கிடைத்த உணவை மற்ற காக்கைகளையும் கூப்பிட்டு பகிர்ந்து உண்ணுமாம்! அதனால்தான் இப்படி கூட்டம் சேர்ந்த பிறகு முறுக்கைக் கொத்தி விழுங்குகிறது' என்றாள் மீனா!

'ஆமாம் மீனா! எங்கள் வகுப்பு ஆசிரியரும் ஒரு நாள் இதைப்பற்றி சொல்லியிருக்கிறார். திருவள்ளுவர் கூட இந்தக் காக்கையின் குணத்தைப் பாராட்டியிருக்கிறாராம்!' என்றாள் அம்பிகா.

'ஆமாம்! அதனால்தான் நாம் பண்டிகை தினங்களில் கூட வீட்டில் செய்த இனிப்பு, கார பண்டங்களை அக்கம் பக்கம் வீடுகளில் கொடுத்து, மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொள்கிறோம்! அன்பைப் பரப்புகிறோம்! இதுதான் நல்ல பண்பாடு!' என்றார் அருகில் நின்றிருந்த அவர்க்ள் அப்பா.

மீனா கொஞ்ச நேரம் யோசிப்பது போல இருந்தாள். 'என்ன மீனா யோசனை?' - அப்பா கேட்டார்.

'அப்பா!... அப்படியானால் நாங்கள் நேற்று எங்களுக்குக் கிடைத்த மிட்டாய்களை தம்பி தங்கைகளுக்குக் கொடுக்காமல் வந்து விட்டோமே! இது தவறா?' என்று கேட்டாள் மீனா.

'அந்தக் குழந்தைகளுக்கும் நீங்கள் மிட்டாய்களைக் கொடுத்திருந்தால், உங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியாயிருந்திருக்கும். இந்தக் காக்கைகள்கூட மற்ற நண்பர்களைக் கூப்பிட்டு, கூடித்தின்று மகிழ்ச்சியாயிருக்கிறது பாருங்கள்!' என்றார் அப்பா!

காக்கைகள் மகிழ்ச்சியுடன் ஒன்றின்மேல் ஒன்று பறந்து முறுக்குத் துண்டுகளைவிழுங்கிக் கொண்டிருந்தன.

'ஆமாம் அப்பா! நேற்று நாங்கள் மற்ற குழந்தைகளுக்கும் மிட்டாய் தராமல் வந்தது தவறுதான். இப்பொழுதே இந்தத் தெருக் குழந்தைகளுக்கு மிட்டாய்களைக்கொடுத்துவிட்டு வருகிறோம்!' என்றபடி ஒரு மிட்டாய்ப்பொட்டலத்தைத் தூக்கிக் கொண்டு வெளியே ஓடினார்கள் மீனாவும், அம்பிகாவும்!

மீதமிருந்த முறுக்குத் துண்டுகளையும் அந்தக் காக்கைகளுக்குப் போட்டார் அப்பா!

(முற்றும்)

# தகவல் முற்றம்

## மேதைகள் வாழ்விலே...

★ ஹிட்லர் ரஷ்யாவின் மீது படையெடுத்திருந்த சமயம், கிழக்கு போர் முனையில் உள்ள வீரர்களை ஊக்குவிப்பதற்காக வந்திருந்தார். வீரர்களைப் பார்த்து ஆர்வ மொழிகள் கூறி வரும்பொழுது ஒரு வீரனிடம் திடுதிப்பென்று கேட்டார், 'உன் அருகில் சோவியத் ரஷ்யா குண்டுவிழும்போது உன் இறுதி விருப்பம் என்னவாக இருக்கும்?'

அந்த வீரன் சட்டென பதில் சொன்னான். 'என்னருகில் தாங்களுமிருக்க வேண்டுமென்பதே என் விருப்பமாக இருக்கும்.'

ஹிட்லர் சிரித்துக்கொண்டே நகர்ந்தார்.

★ இங்கிலாந்தின் மூன்றாம் ஜோர்ஜ் வாழ்ந்த காலத்தில், பிட் என்பவர் பிரதமராக இருந்தார். அவர் பொதுச் சபையில் ஒரு சமயம் பேசுகிற பொழுது, 'இந்த மூன்றாம் ஜோர்ஜ் மன்னருக்கு ஒரு கழுதையின் மூளை கூட கிடையாது' என்றார்.

உடனே சபையில் கூக்குரல்கள் எழுந்தன. 'இது இராஜது ரோகம். உடனே பிட் மன்னிப்புக் கேட்க வேண்டும்' என்றார்கள்.

பிட் எழுந்தார். 'நான் சொன்ன கருத்தை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன். அப்படி நான் சொன்னது தவறுதான். நமது மூன்றாம் ஜோர்ஜ் மன்னருக்கு, கழுதையின் மூளை நிறைய இருக்கிறது' என்றார்.

★ புகழ்பெற்ற நகைச்சுவை எழுத்தாளர் மார்க் ட்வைனை ஒரு நிருபர் பேட்டிகண்ட போது, 'நான் இளைஞனாக இருந்தபோது ஜனாதிபதி மேடிசன் என்னிடம் சொன்னார்...' என்று எதையோ கூற வாயெடுத்தார். உடனே நிருபர் இடைமறித்து, 'மேடிசன் ஜனாதிபதியாக இருந்தபோது நீங்கள் பிறந்திருக்கவே மாட்டீர்களே?' என்று கேட்டதும், ட்வைன் சொன்னார்...

'அச்சுக்குப் போகுமுன் தவற்றைத் திருத்திய முதல் நிருபர் நீங்கள்தான் என்று நினைக்கிறேன்.'

*– கி. முத்துராமலிங்கம்.*

# கட்டுரை முற்றம்

## தொலைக்காட்சி

இன்று மனிதனுக்குப் பயன்படும் நவீன விஞ்ஞான சாதனங்கள் யாவும் மனிதனது வாழ்க்கையை இலகுபடுத்தியுள்ளன.

அவனது வாழ்க்கையை வளப்படுத்தியுள்ளதுடன், உலகையே மிக மிகச் சுருக்கி வைத்துள்ளன.

எங்கோ தொலை தூரங்களில் நடக்கும் நிகழ்வுகளை எல்லாம் அதே நேரத்தில் நாம் இருந்த இடத்திலிருந்தே பார்க்க முடிகிறது.

கலை நிகழ்ச்சிகள், கல்வி, விளையாட்டு, அரசியல், இயற்கை அழிவுகள், யுத்தங்களின் பாதிப்புகள், அவலங்கள் எனப் பல்வேறு நிகழ்வுகளை எம் கண்முன்னே உடனுக்குடன் தருகிறது தொலைக்காட்சி. இது இன்றைய மனிதனுக்கு அவசியமானதாகிவிட்டது.

மனிதனுடைய பொது அறிவை வேகமாக வளர்த்துச்செல்கிறது தொலைக்காட்சி.

வியாபாரத் துறையினர்க்கு இது செய்யும் சேவை மிகப்பெரிது.

மாணவர்கள் தொலைக்காட்சியிலிருந்து கற்றுக் கொள்ள எவ்வளவோ அறிவுபூர்வமான விடயங்கள் உள்ளன. விஞ்ஞான வளர்ச்சி, தொழில்நுட்பம், அரசியல், கலை நிகழ்வுகள், உயிரினங்களின் வாழ்க்கை முறை, மனித வரலாறு, நாளாந்த பல்வேறு நிகழ்வுகள், சினிமா எனத் தொலைக்காட்சிச்சேவை பயனுடையது.

தமிழ் பேசும் சிறார்களே, தொலைக்காட்சிச் சேவையை உங்கள் அறிவு விருத்திக்குப் பயன்படுத்தி உங்கள் வாழ்க்கையை வளப்படுத்துங்கள்.

# திலீபனின் நினைவுநாள் தாக்குதலில் இருந்து தப்பித்துக்கொண்ட மின்னல்

## மணலாறு ஒரு வீரவரலாறு 29



தென்தமிழீழம் தமிழீழ விடுதலைக்காக அளப்பரிய உயிர்களை அர்ப்பணம் செய்திருக்கின்றது. அந்த மண்ணில் இருந்து வந்தவன் தான் கப்டன் மைக்கலும். ஒப்பந்தம் என்று கூறிக்கொண்டு தமிழ்மண்ணை ஆக்கிரமித்திருந்த இந்தியப்படையின் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரும், தமிழ் மக்களின் மீதான தாக்குதல்களும் தென்தமிழீழத்தில் சிங்களப்படையையும், சிங்கள காடையர்களையும் பெரும் மகிழ்ச்சிக்கு உள்ளாக்கியிருந்தது. தமிழ் மக்களை விரட்டியடித்து தனது நில அபகரிப்புத் திட்டத்தை செயற்படுத்த 'வசதியான ஒரு சந்தர்ப்பம்' இப்போது கிடைத்திருப்பதாக நினைத்தது. திருமலை மண்ணில் இருந்து தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டு அதனை சிங்கள தேசமாக மாற்ற வேண்டும் என்ற சிறீலங்கா அரசின் திட்டத்திற்கு செயல்வடிவம் கொடுத்தவர்கள் சிங்களப் படைகளும், காடையர்களுமே! இந்திய இராணுவமும், அவர்களுடன் சேர்ந்து இயங்கிய தமிழ்க் குழுக்களும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க, சிங்களம் தனது நடவடிக்கைகளை இலகுவாகவும் வேகமாகவும் செயற்படுத்த தொடங்கியிருந்தது. இதனால் இவ் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக தமிழ்மக்கள் கொதித்தெழுந்தனர். அவ்வேளையில் திருமலையின் இளைஞர்கள் சிலர் சிங்களத்தின் இத் திட்டங்களை உடைத்தெறியவும் அவர்களை அப்பகுதிகளை விட்டு அடித்துவிரட்டவும் தொடர்ந்து பல செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தினர். மக்களுக்கு பாதுகாப்பாக இரவுக்காவல் கடமைகளில் ஈடுபடத்தொடங்கினார்கள். அந்த இளைஞர்களில் ஒருவனாக மைக்கலும் இருந்தான்.

மக்களின் பாதுகாவலர்களாக இருந்த இவ் இளைஞர்கள், புலிகளின் சுவரொட்டிகள் மூலமான செய்திகளை இராணுவ காவல்களையும் மீறி மக்கள் அதிகளவில் கூடுமிடங்களில் ஒட்டி அத்தகவல்கள் மக்களை சென்றடையுமாறு செய்தனர். இச் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு பொறுப்பாக நின்று மைக்கலே செயற்பட்டான். ஆனால் ஒருமுறை மைக்கலினால் தான் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன என்ற தகவல் இந்தியப்படையினரையும் தமிழ்க்குழுக்களையும் சென்றடைகின்றது. மைக்கல் கைது செய்யப்படுகின்றான். கைது செய்த படையினரும், தமிழக்குழுக்களை சேர்ந்தவர்களும் அவனை சுவரொட்டிகளை ஒட்டிய இடங்களுக்கு அழைத்து செல்கின்றனர். இவனால் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை 'வாயினாலேயே உரித்து' அவற்றை உண்ணும்படியும் பணிக்கப்பட்டான். அப்போது அவன்பட்ட வேதனையை இறக்கும்வரைக்கும் அவன் மறக்கவேயில்லை. ஒரு ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருந்து சித்திரவதைகளை அனுபவித்துவிட்டு, 1989 காலப்பகுதியில் விடுதலையாகி வெளியே வந்தவன், நேராக புலிகளின் பயிற்சிப் பாசறைக்குத்தான் வந்தான். பயிற்சியை முடித்துக்கொண்டு திருமலை மண்ணுக்கே சென்று இந்தியப்படைகளையும் தேசத்துரோகிகளையும், சிங்கள ஆக்கிரமிப்பாளர்களையும் எதிர்த்து போர் செய்தான். இந்தியப்படை வெளியேறியதன் பின்னர் புலிகளின் போர்த்திறனை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டிய ஆகாய கடல் வெளி சமரில் பங்கெடுத்து விழுப்புண் அடைந்த நிலையில், யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தான். அவ்வேளையில்தான் மணலாற்றில் மின்னல் நடவடிக்கை தொடங்கியிருந்தது. காயம் முற்றாக ஆறும் முன்னரே காட்டினை எதிரி பிடித்துவிடக்கூடாது எனக்கூறிக்கொண்டு மணலாற்றுக்கு வந்தான். மின்னலில் எதிரிக்கு அழிவை ஏற்படுத்தி களமாடினான். அவ்வேளை, எதிரியின் குண்டுபட்டு மீண்டும் விழுப்புண் அடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தான். ஆனால் இம்முறை அவன் களம் திரும்பவேயில்லை. மணலாற்று மண்ணினைக் காத்துநின்ற போரில் தன் பணிக்கு ஓய்வுகொடுத்து விழிகளை மூடிக்கொண்டான்.

★ ★ ★

திலீபனின் நினைவு நாளுக்கு இன்னும் இரண்டு நாட்களே எஞ்சியிருந்தன. பகலில் நேரடி மோதல்களையும் விமான, எறிகணை தாக்குதல்களையும் எதிர்கொண்டபடி இருந்த போராளிகள், இரவில் திலீபனின் நினைவு தினத்தில் மேற்கொள்ளப்போகும் தாக்குதலுக்கான வியூகங்களை அமைக்கத்தொடங்கினார்கள். திலீபனின் பெயரையே தனது பெயராகவும் கொண்டிருந்த 2ம் லெப். திலீபனும் (ஜெகநாதன் கௌதமன் - பெரியகல்லாறு, மட்டக்களப்பு) தனது மோட்டார் தாக்குதல் அணியுடன் இணைந்து தாக்குதலுக்கான செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த வேளை, 24.09.91 நடந்த ஒரு சமரில் வீரச்சாவை தழுவிக் கொண்டான். மின்னல் நடவடிக்கை தொடர்ந்து கொண்டிருக்க, சிங்களப் படையின் தளபதிகளும், தலைமைகளும் புலிகளின் பாரிய தாக்குதல் ஒன்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பதுபற்றி சிந்தித்துக் கொண்டிருந்தனர். 26ம் திகதி திலீபனின் நான்காவது ஆண்டின் நினைவுகளுடன் விடிந்து கொண்டிருந்தது. புலிகளும் தாக்குதலை ஆரம்பிக்க தயாராகி விட்டிருந்தனர். ஆனால் தாக்குதல் ஆரம்பிக்கும் முன்னரே அவர்கள் எதிர்பார்க்காத நிகழ்வொன்றே அங்கு நடந்துமுடிந்தது. தாக்குதல் ஆரம்பிக்கும் முன்னரே சிங்களப்படையினர் பின்வாங்கி ஓடத்தொடங்கினார்கள். 29 நாட்களாக மின்னல் என்று கூறிக்கொண்டு பல அனுபவம்மிக்க தளபதிகளின் வழிகாட்டலில் முன்னேறி வந்தவர்கள், ஏராளமான படையினரையும், ஆயுதங்களையும் இழந்து கைப்பற்றிய பகுதிகளையும் விட்டுவிட்டு மின்னல் வேகத்திலேயே திரும்பி ஓடினார்கள்.

'சிங்கள அரசிற்கு எதிரான எமது ஆயுதப்போராட்டம் 15 ஆண்டுகளுக்கு மேலான நீண்ட வரலாற்றை கொண்டது. இந்த நீண்டகாலப் போரில் நாம் படிப்படியாக பெரும் வளர்ச்சி அடைந்திருக்கின்றோம். நீண்டகாலமாக கொரில்லாப்போர் முறையை கையாண்டு வந்த நாம், இப்பொழுது மரபு வழியிலான இராணுவமாக மாறி வருகின்றோம். இராணுவ ரீதியில் இதுவொரு பெரிய வளர்ச்சியைக் குறிக்கிறது. இந்த வளர்ச்சி எமது விடுதலைப் போராட்டத்தின் பெரும் திருப்பு முனையாகவும் அமைகின்றது. இந்த எமது வளர்ச்சி மூலம் சிங்களஅரசு ஒரு பாடத்தை கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது இராணுவ நடவடிக்கைகளின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதுதான்.

**நீண்ட காலமாக கொரில்லாப்போர் முறையை கையாண்டு வந்த நாம், இப்பொழுது மரபு வழியிலான இராணுவமாக மாறி வருகின்றோம். இராணுவ ரீதியில் இதுவொரு பெரிய வளர்ச்சியைக் குறிக்கிறது. இந்த வளர்ச்சி எமது விடுதலைப் போராட்டத்தின் பெரும் திருப்பு முனையாகவும் அமைகின்றது. இந்த எமது வளர்ச்சி மூலம் சிங்களஅரசு ஒரு பாடத்தை கற்றுக்கொள்ள வேண்டும்.**

B.B.C யின் செய்தி முகவர் கிறிஸ்தோபர் மொறிஸ் 'விடுதலைப்புலிகளை மரபு முறையிலான இராணுவமாக விரிவுபடுத்த நீங்கள் எடுத்துவரும் முயற்சி பற்றி கூறுவீர்களா? இது புலிகளின் முன்னேற்றத்திற்கு எவ்வளவு முக்கியமானது?' என மின்னல் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த மறுநாள்(30.08.91) தலைவர் பிரபாகரனிடம் வினவிய போது தலைவர் வழங்கிய பதிலே இது. ஆனால் விடுதலைப் புலிகளின் வளர்ச்சியையும் அவர்களின் போரிடும் மனோவலிமையையும் அறியமுனையாத சிங்களத்தின் தலைமைகள், இராணுவதீர்வையே தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த முனைந்தன. பலத்த இழப்புக்களை சந்தித்த நிலையிலும் தொடர்ந்து போரை நடாத்தவே விரும்பின. மின்னல் நடவடிக்கையில் தோல்வியடைந்த நிலையிலும் அதனை மூடிமறைத்து, மணலாற்றில் ஐநூறு புலிகள் அழிக்கப்பட்டதுடன் புலிகளின் பாரிய முகாங்களான 'வன் ஃபோர்' முகாங்கள் பதின்நான்கு தாக்கி அழிக்கப்பட்டதாகவும் செய்தியூடகங்களுக்கு தெரிவித்தன.

★ ★ ★

### கொக்குத்தொடுவாய் சமர்கள்

கோட்டைக்கேணியிலிருந்து கொக்குத்தொடுவாய்க்கு செல்ல முனையும் படையினரை எதிர்பார்த்து புலிகளின் அணிகள் சில பதுங்கியிருந்தன. 16.10.91 அன்று அவ் அணியை இடைமறித்து தாக்கியதில் படையினர் பலர் கொல்லப்பட்டதுடன் ஆயுதங்கள் பலவும் கைப்பற்றப்பட்டன. காசிம் (அப்புத்துரை பத்மநாதன் - பண்டத்தரிப்பு யாழ்.), 2ம் லெப். மயிலி (கிருஷ்ணகுமாரி ஏரம்பு - அலம்பில் கொக்குத்தொடுவாய்), 2ம் லெப். சாஸ்திரி (அந்தோணி சந்திரதாஸ் - பெரிய உப்போடை மட்டு.), லெப். நீலன் (மயில்வாகனம் சேதுலிங்கம் - வல்வெட்டித்துறை யாழ்.) ஆகிய போராளிகள் இத் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். மீண்டும் அதே பகுதியில் 24.12.91 அன்று இன்னொரு தாக்குதல் நடாத்தப்பட்டது. முதன்முதலாக இத் தாக்குதலில்தான் சிங்களப்படையிடம் இருந்து மினி எல்.எம்.ஜி ஆயுதமும் கைப்பற்றப்பட்டது. இவ்வெற்றிகரமான தாக்குதலில் பங்கெடுத்த லெப். ராதா (சிவஞானம் கண்ணன் - 35ம் கிராமம் மட்டு.) இத்தாக்குதலில் வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

புலிகளின் தாக்குதல்கள் இவ்வாறு மணலாற்றில் அதிகரித்துக் கொண்டிருக்க, சிறீலங்காப்படையினரும் தமது அடுத்த பாரிய தாக்குதலுக்கு தயாரானார்கள். மின்னலின் மூலம் பட்டறிந்து கொண்ட அனுபவங்களை வைத்து இத் தாக்குதலுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. அத்துடன் இத் தாக்குதலுக்கான திட்டத்தின் பின்னால் பல பாரிய எதிர்கால இராணுவ நகர்வுகளுக்கான திட்டங்களும் அடங்கியிருந்தன.

(தொடரும்)

எஸ்.தீரன்


ஜமால்


காசிம்


கப்டன் மைக்கல்


லெப். நீலன்


கப்டன் பீற்றர்


பிரதீப்


2ம் லெப். திலீபன்


லெப். வசந்தன்




# உயிருள்ளவரை உன்னோடு

இ.சிவனேஸ்வரன்

மார்கழி மாதத்து கடும் குளிரிலும் யாழினியின் மேனி வியர்த்துக் கொட்டியது.

தன் தாயின் வாழ்வினில் ஏற்பட்ட கறைபடிந்த நினைவுகள் இன்னும், கலைந்து போகாது இருக்கையில் தனது மனமும், அத்தகைய அத்தியாயம் ஒன்றைப் புரட்டிப்பார்க்க ஆசைப்படுவதை நினைக்கும்போது, அவளுக்குப் பயமாக இருந்தது.

ஆனால் தன்னையே நினைத்து வாழும் அரவிந்தை நினைக்கும்போது, பாவமாகவும் இருந்தது.

தனக்கும் அரவிந்திற்கும் இடையிலே ஏற்பட்டுள்ள இந்த உறவு, இருபது வருடங்களாகப் பிரிந்திருக்கும், தங்களது குடும்பங்களை ஒன்று சேர்க்குமா......?

அல்லது, உறங்கிப் போய்க்கிடக்கும், பகைமை உணர்வு, மேலும் விரிசலடைந்து, தங்கள் இருவரையும் வாழ்க்கையில் இணைய விடாது இரு துருவங்களாக்கி விடுமா.....?

இன்னும், ஏன் இந்தச் சமுதாயம் வர்க்க பேதங்களைச் சுமந்து நிற்கிறது...?

மனித மனங்களின் அகபலவீனங்களினால் ஏற்படுகின்ற போலி மாற்றங்கள், நிஜவாழ்க்கையில் ஏற்படுத்துகின்ற பின்னடைவுகளைக் கண்டு புளகாங்கிதம் அடையவா.....?

தன் தாயும் இதனால்தானே இத்தனை வருடங்களாக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறாள்.

அவளை ஒதுக்கி வைத்து வேடிக்கை பார்த்த, அவளது உறவுகள் இது வரையில் சாதித்ததுதான் என்ன...?

யாழினியின் சிந்தனைகள் சிதறடித்துப் பறந்துகொண்டிருந்தன....

* * *

கொழும்பில் உள்ள, அந்தக் கல்லூரியில் கல்விப்பொதுத் தராதர உயர்தர விஞ்ஞானப் பிரிவில் கல்வி பயின்று கொண்டிருந்தபோதுதான் யாழினியின் பெற்றோர்களாகிய ஈழவேந்தனுக்கும், தமிழினிக்கும் இடையில் அறிமுகம் ஏற்பட்டது.

பழகுவதற்கு இனிய சுபாவமுள்ள, ஈழவேந்தனுக்கு, கல்வி மேல் இருந்த பற்றுதலும் கலை இலக்கியத்துறைகளில் அவனுக்கு இருந்த ஈடுபாடும், தமிழினியின் இதயத்தை அவன் பால் ஈர்க்கத் தொடங்கியது.

பள்ளிப் பருவத்தில் தோன்றுகின்ற பருவ நினைவுகளை, அவனோடு பகிர்ந்துகொள்ளுவதற்கு ஆசைப்பட்டாள்.

ஆனால் அவனோ இத்தகைய சந்தர்ப்பங்கள் ஏற்படும் போதெல்லாம் சாதுரியமாக விலகிச் சென்றுவிடுவது தமிழினியின் உள்ளத்திலும், சில உராய்வுகளை ஏற்படுத்தின.

இருந்தாலும், அந்தக் கல்லூரியின் ஆண்டு விழாவின்போது, அவளுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தனது உள்ளத்திலே அரும்பாகி இருக்கும் அந்தப் புனிதமான உறவை தெரியப்படுத்தினாள்.

இதைக்கேட்டு சற்றுத் தடுமாறினாலும், தன்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டு, ஈழவேந்தன் சொன்னான்...

தான் ஒரு ஏழைக்குடும்பத்தில் பிறந்ததாகவும், படிப்பின்மேல் தனக்கு உள்ள பற்றுதலால், தங்களது ஏழ்மையையும் பொருட்படுத்தாது, தன் பெற்றோர் தன்னை இங்கு அனுப்பி வைத்ததாகவும், எனது எதிர்காலம் நல்லதாய் அமைந்தால்தான், நெற்றி வியர்வை நிலத்திலே சிந்த, வயல் வெளிகளில் அயராது உழைத்து அதன் மூலம் கிடைக்கும் சிறு வருமானத்தைக் கொண்டு, தங்கள் வாழ்நாட்களைக் கழித்துக்கொண்டு இருக்கும் எனது பெற்றோர் மன நிறைவு அடைவர்.

அது மட்டுமல்ல, வர்க்கத்திற்குள் வகை பிரித்து வேடிக்கை பார்க்கும் மனித மனங்களின் பலவீனங்களினால் பாதிக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த எனக்கு, ஊரறியாமல், உறவறியாமல் ஏற்படுகின்ற 'உறவுகள்' நினைப்பதற்கு மட்டும்தான்.

இத்தகைய என் மீது நீ வைத்திருக்கும் 'அன்பு' உன் எதிர்காலத்தையே சீரழித்துவிடும் என்று மூச்சு விடாமல் கூறி முடிக்க,

தமிழினியின் கண்கள் குளமாகிக்கொண்டிருந்தன.

அதைக் கண்ணுற்ற ஈழவேந்தனுக்கு, அது அவள், தன் மீது கொண்டுள்ள காதலுக்கு அடையாளமா அல்லது, தனது நிலையைப் புரிந்துகொண்டதனால், ஏற்பட்ட பாசத்தின் பிரதிபலிப்பா....? என்று அவன் மனம் அங்கலாய்த்துக் கொண்டிருந்தவேளையில்,

'ஐ லவ் யு வேந்தன்' என்று கூறி,



காதோரமாக வடிந்து கன்னத்தை ஈரமாக்கிக் கொண்டிருந்த, கண்ணீர்த் துளிகளை தனது கைகளால் துடைத்துக் கொண்டு, அவனை நிமிர்ந்து பார்த்தாள் தமிழினி.

'மின்னல்' என அவளிடமிருந்து வந்த அந்த வார்த்தைகள், அவனது இதயத்தை முத்தம் இட்டுச் சென்றதனால், ஏற்பட்ட அன்புப் பிணைப்பு, அவர்களது உறவுக்கு அத்திவாரமாய் அமைந்தது.

பின்பு, மனதை மயக்கும் மாலைப் பொழுதுகளில், இயற்கை எழில் கொஞ்சும் அந்த காலிமுகத்திடலில் இவர்களது சந்திப்புகள் தொடர்ந்தன.

கருத்தொருமித்த இதயங்கள் தங்களுக்குள் வகுத்து வைத்து இருக்கும் இனிய நினைவுகளுடன் நாட்களை நகர்த்திக்கொண்டிருந்த வேளையில்,

ஈழவேந்தனும் எதிர்பார்த்து இருந்த அந்த உயர்தரப்பரீட்சையில் கிடைத்த திறமைச் சித்திகளினால் உள்ளம் உவகைகொண்டு உயர் படிப்புக்காய் காத்திருக்க,

சிங்களம், தமிழைப் பார்த்துச் சிரித்தது. அதனால், கொழும்பு நகர்த்தில் ஏற்பட்ட பதற்ற நிலை இவர்களையும், தம் சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்பியது.

அத் தேசத்தின் கோலத்தினால், தகைமை இருந்தும் கல்வியைத் தொடர முடியாத நிலை ஒரு பக்கம் தன்னை நேசித்த தமிழினியின் பரிவு தந்த தாக்கம் மறுபக்கமுமாய் வேதனையின் நெருடல்கள், அவனது நெஞ்சை அழுத்திக்கொண்டிருக்க,

கல்லூரி வாழ்க்கையில் ஏற்பட்ட தடுமாற்றத்தினால், பரீட்சையில் கிடைத்த பாதகமான முடிவினாலும், தொலைந்துவிட்ட உறவைத்தேடி, அலைந்து அலுத்துப்போய்விட்ட தமிழினியின் இதயம் அழுது கொண்டிருந்தபோது!

கை நிறையச் சீதனமும், கல்வீட்டோடு காணியும் கொடுத்து, தமிழினியைத் திருமணம் செய்து கொடுப்பதற்காக, அவளது பெற்றோர் தங்கள் தகுதிக்கு ஏற்ற 'வரனை'த் தேடிக்கொண்டிருந்தனர்.

இந்த வேளையில்தான் 'விதி' இவர்களை ஒன்று சேர்க்க ஆசைப்பட்டது.

சமூக சீர்திருத்தத்திற்காய், தன்னையே அர்ப்பணித்து, மனித மனங்களின் அகபலவீனங்களினால் வாழ்க்கையில் ஏற்படுகின்ற, தீய விளைவுகளைப் பற்றி மேடை, மேடையாக வாய்கிழியக் கத்திய தன் தந்தை, தன்னையும் மன்னிப்பார் என்ற நம்பிக்கையில் ஈழவேந்தனது பெற்றோரின் சம்மதத்துடன் 'பதிவுத்திருமணம்' செய்துகொண்டாள்.

ஆனால், விஷயம் அறிந்ததும், தமிழினியின் பெற்றோர் நிலை தடுமாறி நின்றனர்.

தமது மகளின் மணக்கோலத்தைப் பார்ப்பதற்காக, மனதினுள் அமைத்து வைத்திருந்த 'மணமேடை' அவர்களது மனக் கண்களின் முன் இடிந்து பாழாகுவது கண்டு, பதை பதைத்தனர்.

எப்படியாவது அந்த இரு உள்ளங்களையும் பிரித்துவிடவேண்டும் என்று 'கங்கணம்' கட்டினர்.

இருந்தாலும், அவர்களது இந்த முயற்சிகளும் பயனளிக்காதுபோகவே,

ஊருக்கு உபதேசம் செய்த அவளது தந்தை, பந்த பாசங்களுக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்த தாய், தந்தை வழிசென்று தன்னையும் சமூகத் தொண்டனாய் இனம் காட்டி நின்ற அவளது சகோதரன், தாய்க்கு அடுத்தபடியாக நேசித்த தமிழினியின் அண்ணி அத்தனை பேரும் அவளை ஒதுக்கிவைத்தனர்.

காதல் திருமணத்தை, இவர்களது மனங்கள் ஏற்றுக்கொண்டாலும். சமுதாயத்தில் புரையோடிக்கிடக்கின்ற, சாதி என்ற தாழ்வு மனப்பான்மை தடுத்து நிறுத்தியதால், தமிழினி இத்தனை வருடங்களாக தண்டிக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறாள்.

ஆனாலும், பெற்றவர்களைப் பிரிந்துவாழும் வேதனையைத் தவிர அவள், சந்தோஷமாகவே இருக்கிறாள்.

இன்று, தன் கணவனின் வயதாகிய பெற்றோர்களுக்கு, 'பணிவிடைகள்' செய்வது ஆத்ம திருப்தியைக் கொடுக்கிறது.

கணவனின் ஊதியத்தில், வாழ்க்கை என்ற ஓடமும் அமைதியாக நகர்ந்துகொண்டிருக்க, மகள் யாழினியின் எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனைகள்தான், தற்போது, அவளிடத்தில் அதிகமாகக் காணப்பட்டது.

அப்போது தான் அரவிந்திற்கும், யாழினிக்கும் இடையில், அந்த 'உறவு' அரும்பாகியது.

அது மொட்டாகி மலர்வதற்குள், கருகிவிட வேண்டும் என்பதுதான், யாழினியின் பிரார்த்தனையாக இருந்தது.

இருப்பினும், தன் உயிர் உள்ளவரை, உன்னோடுதான் என் வாழ்வு என்று, உறுதியாகக் கூறிய அரவிந்தின் வார்த்தைகளையும் அவளால் உதாசீனம் செய்ய முடியவில்லை.

ஆனால், தன் தந்தைக்கு நேர்ந்த தலை குனிவை, தன் மகன் அரவிந்தன் திருமணத்தின் மூலமாவது 'நிவர்த்தி' செய்யவேண்டும் என்று ஆசைப்பட்டு திருமண ஏற்பாடுகளில் இறங்கியபோது, அரவிந்த் சொன்னான்:

'திருமணத் தரகருக்குப் பணம் கொடுத்து சாதி, மதம், அந்தஸ்து பார்த்து மணப்பெண் தேடிக்கொண்டிருக்கும் உங்களுக்கு, தமிழினி அத்தைக்கும், யாழினி என்று, திருமணவயதினில் பெண் இருப்பது தெரியாதா....?'

'உங்களுக்குத் தெரியும், ஆனால் சாதி... சாதி தடுத்து நிறுத்துகிறது'.

'சாதி இன்னும் சாகாமல் இருப்பதனால்தான், வர்க்க பேதங்களை மனித மனங்கள் இன்னும், சுமந்துகொண்டு இருக்கின்றன.

இந்நிலை மாறி கண்ணீருடன் காலத்தைக் கழித்துக்கொண்டு இருக்கும், என் அத்தையைப் போன்ற உள்ளங்கள் உவகை அடைய, என் போன்ற இளம் சந்ததியினரால் நிச்சயம் முடியும் என்று நம்புகிறேன்.

எனக்குத் திருமணம் என்று ஒன்று நடந்தால் அது யாழினியுடன்தான்' என்று கூறி முடிக்கவும் அந்த வீடு அமைதியாகக் காணப்பட்டது.

அது ஒரு நல்ல சகுனத்தின் அறிகுறியா.....?

தமிழீழ விடுதலைப்புலிகள் ஜேர்மனிப்பணியகக் கலைபண்பாட்டுக்கழகம்

## லெப்.கேணல் திலீபன் நினைவுப் பேச்சுப்போட்டி 1999

தமிழீழ விடுதலைப் புலிகள் ஜேர்மனிப்பணியகக் கலைபண்பாட்டுக்கழகம் ஆண்டுதோறும் நடாத்திவரும் லெப்.கேணல். திலீபன் நினைவுப்பேச்சுப் போட்டிகளின், இந்த ஆண்டுக்கான போட்டியை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**பேச்சுப்போட்டிக்கான விதிகள்:**

★ பேச்சுப்போட்டிகளிற் பங்குபற்றுவோர் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து, 31.08.1999-ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

★ போட்டியாளர் பரிசுக்குரியவராகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், வயதை உறுதிப்படுத்த அடையாள அட்டை அல்லது பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் கேட்கப்படுவர்.

★ அனைத்து வயதுப்பிரிவினரும் லெப். கேணல் திலீபன் என்னும் தலைப்பிற் பேச்சுக்களை நடாத்தவேண்டும்.

**போட்டியாளர்களின் வயதுப்பிரிவுகளும் வயதெல்லையும்:**

கீழ்ப்பிரிவு – 01.01.1989 அன்றும் அதற்குப் பின்னரும் பிறந்தவர்கள்.
நடுப்பிரிவு – 01.01.1983 இலிருந்து 31.12.1988 வரை பிறந்தவர்கள்.
மேற்பிரிவு – 01.01.1979 இலிருந்து 31.12.1982 வரை பிறந்தவர்கள்.

**போட்டியாளர்களுக்கான நேர எல்லை:**

கீழ்ப்பிரிவு – மூன்று நிமிடங்கள்.
நடுப்பிரிவு – ஐந்து நிமிடங்கள்.
மேற்பிரிவு – ஏழு நிமிடங்கள்

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**

**K.T.O**
**Postfach 1160,**
**37441 Bad Sachsa.**

கலை பண்பாட்டுக் கழகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்-ஜேர்மனிப் பணியகம்

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

தமிழீழ விடுதலைப்புலிகள் ஜேர்மனிப்பணியகக் கலைபண்பாட்டுக்கழகம்

## லெப்.கேணல் திலீபன் நினைவுப் பேச்சுப்போட்டி 1999

### விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர்: திரு/திருமதி/செல்வன்/செல்வி
..........................................................................................

2. பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயர்:
..........................................................................................

3. முகவரி: ..........................................................................
..........................................................................................

4. விண்ணப்பதாரரின் பிறந்தநாள்:
நாள்:..................... மாதம்:............................ ஆண்டு:......................

5. பங்குபற்றவிருக்கும் பிரிவு: கீழ்ப்பிரிவு / நடுப்பிரிவு / மேற்பிரிவு
*தேவையான பிரிவின்கீழ் கீறிடுக*

6. தொலைபேசி இல:..........................................................................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பெயருடைய விண்ணப்பதாரராகிய நான், லெப்.கேணல் திலீபன் நினைவுப் பேச்சுப்போட்டி 1999இல் பங்கேற்க விரும்புகிறேனென்றும், நடுவர் தீர்ப்பை முழுமனதுடன் ஏற்பேனென்றும் உறுதி கூறுகின்றேன்.

.......................................... ..........................................
பெற்றோர் அல்லது பாதுகாவலர் கையொப்பம் விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி: ..............................

**விண்ணப்பஞ்செய்வதற்கான இறுதிநாள்: 31.08.1999**

கலை பண்பாட்டுக் கழகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்-ஜேர்மனிப் பணியகம்

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

# 'வேருக்கு நீர் பாய்ச்சுவோம்'

## தமிழீழ விடுதலைப்புலிகள் சுவிஸ் பணியகத்தின் சுவிஸ் வாழ் தமிழீழ மக்களுக்கான அழைப்பு

**அன்பான சுவிஸ் வாழ் தமிழீழ மக்களே!**

எமது தாயகத்தில் எமது உறவுகளுக்கு தோள் கொடுத்து, எமது வேருக்கு நீர்பாய்ச்சி உரம் சேர்க்க வேண்டியது எமது கடமையல்லவா!

இக் கடமையினை காலம் வேண்டிநிற்கும் வேகத்துடன் முன்னெடுக்க நாம் ஒன்றாய் இணைந்து எமது சக்தியினை வலுப்படுத்துவோம்!!

இப் பணியினைச் சிறப்பாக ஆற்றத் துணைபுரியும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் பணியகத்தின் பிரதிநிதிகள் இம்மாதம் 9ம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 9ம் திகதி வரையிலான காலப்பகுதியில் 'விசேட மக்கள் உறவுத் திட்டம்' ஒன்றுடன் உங்கள் வீடுதேடி வருகிறார்கள்.

1. உங்கள் வீடு தேடி வரும் சுவிஸ் பணியகப் பிரதிநிதிகளை வரவேற்று உங்கள் ஒத்துழைப்பினை நல்குங்கள்.
2. உங்களை சுவிஸ் பணியகத்தின் செயற்பாடுகளுடன் இணைத்துக்கொள்ள விரும்புபவர்கள் உங்கள் பெயர் விபரங்களையும், தாங்கள் இணைந்து பணியாற்ற விரும்பும் துறை பற்றிய விபரங்களையும் பதிவுசெய்து கொள்ளுங்கள்.
3. பணியகத்தின் வளர்ச்சிக்கும் சிறப்பான செயற்பாடுகளுக்கும் தங்கள் ஆலோசனைகளை வழங்குங்கள்.
4. தங்கள் பங்களிப்புக்களை வழங்கி எமது வேருக்கு நீர் பாய்ச்சுங்கள்.
5. ஒகஸ்ட் 9ம் திகதி நடைபெறவிருக்கும் ஜெனிவாப் பேரணியில் கலந்துகொள்வதற்கு உங்கள் பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளுங்கள்.

**எமது கைகள் ஒன்றாய் இணையட்டும்!**
**எமது பலம் மேலும் வலுக்கட்டும்!!**

**மேலதிக தொடர்புகளுக்கு:**
**சுவிஸ் பணியகம்**
**தொலைபேசி இலக்கங்கள்:**
**01/273 34 07 / 079/604 09 55**

Pub Gra Sw




# உன்னையே நீ அறிவாய்

ஒவ்வொரு பெண்ணுமே தன் வாழ்வில் எத்தனையோ உறவுகளால் பின்னப்பட்டுக்கொண்டு தான் வாழ்ந்து வருகிறாள். முதலில் தாய் தந்தை என்றும், பின் கணவன் குழந்தைகள் என்றும் எப்போதுமே தன்னை நேசிப்பவர்களாலேயே மீண்டும் மீண்டும் நேசிக்கப்பட்டுக்கொண்டு தான் இருக்கிறாள். ஆனால் இப்பெண்ணால் தன்னைச் சுற்றி அருகில் இருப்பவர்களைவிட எப்படி தனக்கு அப்பால் உள்ள சமூகத்தை அதில் வாழ்வோரை, அதில் இடம்பெறும் பலதரப்பட்ட விடயங்களையும் நேசிக்க முடியுமென்று பார்த்தால் அதன் அளவு மிகக்குறைவே. அதாவது நாம் இங்கு சொல்ல வருவது என்னவெனில் பொதுவாக எம் சமுதாயத்தில் நடைபெறும் எந்தக்குடும்ப உறவுகளிற்கும் அப்பாற்பட்ட பொது விடயங்களாக இருந்தாலும்சரி அதில் பெண்களின் தலையீடோ அல்லது பங்களிப்பென்பதோ மிகக் குறைவாக காணப்படுகிறது. அதாவது ஏனோ எம் பெண்கள் தம் குடும்ப உறவிற்கப்பால் எதையும் தாம் செய்யவேண்டுமென்றோ, சாதித்துக்காட்டவேண்டுமென்றோ மனங்களில் இலட்சியங்களை வளர்க்காது வெறும் கிணற்றுத்தவளைகள்போலவே வாழப் பழகிக்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக எம் வெளியே உள்ள கலைத்துறைகள், இலக்கியத்துறைகள் எல்லாவற்றிற்கும் மேலாக எம்தாய் நாட்டிற்கு உழைக்க வேண்டிய ஏராளமான கடமைகள் தம்மைச்சூழ இருப்பதை பல பெண்களும் தம் மனதளவில் கூட இன்னும் அக்கறை கொள்ளாதவர்களாகவே இருந்து விடுகிறார்கள்.

உண்மையில் இது எவ்வளவு தவறு. ஏனெனில் எம் விருப்பு வெறுப்பு என்பதற்கு அப்பால் எம் வாழ்க்கையை எந்த திசையில் நடாத்திச் செல்கிறோம் என்று யோசிக்கவேண்டாமா. இந்த யதார்த்தமான கேள்வியை எம் மனதளவில் நிறுத்தினாலே எம் வாழ்க்கையை நாம் எவ்வாறு பயனற்றதாக அமைத்து வருகிறோம் என்று புரிந்து விடுவோம். அதாவது எல்லாப் பெண்களுமே தன் குடும்பம் குழந்தை என்ற பிணைப்புக்கப்பால் வெளி உலகையும் எட்டிப்பார்க்க, ஆராய்ந்து பார்க்கப் பழகுதல் வேண்டும். தன் இனத்தையும் அது சார்ந்த சமூகத்தையும் நேசிக்கப் பழகுதல் வேண்டும். தனியே என் குழந்தைகள் மட்டுமே வல்லவர்களாக வரவேண்டும்என எண்ணிக்கொண்டிராமல் என்னைச் சேர்ந்த இனமக்களும் சமூகமும் எப்படி வளர்ச்சிபெற வேண்டுமென்பதிலும் போட்டியிட வேண்டும். இவ்வாறு போட்டியிட்டு உற்சாகமாக தம் வாழ்வை அமைத்தாலே ஏராளமான வெற்றிகளும் திறமைகளும் இவர்கள் வசம் ஒளிந்து போய் இருப்பதை அவர்களே கண்டுகொள்வார்கள். இப்படி இவர்கள் வாழ்ந்தாலே போதும். இவர்களை எந்த அடிமைப்படுத்தலும் இவர்கள் வசப்படாது.

## டோட்முன்ட் செஸ் போட்டியில் பதக்கம் வென்ற லீகோ

அண்மையில் டோட்முன்ட் இல் (ஜேர்மனி) நடைபெற்ற செஸ் சுற்றுப்போட்டியில் தன்னோடு போட்டியிட்ட ஏனைய உலகின் பிரபலமான செஸ் வீரர்களைகளையெல்லாம் வென்றிருக்கிறார் லீகோ என்னும் வீராங்கனை. ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த இந்த வீராங்கனை, தன்னோடு போட்டியிட்ட வேறு பல நாட்டு முன்னணி செஸ் வீரர்களுடனும் மிகுந்த போட்டியின் மத்தியில் விளையாடி 3 பேருடன் வென்றும், நான்கு பேருடன் சமநிலையில் நின்றும் 5/7 என்ற நிலையில் வெற்றியை தமதாக்கிக்கொண்டுள்ளார்.



1994-ம் ஆண்டுகளில் தொடங்கி செஸ் உலகில் பிரபலமடையத் தொடங்கிய லீகோ, கடந்த இரண்டு வருடங்களாக செஸ் வீரர்கள் தரப்பட்டியலில் 9-வது இடத்தில் இருந்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கதே.

## அரசியல் வானில் பிரகாசிப்பாரா ரேவதி

தென்னிந்தியச் சினிமாத்துறையில் தனக்கென்று ஒரு இடத்தைப்பிடித்து வைத்திருப்பவர் நடிகை ரேவதி. ஆனால் சமீப



காலமாக இவரது ஆர்வம், சினிமாத்துறையைத் தாண்டி அரசியல் துறைக்கு தாவுவது பலருக்கும் தெரியும். கடந்தவருடம் இந்தியப் பாராளுமன்றத்தேர்தலில் தனித்து நின்று போட்டியிட்டு தோல்வியைத் தழுவினாலும் இம்முறையும் தனது அரசியல் துறை வேலையைக் கைவிடவில்லை. அதாவது இம்முறை தான் தனித்து நின்று போட்டியிடாது பாரதிய ஜனதா. தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்யும் வேலையில் ஈடுபடப் போவதாகத் தெரிவித்துள்ளார் ரேவதி.

இது சம்பந்தமாக அத்வானியைச் சந்தித்து தான் சென்ற முறை பெற்ற வாக்குகளையும் அவருக்குப் பெற்றுத்தரப்போவதாகக் கூறியுள்ளாராம். ஆக, சினிமா வட்டாரத்தில் ரேவதி நாட்டிய வெற்றிக்கொடிபோல் அரசியலிலும் சாதிப்பாரா என்பது கேள்விக்குறிதான். ஆனால் ஆரம்பந்தொட்டே வெளி உலக விடயங்களிலும் சமூக நல சேவைகளிலும் ரேவதி அக்கறை கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மத்தாப்பூ மனிதர்

புலரும் பொழுதில் கூவ முயன்ற பெட்டைக்
கோழி
இயல்பாய் பொழுதும் புலர்ந்தது.
சேவலுக்கேன் தலைக்கனம்
புலர்ந்த பொழுதுகள் தன்னால் என.

மழை வரும் பொழுதில் அகவமுயன்ற
பெண்மயில்
இயல்பாய் மழையும் பெய்தது
மயிலுக்கேன் தலைக்கனம்
மழை வந்த பொழுதுகள் தன்னால் என

பாலியல் வேறுபாட்டால்
வளர்ந்துவிட்ட பேதங்கள்
இயல்பான மாற்றங்களையும்
தம்மால் என மார்தட்டும் பரம்பரைப் போலிகள்

போலிகளை தவிடு பொடியாக்க — உன்னை
சீர்படுத்து பெண்ணே — உன்
இருப்பை உறுதிப்படுத்த
எழுந்திடடி பெண்ணே — உன்
திறமையை மழுங்கடிக்க — இனி
யாருக்கும் உரிமை இல்லை பெண்ணே
முடியாத காரியம் என்பது இனி — உன்
அகராதியில் இல்லையடி பெண்ணே
போர்முனையில் உன் சோதரி பரணி பாட— நீ
இன்னுமேன் உறக்கம்?

குசினிக்கும்
குடும்ப அறைக்கும்
குழந்தை வளர்ப்புக்கும் — உன்னை
இரையாக்காதே பெண்ணே

திட்டமிட்டு வாழ்வு சமைத்து — உன்னை
உணர்த்த திடசங்கற்பம் பூணு பெண்ணே.

- நளாயினி தாமரைச்செல்வன்.

# மாதவிடாய் நிறுத்தமும் உடல்நிலை மாற்றங்களும்

சாதாரணமாக பெண்கள் எல்லோருக்கும் பருவமடைதல் என்பது எப்படி இயற்கையோ, அதே போல்த்தான் அவர்களின் வயோதிபப் பருவத்தின் போது முற்றுப்பெறும் மாதவிடாய் நிறுத்தமும் இயற்கையானதே. ஆனால் இது பலருக்கும் பலவிதமான நோய்க்கான அறிகுறிகளையும் வேறு பல பக்க விளைவுகளையும் கூட கொடுத்துவிடுகிறது.

அதாவது சாதாரணமாக பெண்களின் பூப்படையும் வயது, 13 அல்லது 14 என்று நாம் கருதினால் இந்தமாதவிடாய் பொதுவாக நிறுத்தம் பெறும் வயது 45—50 வரையான காலப் பகுதியில் தான் காணப்படுகிறது. இயல்பில் இந்த மாதவிடாய் நிறுத்தம் என்பதற்கான அறிகுறிகளாக பின்வரும் நிகழ்வுகளை மாதவிடாய் காலத்தின்போது காணலாம். அதாவது ஒரு சிலருக்கு சாதாரணமாக வந்த மாதவிடாய்க்குப் பின், எப்போதுமே மீண்டும் மாதவிலக்கு வராமல் ஒருமித்து உடனேயே நின்றுபோதல். வேறு சிலருக்கு மூன்று அல்லது நான்கு மாத இடைவெளியில் மாதவிடாய் தள்ளிப்போயும் பின் மாதவிலக்கு வந்தும் முழுமையாக நின்றுபோகும். இன்னும் சிலருக்கு படிப்படியாக மாதவிடாய்க் காலத்தில் இரத்தப் போக்குக் குறைந்து குறைந்து செல்வது வாயிலாகவும் முழுமையாக மாதவிடாய் முற்றுப்பெறத் தொடங்கும்.

எனவே மேலே கூறிய இந்த மூன்று முறைகளில் எவ்வாறு மாதவிடாய் முற்றுப்பெற்றாலும் அது இயல்பானதுதான். ஆனால் இயல்புக்கு மாறாக வேறுசில நோய்களையோ அல்லது உடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நிலையிலும் மாதவிடாய் நிறுத்தம் நிகழலாம். அதாவது ஒரு மாதத்திலேயே இரண்டு மூன்று முறை மாதவிலக்கு நிகழ்தல். மற்றும் மாதவிலக்கு வந்து பல நாட்கள் தொடர்ந்து உதிரப்போக்கு தடைபடாமல் இருத்தல், இறுதியாக மாதவிடாயின்போது காணப்படும்போது அளவிற்கதிகமாக இரத்தப் போக்கு இருத்தல் என்பனவே மிகுந்த கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்களாகும். இவ்வாறு நேரும் இடத்து அவசியம் வைத்தியரையே நாடுதல் நன்று. அதுமட்டுமல்ல இந்தப் பெண்களிற்கான மாதவிடாய் நிறுத்தம் நிகழத்தொடங்கும் போது அவர்களின் சினைப்பை தன் செயற்பாட்டை படிப்படியாகக் குறைக்கத் தொடங்கும். இதனால் ஈஸ்ட்ரோஜன், புரஜெஸ்ட்ரான் ஆகிய ஹார்மோன்களின் அளவும் குறையத் தொடங்கும்.

எனவே இந்த மாதவிடாய் நிறுத்தம் நிகழும் போது உடலில் மாற்றங்கள் தெரியும். தோலில் சுருக்கங்கள் தோன்றும், தலைமுடி நரைக்கும், முதிர்வு தோன்றத்தொடங்கும், அத்தோடு இந்த மாதவிடாய் நின்றுபோவதால் சிறுநீர் சார்ந்துள்ள உறுப்புக்களில் இரத்த ஓட்டம்குறையும். இதன் காரணமாக அடிக்கடி சிறுநீர் கழித்தல். அவசரமாகச் சிறுநீர் கழித்தல், சிறுநீர்கழிக்கும் போது எரிச்சல், வலி தோன்றல் போன்றனவும் உருவாகலாம். அத்தோடு மனரீதியாகவும் மாற்றங்கள் வரும். உடலுறவில் விருப்பமின்மை, உடம்பில் சோர்வு, உடல் உறுப்புக்கள் உலர்தல், சில தருணம் உடம்பு களைத்து அதிகப்படியாக வியர்த்துப் போதல் போன்றனவும் நிகழலாம். இதனால் மற்றவர்கள் வசம் கோபப்படும் நிலையும் தோன்றும். எனவே இத்தருணங்களில் இவர்களிற்கு தம்மைச் சூழ உள்ளவர்கள் வசம் அன்பு அரவணைப்பை எதிர்பார்கவும் மனம் விரும்பும்.

# புலிகளின் பெயரால் யாரும் செய்யலாமே - தொண்டமான்

**சிறீலங்காவில் அமையும் எல்லா அரசிலும் அமைச்சராகத் தொடரும் மலையகத் தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமான் கொழும்பில் இருந்து வெளிவரும் லக்பிம எனும் வார இதழுக்கு அண்மையில் வழங்கியிருந்த ஒரு செவ்வியில் இந்த அரசிற்கு இனப்பிரச்சினையைத் தீர்க்கும் தைரியமில்லை எனக் கூறியுள்ளார். அந்த பேட்டியில் இருந்து சில பகுதிகள்.**

**கேள்வி:** யுத்தமும் இனப்பிரச்சினையும் ஏன் தீர்க்கப்பட முடியாமல் தொடருகின்றன. இது பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

**பதில்:** அரசு நினைக்கவேண்டும் இதனை தீர்க்க வேண்டும் என்று, ஆனால் அரசு யுத்தத்தை நீடித்து புலிகளை பலவீனப்படுத்தலாம் என நினைக்கிறது. அப்படி புலிகள் பலவீனமடைந்தால் தாம் கூறுவதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று, ஆகையால்தான் அரசு எந்த வேளையிலும் அமைதி முயற்சிக்கு வருவதில்லை.

**கேள்வி:** அரசு அமைதி நடவடிக்கைகள் பலவற்றையும் வெளிப்படுத்தியபோதிலும் புலிகள் அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லையே?

**பதில்:** எப்படி ஏற்றுக்கொள்வது! இவர்கள் கூறுவதை அப்படியே ஏற்றுக்கொள்வதானால் ஆயுதம் ஏந்தியதன் அர்த்தம்தான் என்ன? அன்று செல்வநாயகம்-பண்டாரநாயக்கா ஒப்பந்தம்; பின் டட்லி-செல்வா ஒப்பந்தம்; இறுதியாக ஜே.ஆர்-ராஜீவ் ஒப்பந்தம். இவற்றில் எந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது? அப்படியானால் யாரிடம் பிழை, அரசுகள்தான் எதையுமே நடைமுறைப்படுத்தவில்லையே. அப்படியானால் இவற்றை ஏற்றுக்கொள்வது எப்படிப்பொருந்தும்.

**கேள்வி:** அமைதி தோன்றாததற்கு அரசுதான் முழுப் பொறுப்பும் ஏற்கவேண்டும் என்றா கூறுகிறீர்கள்?

**பதில்:** அன்று முதல் இன்றுவரை பார்க்கப்போனால் எந்த அரசு பதவியில் இருந்தாலும், தேவையான நேரத்தில் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை. அமைதி தேவை என்பார்கள், ஆனால் உபயோகமான எதனையும் செய்யமாட்டார்கள். அப்படியானால் யார் பொறுப்பு?

**கேள்வி:** அப்படியானால் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதில் உள்ள பிரதான பின்னடைவு என்ன என நீங்கள் நினைக்கிறீர்கள்?

**பதில்:** முதலாவது சிங்கள தலைவர்களிடையே தைரியமில்லாத நிலை. சரியான வழிமுறைகளை தேர்ந்தெடுப்பதில் உள்ள அசமந்தநிலை.

**கேள்வி:** தமிழ் அரசியல்வாதிகளோ அல்லது தமிழ் மக்களோ இதற்குப் பொறுப்பேற்க அவசியமில்லை என கருதுகிறீர்களா?

*சிங்களம் கூறும் சில... - மாந்தன் -*

**பதில்:** ஏனில்லை? தமிழ் சமுதாயமும் இதற்கு பொறுப்பேற்கத்தான் வேண்டும். ஆனால் முதன்மையாக பொறுப்பேற்க வேண்டியது சிங்கள சமுதாயம்தான்.

**கேள்வி:** எமது பிரச்சினையை எம்மாலேயே தீர்த்துக் கொள்ள முடியுமா? அல்லது மூன்றாவது நாடொன்றின் மத்தியஸ்தம் அவசியமா?

**பதில்:** எம்மாலேயே தீர்த்துக்கொள்ளமுடியும். மூன்றாவது பிரிவினர் வந்தாலும் அவர்கள் நிரந்தரமாகவே இங்கு இருக்கப்போவதில்லையே? அதனால் நாமே எமது பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள வேண்டும். அது எம்மால் சாத்தியமாகும் என நான் பூரணமாக நம்புகிறேன்.

**கேள்வி:** இனப்பிரச்சினையைத் தீர்ப்பதானால் நிறைவேற்று ஜனாதிபதி முறை அவசியமானது எனக் கூறப்படுவதற்கு என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** என்ன முறை இங்கு நடைமுறையில் இருந்தாலும் பிரச்சினை தீர்க்கப்படக்கூடியதே. தேவையானது ஆத்ம நம்பிக்கையும் உண்மையான தேவையுமே. இவைகள் இரண்டும் தான் இங்கு இல்லாதது.

**கேள்வி:** வடக்கு கிழக்கு ஆட்சியை புலிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அன்று கூறினீர்கள். இப்போது உங்கள் எண்ணம் எப்படி?

**பதில்:** அப்படியே நான் அந்த நிலைப்பாட்டில் எந்த மாற்றமுமில்லை. வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கும் தெற்கில் வாழும் சிங்கள மக்களுக்கும் இடையே என்ன வித்தியாசம். எதுவுமே இல்லை எல்லாருக்கும் இருக்கும் உரிமை ஒன்றே. அப்படியிருந்தும் தமது தேவையை வென்றெடுக்கும் உரிமை வடகிழக்கு மக்களுக்கு இல்லை. இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டாலேயே மற்றெல்லாம் பிரச்சினையும் தீர்க்கப்படமுடியும். அதை விடுத்து யதார்த்தத்திற்கு மாறான எந்த நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் சரிவராது.

**கேள்வி:** வடக்கு கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஆட்சியை புலிகளிடம் ஒப்படைக்கவேண்டும் என கூறுகிறீர்கள். ஆனால் சமாதான ரீதியாக பிரச்சினையைத் தீர்க்க முயலும் எல்லாரையும் அவர்கள் கொலை செய்கிறார்களே?

**பதில்:** அப்படி நீர்தான் கூறுகிறீர். அவர்கள், வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கமையத்தான் செயற்படுகிறார்கள். தனி நபர் தீர்மானங்களின்படியல்ல.

**கேள்வி:** நீலன் திருச்செல்வம் அரசியல் தீர்வு ஒன்றிற்காகவே செயற்பட்டார். அவரையும் இன்று கொன்றுவிட்டார்களே. இதற்கு நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்?

**பதில்:** இதை யார் செய்தார்கள் என்பது யாருக்கும் தெரியாது. புலிகள் செய்தார்கள் என சிலர் கூறுகிறார்கள். புலிகளின் பெயரைப் பாவித்து யாரும் இதை செய்யலாம் அல்லவா? ஜனநாயகம் இல்லாத இடத்தில் இவையெல்லாம் சகஜம்.


தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பிரெஞ்சுக் கிளை
நடாத்தும்

## தமிழர் விளையாட்டு விழா

**பாரிசின் பிரபல வர்த்தக ஸ்தாபனங்களின் ஆதரவுடன் பிரான்சின் முன்னணிக் கழகங்கள் பங்கேற்கும் உதைபந்தாட்டப்போட்டி மென்பந்து துடுப்பெடுத்தாட்டப் போட்டி, கரப்பந்தாட்டப்போட்டி, வலைப்பந்தாட்டப்போட்டி, கூடைப்பந்தாட்டப் போட்டி**

*என்பவற்றுடன் எமது மண்ணின் பாரம்பரிய விளையாட்டுக்களான தாச்சிப்போட்டி, முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல், தலையணைச் சண்டைப் போட்டிகளும் இடம்பெறும்.*

**காலம்: 22.08.1999**
**காலை 9 மணி**
**இடம்: Stains மைதானம்**

அத்துடன் குழந்தைகள், பார்வையாளர்களுக்கான விளையாட்டுக்களும் இடம்பெற உள்ளன.




**காலை முதல் மாலை வரை உங்கள் பசியாற்ற தமிழீழ உணவகம்**
அப்பம், தோசை, கொத்துரொட்டி என்பவற்றுடன் தமிழீழ மணம் கமழும் ஒடியல் கூழ்.

*பாரிசின் முன்னணி இசைக்குழு ஈழநிலா வழங்கும் இசை நிகழ்ச்சி, அவற்றுடன் பாரிசின் பிரபல நடனக்குழுக்களின் மேற்கத்தேய நடனங்களும் இடம்பெறவுள்ளன.*

**மாபெரும் நல்வாய்ப்பு சீட்டிழுப்பு வெற்றிபெறும் இலக்கத்திற்கு புத்தம்புதிய Citroen saxo கார் பரிசாக வழங்கப்படும்.**

Pub.Gra.

# சர்வதேச தமிழ் ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

## INTERNATIONAL TAMIL BROADCASTING CORPORATION

# ITBC

(FIRST DIGITAL RADIO IN TAMIL)

## 24 மணி நேர சர்வதேச தமிழ் வானொலி

**Eutelsat Hotbird 3 இல் 12475.5 Mhz**

**Eutelsat Galaxis, Model 602 Cl Receiver ஒன்றினை வாங்கி ITBC தமிழ் நிகழ்ச்சிகளை இலசவமாகக் கேட்பதோடு, மற்றும் வேறு எந்த ஸ்தாபனமும் தரமுடியாத அளவு 200 (Radio, Television Channels) இற்கும் அதிகமான வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை 100 வீதம் இலவசமாகப் பார்க்கலாம், கேட்கலாம்.**

## இதன் விலை 350 Euros மட்டுமே

350 Euros கொடுத்து மேற்படி Receiver ஐ வாங்கினால் அதன் பின் எந்தவிதமான மாதக் கட்டணமும் கட்டவேண்டியதில்லை. நிகழ்ச்சிகள் அனைத்தும் இலவசம்

அல்லது

ஐரோப்பாவில் தற்சமயம் Eutelsat Sagam 3200 Receiver வைத்திருப்பவர்கள் (தற்சமயம் TRT தமிழ்த் தொலைக்காட்சியை எடுத்துவரும் அதே Receiver) எமது நிகழ்ச்சிகளை, இந்த Receiver இலும் இலவசமாகக் கேட்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஒலிபரப்பாகும் நாடுகள்:**

- 42 ஐரோப்பிய நாடுகள் (Eutel sat Hotbird 3 இல்]
- Canada உட்பட வட அமெரிக்கா (Fm சிறப்பலை வரிசையில்]
- மத்திய கிழக்கு நாடுகள் (Eutel sat hot bird 3 இல்]
- வெகுவிரைவில்
- இலங்கை, இந்தியா [சிற்றலை வரிசை]

**ITBC இற்கு கடமைபுரிய சகல நாடுகளிற்கும் பிரதிநிதிகள் கோரப்படுகின்றனர்.**

**தலைமையகத் தொடர்புகளுக்கு:**

**Tel: 1-416 412 7384**

**Fax: 1-416 412 7386**

2

# வல்லூறு முகவர்கள்

## மூடப்பட்ட கொள்கலன்களில் மூச்சுத்திணறி மாண்ட 17 தமிழர்கள்

ஒருநாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அந்நாட்டின் போக்குவரத்துத்துறை பிரதானமான பங்கினை வகிக்கிறது. போக்குவரத்துத்துறை முழுமையானதாக சரியான இலக்கில் செயற்பட வேண்டுமானால் நெடுஞ்சாலைகளும், வீதிகளும், தெருக்களும் ஒழுங்கானவையாக நிர்மாணிக்கப்படவேண்டும். மேற்குலக நாடுகளில் இந்தத் தகுதி சரியாக இருப்பதனால்தான் இந்நாடுகள் தமது பொருளாதார இலக்குகளை வெற்றிகரமாக அடைந்துவிடுகின்றன. சில கீழைத்தைய நாடுகள் கூட மேற்குலக நாடுகளிற்கு ஒப்பான பொருளாதார வளங்களைக் கொண்டிருந்தாலும் அந்த நாடுகள் முழுமையான வளர்ச்சியைக் காணாமல் போராடிக் கொண்டிருப்பதற்கு போக்குவரத்துத்துறையில் உள்ள ஓட்டை கூட ஒரு காரணமாக அமைந்துவிடுகிறது. பயிர் நன்றாக விளைந்தாலோ அல்லது கடலிலுள்ள மீன்வளம் கரைக்குக் கொண்டுவரப்பட்டாலோ அவை உரிய நேரத்தில் உரிய இடங்களிற்கு அனுப்பப்படவேண்டும். இல்லாவிடில் அனைவருக்குமே நஷ்டம்தான். மேற்குலக நாடுகளில் இந்த நிலையில் பல முன்னேற்றங்கள் இருக்கின்றன. அவற்றின் காரணம் ஒழுங்கான முறையில் அவை காவிச்செல்லப்படுவதுதான். அரச கட்டுப்பாட்டில் உள்ள போக்குவரத்துத் துறையினைவிட தனியார் துறையினரே மேற்குலகு நாடுகளில் காவிச்செல்வதில் உச்சப்பங்கினை வகிக்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளிற்கிடையே நாளாந்தம் இலட்சக்கணக்கான கொள்கலன் வாகனங்கள் தமது காவிச்செல்தலை மேற்கொள்ளுகின்றன. பல நாடுகளில் கனரக வாகனங்களின் காவிச்செல்லல் வலிமையானது, பெரிய அரசியல் சக்தியாகக்கூட உருவெடுக்கும் நிலைமைகள் இருக்கின்றன. இதனால்தான் கொள்கலன் சாரதிகள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டால் உடனடியாக அரசுகள் அதற்கான நடவடிக்கையை எடுத்து அவர்களது கோரிக்கைகளைத் தீர்த்துவைத்து விடுகின்றன. ஏனெனில் கனரக சாரதிகளின் செயற்திறமை பற்றி அரசுகளுக்கு நன்றாகத்தெரியும்.

> உண்மையில் என்ன நடந்ததென்பதைச் சொல்வதற்குக்கூட அங்கு யாரும் இல்லை. ஆனால் சடலப் பரிசோதனைதான் இந்த அப்பாவிகள் அனைவரும் மூச்சுத் திணறியும், வெப்பத்தில் சுருண்டும் மடிந்தகோரத்தினைத் தெரியப்படுத்தியது.

பொதுவாக நாடுவிட்டு நாடு போகும் மூடப்பட்ட கொள்கலன் வாகனங்களை எல்லைப்புறப் பொலிசார் சோதிப்பது பொதுவாகக்குறைவு. பொதுவான ஒரு நம்பிக்கை கொள்கலன் செயற்பாட்டாளர்களுக்கும் பொலிசாருக்கும் உண்டு. சட்டவிரோதமான நடவடிக்கையில் கொள்கலன்கள் ஈடுபடாது என்ற நம்பிக்கையே இதன் அடித்தளம். ஆயினும் சில சாரதிகள் இந்த நம்பிக்கையைச் சிதைத்துவிடுவதுபோல நடந்துவிடுவதால், தற்பொழுது மூடப்பட்ட கொள்கலன்களில் மேற்குலகப் பொலிசாரின் கண்கள் அவ்வப்போது விழுந்துவிடுகின்றன. விரைவாக பெருமளவு பணத்தினைச் சம்பாதிக்கும் ஆசை சில சாரதிகளுக்கு வந்துவிடுவதால் அவர்கள் போதைப் பொருட் கடத்தல், ஆட்கடத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுவிடுகின்றனர். அவ்வகையான வகையில்தான் மகேஷ் குழுவினரைக் கடத்தும் சாரதிகள் அடங்குகின்றனர். அமெரிக்க டொலர் மோகம் அவர்களது கண்களை மறைத்ததனால் தமது கொள்கலன்களின் நிலையையோ கடத்தப்படுபவர்களின் நிலையையோ அவர்கள் கவனத்திற்கெடுக்கவில்லை. மகேஷ் குழுவினர் அடைக்கப்பட்ட கொள்கலன்கள் முழுமையாக மூடப்பட்ட வகையினைச் சார்ந்தது. காற்றோட்டத்திற்கான வழிகள் அங்கு இல்லை. ஆயினும் சரியான இரவுப் பயணத்தின் பின்னர் காலைவேளையில் சிறிதுநேரம் வாகனத்தினை நிறுத்தி கொள்கலன்களைத் திறந்துவிடுவதென்பதுதான் ஆரம்பத்திட்டமாக இருந்தது. அவ்வாறு செய்திருந்தால் பரிதாபகரமான உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்காது. ஆனால் அவ்வாறு நடக்கவில்லை.

கொள்கலன்களின் மூலமாக இடம்பெறும் ஆட்கடத்தல்களின்போது சில எதிர்பாராத நிகழ்ச்சிகள்கூட இடம்பெற்றுவிடும். பாரிய கொள்கலன்களைச் செலுத்தும் அநேக சாரதிகளுக்கு ஒரு பலவீனம் உண்டு. அதாவது நீண்டதூரமாக அவர்கள் வாகனத்தைச் செலுத்துவதால் இடையிடையே அவர்களுக்கு சில 'உடல்தேவைகளும்' எழுவதுண்டு. இந்நிலைமை அமெரிக்க

### உண்மைச் சம்பவங்களின் தொகுப்பு

சாரதியாய் இருந்தாலும்சரி, இந்திய கொள்கலன் சாரதியாக இருந்தாலும்சரி பொதுவானது. மனிதர் நடமாடிச் செல்லமுடியாத நெடுஞ்சாலைகளில் 'இவற்றிற்கு' எவ்வாறு சாத்தியமென ஒரு எண்ணம் உங்களுக்கு எழலாம். ஆனால் நெடுஞ்சாலைகளில் அவற்றிற்கு வகை இருக்கின்றது. குறிப்பிட்ட சில இடங்களில் கொள்கலன் சாரதிகளை எதிர்பார்த்து இரவுப் பெண்கள் காத்திருப்பார்கள். இவ் விடங்கள் அவ்வழியாகப் பயணத்தினை மேற்கொள்ளும் அனைத்துச் சாரதிகளுக்கும் தெரிந்திருக்கும். எனவே தமது பயணத்தினை இடைநிறுத்தி பல சாரதிகள் இங்கு தமது 'தேவைகளைப் பூர்த்தி செய்வது' வழக்கம்.

ஒருமுறை போலந்துநாட்டில் எம்மவர்களை தனது வாகனத்தில் கடத்திக்கொண்டுவந்த சாரதிக்கு இவ்வாறான ஒரு 'தேவை' வழியில் ஏற்பட்டுவிட்டது. தனது பயணத்தை இடைநிறுத்தி தனது தேவையைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக கொள்கலன்களைத் திறந்து அடைக்கப்பட்டிருந்த எம்மவர்களை வெளியே சற்றுநேரம் காற்றுவாங்குமாறு அனுமதித்துவிட்டான். வாகனத்திலிருந்து இறக்கப்பட்டவர்களுக்கு அது எவ்வகையான இடம் என்பது தெரிந்திருக்கவில்லை. இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் அக்கொள்கலனுக்குள் பெண்களும் இருந்திருக்கின்றனர். . சாரதி தனது தேவையைநோக்கிச் சென்றபின்னர், கொள்கலனிலிருந்து இறக்கிவிடப்பட்ட நம்மவர்கள் சுற்றுப்புறத்தில் சற்று உலாவியிருக்கின்றனர். அப்போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது. தமக்கு அறிமுகமில்லாத சில பெண்கள் அப்பகுதியில் உலாவுவதைக் கண்ட போலந்தின் இரவுப் பெண்களுக்கு, அப் பெண்கள் தமது தொழிலுக்கு போட்டியாக வந்துவிட்டார்கள் என நினைத்து அவர்கள் அனைவரும் எமது பெண்களைச் சுற்றிநின்று அதுபற்றி உள்ளூர் மொழியில் வினாவ விவகாரத்தைப் புரிந்துகொள்ளாத எமது பெண்கள், பயத்தில் அரைகுறை ஆங்கிலத்தில் Yes - No எனச் சொல்லிவைக்க, அவர்கள் மீது தாக்குதலை நடாத்தக்கூடிய அளவிற்குக் கூட எதற்கும் துணிந்த போலந்தின் இரவுப் பெண்கள் வந்துவிட்டார்கள். நிலைமை இவ்வாறு மோசமாகப்போகும் வேளை தனது தேவையைப் பூர்த்திசெய்த சாரதி நல்லவேளையாகத் திரும்பி வந்ததால், எமது பெண்கள் அடிவாங்காமல் தப்பித்துக்கொண்டார்கள். இல்லையென்றால் அன்று நடந்தது வேறாகவிருந்திருக்கும். நான் குறிப்பிட்டது ஒரு உதாரணம் மட்டுமே.

இவ்வாறான பல இன்னல்களை கொள்கலன் ஆட்கடத்தல் பயணத்தில் சந்திக்கவேண்டி நேரிடும். தமது மேற்குலகக் கனவுகளுக்காக இந்த கொடூரங்களையெல்லாம் சகித்த பின்னர்தான் இந்த நாடுகளில் அவர்கள் காலடிவைக்கின்றனர். இவ்வாறான பல கொடூரங்கள், அதை அனுபவித்தவர்களுடனேயே மறைந்துவிடுவதால் மேலும் பலர் 'விட்டில்பூச்சிகளாக' இந்தக் கொடூரங்களுக்குள் சிக்கிவிடுகின்றனர். அவ்வாறு அவர்கள் வெளிக்காட்டப்படாதமையைக்கூட அவர்கள் மீது முழுமையான குற்றமாக நாம் சொல்லமுடியாது. எமது சமூகத்தின் பார்வைக்கோளாறுதான் இவ்வாறன வெளிக்காட்டல்களுக்கு தடைவிதிக்கின்றது. உதாரணமாக திருமணத்திற்காக இவ்வாறான பயங்கரப் பாதையூடாக பயணம் செய்யும் இளம் பெண் ஒருவர், தனக்கு வழியில் 'ஏதாவது' உடல் ரீதியான தொந்தரவுகள் ஏற்பட்டால் இதயசுத்தியுடன் தனது வருங்காலத் துணைவருக்கு இதுபற்றிச் சொன்னால் எத்தனை வருங்காலத் துணைவர்கள் அதனை இதய சுத்தியுடன் எதிர்கொள்வார்கள்? பதில் நிச்சயமாக ஆரோக்கியமாக இருக்கப்போவதில்லை. இந்த நிலையால்தான் கொடுமைகளை அனுபவிக்கும் பெண்களே வாய்மூடி மௌனிகளாக இருந்துவிடுகின்றனர்.




மகேஷ் குழுவினர் கடத்தப்படும் கொள்கலனை காலை வேளையில் சாரதி திறந்துவிடுவதாக திட்டம் இருந்ததென குறிப்பிட்டேனல்லவா. ஆனால் சாரதியின் மதுபோதை அத்திட்டத்தினை முற்றாகவே மறைத்துவிட்டது. ருமேனியாவினை அடைந்த வாகனம் தொடர்ந்தும் ஓடிக்கொண்டிருந்தது. போதையில்தான் வாகனத்தை சாரதி செலுத்திக் கொண்டிருந்தான். உள்ளே அடைக்கப்பட்டவர்களுக்கு பகல் எது? இரவு எது எனத் தெரியாவிடிலும் இரவு நேரம் கொள்கலனில் அடைக்கப்பட்டதால் அனைவருக்கும் இயற்கை உபாதைகள் தொந்தரவு செய்ய ஆரம்பித்தன. திறந்துவிடவேண்டிய நேரத்தையும் தாண்டி மணித்துளிகள் கரைந்துகொண்டிருக்க ருமேனிய எல்லையைக் கடந்து ஹங்கேரி நாட்டூடாக வாகனம் சென்றுகொண்டிருந்தது. போதையில் இருந்த சாரதி காலைவேளை இவர்களை சற்றுநேரம் திறந்துவிட வேண்டும் என்பதை சுத்தமாகவே மறந்துவிட்டான். இயற்கைத் தொந்தரவுகள் ஒருபுறம், பசிதாகம் இன்னொரு புறமுமாக உள்ளே அடைக்கப்பட்டிருந்தவர்களை வதைத்துக் கொண்டிருந்தது. கோடை காலம் ஆகையால் சூரிய வெப்பம் கொள்கலனை விரைவாக சூடேற்றிக்கொண்டிருந்தது. கொள்கலனுக்குள் சரியான காற்றோட்ட வசதி இல்லாமையினால் கொஞ்சம் கொஞ்சமாக மூச்சுத் திணறலும் அவர்களுக்கு ஆரம்பித்தது. நேரம் செல்லச்செல்ல தமது உடலின் அசௌகரியத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாத மகேஷ் குழுவினர் வாகனத்தை நிறுத்துவதற்காக கொள்கலனின் சுவர்களில் தமது கைகளால் பலமாகத் தட்டத்தொடங்கினர். போதையில் இருந்த சாரதிக்கு வாகன இரைச்சலை மீறி இச் சத்தம் அவனுக்குக் கேட்கவில்லை. போதையில்லாது இருந்திருப்பானேயானால் ஓரளவு இதனைக் கிரகித்திருக்க முடியும். ஆனால் நிலைமைதான் அவ்வாறில்லையே. நேரம் நண்பகலை நெருங்க நெருங்க கொள்கலனின் உள்வெப்பம் கிடுகிடுவென அதிகரிக்கத்தொடங்கியது. உள்ளேயிருந்த ஒட்சிசன் வீதமும் மிகக் குறைவாகவே அவர்களது உடலெல்லாம் வியர்த்துக்கொட்டியதுடன் மெல்லமெல்ல மயக்க நிலையும் வந்துகொண்டிருந்தது. ஆயினும் அவர்கள் கொள்கலச் சுவர்களில் தட்டுவதை நிறுத்தவில்லை. கைகள் வீங்கிப்போகுமளவுக்கு அவர்கள் தட்டியிருந்தமை அவர்களது சடலங்களில் கூடத் தெரிந்தது. ஆயினும் சாரதி வாகனத்தை நிறுத்தாமல் ஓடிக்கொண்டிருந்தான். நேரம் கிட்டத்தட்ட நண்பகலை எட்டும்பொழுது பல்வேறு ஆசைகளுடன் தமது தாயகத்தை விட்டு வந்த அந்த அப்பாவி உயிர்கள் கொள்கலனுக்குள்ளேயே மூச்சுத் திணறி பிணமாகச் சரிந்துவிட்டனர். உண்மையில் என்ன நடந்ததென்பதைச் சொல்வதற்குக்கூட அங்கு யாரும் இல்லை. ஆனால் சடலப் பரிசோதனைதான் இந்த அப்பாவிகள் அனைவரும் மூச்சுத் திணறியும், வெப்பத்தில் சுருண்டும் மடிந்தகோரத்தினைத் தெரியப்படுத்தியது. இந்தச் சம்பவம் பரபரப்பான உலகச் செய்திகளில் இருந்து மறைந்துவிட்டாலும், மூன்று பிள்ளைகளுடன் தனது 35 வயது இளமையுடன் அக்கரைப்பற்றில் ஒரு மூலையில் இன்றும் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கும் மகேஷின் மனைவியைப் போன்ற உறவுகளுக்கு ,இந்த மரணம் ஒரு பாரிய இடியினைக் கொடுத்துள்ளதென்றால் அது வெறும் வார்த்தைக்குக் கூறப்படும் ஒரு விடயமல்ல. முகவர்களின் பணத்தாசை என்னும் கொடிய பேய், இந்த அப்பாவிகளின் வாழ்வினைக் குடித்துவிட்டது.

இந்த மரணங்களுக்கு நீதி எப்போது கிடைக்கும் என்பது இன்று மனிதாபிமானமுள்ளவர்களிடம் கனன்றுகொண்டிருக்கும் ஒரு கேள்வியாகும்.

(துயரப் பயணம் முடிந்தது)

- வேம்பு

# மறுபிறவி

12

**- சுபா.சுந்தரம் -**

(தன் சிறை அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் தமிழ்ஆர்வலர்)

பத்மநாபா கொலை வழக்கு புத்துயிர் பெற்றது. ராஜீவ் கொலை வழக்கில் கைதாகியிருந்த சிலரிடம் பத்மநாபா கொலை பற்றிய விசாரணை நடந்தது. மாநில சிறப்பு புலனாய்வினர்தான் இந்த விசாரணையை மேற்கொண்டனர். ராஜீவ் வழக்கில் சிக்கியிருந்த சாந்தன், விக்கி, இரும்பொறை ஆகியோர் பத்மநாபா கொலை வழக்கிலும் சேர்க்கப்பட்டனர். போலீஸ் . விசாரணைக்காக அவர்கள் வெளியே அழைத்துச் செல்லப்படுவதும், 15 நாட்கள் கழித்து மீண்டும் சிறைக்குக்கொண்டு வரப்படுவதுமாக இருந்தனர்.

கடுமையான சோதனைக்குப் பிறகுதான் அவர்களை செல்லுக்குள் அனுப்புவார்கள். அவர்கள் பயன்படுத்திய டுத்பேஸ்ட்டை ஒரு அதிகாரி பல்லில் தேய்த்துப்பார்ப்பார். அவர்கள் கொண்டுவந்த துணிகளை தண்ணீரில் இருநாட்கள் ஊறவைத்துத்தான் கொடுப்பார்கள். 'சையனைட்' என்ற கொடிய விஷம் எந்த ரூபத்திலும் சிறைக்குள் வந்துவிடக் கூடாது என்பதற்காக இந்தக் கடுமையான சோதனைகள் நடப்பதுண்டு.

சிறைகளிலிருந்து கைதிகள் தப்பிச் செல்வது எல்லா நாட்டிலும் நடந்து வருகிறது.

அதனால் சிறைச் சாலைகளில் கண்காணிப்பு முறைகள் அவ்வப்போது மாறுபடும். செங்கல்பட்டு சிறையில் மாலை அடைப்புக்கு முன்பாக ஐந்துமணி அளவில் ஒரு ஏட்டு வந்து எல்லா சிறைக்கம்பிகளையும் தட்டித் தட்டிப் பார்ப்பார். யாராவது கம்பிகளை அறுத்து வைத்திருந்தால் வித்தியாசமான சத்தம் வரும் என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு. ஒரு முறை செல் ஒன்றின் கம்பிகளுக்கு இடையே கையை நுழைத்து பூட்டில் தீக்குச்சி மருந்துகளைத் திணித்து அதனை வெடிக்கச் செய்து பூட்டை உடைத்துவிட்டார்களாம். அதிலிருந்து சிறையில், பீடி, சிகரெட்டுக்கு அனுமதி கிடைத்தாலும் தீப்பெட்டிக்கு அனுமதிகிடையாது. சிறை விதிகளுக்கு புறம்பான பொருளாக தீப்பெட்டி அறிவிக்கப்பட்டது. பெட்டிக்கடைகளில் சிகரெட், பீடி வாங்குகிறவர்கள் அதனை பற்ற வைக்க, கடையருகே ஒரு கயிற்றில் தீயை பற்றவைத்து மாட்டியிருப்பார்கள். அப்படித்தான் சிறையிலும் கயிற்றில் நெருப்பு பற்றவைத்துக் கொண்டுவந்து கொடுப்பார்கள்.

ஒரு அறையில் இருந்தால் தப்பிக்கும் வழியை கைதிகள் கண்டு பிடித்துவிடுவார்கள் என்பதால் ஒவ்வொரு நாளும் அறை மாற்றப்படும். யார், யார் எந்த அறைக்கு மாற வேண்டும் என்பதை மாலை 4.30 மணிக்கு மேல்தான் சிறை அதிகாரி அறிவிப்பார். மாலை உணவு முடிந்ததும் மாற்றப்பட்ட அறைக்குள் செல்வோம்.

எங்களுக்கு படிப்பதற்காக நாளிதழ்கள் கொடுப்பார்கள். அதில் உலகில் எந்த மூலையில் கைதிகள் தப்பித்திருந்தாலும் அது பற்றிய செய்தியை மட்டும் கருப்பு மைபூசி மறைத்துக்கொடுப்பார்கள். பத்திரிகை முழுவதையும் மேலதிகாரிகள் படித்து தணிக்கை செய்யப்பட்ட பிறகுதான், எங்களுக்கு படிக்கக்கொடுப்பார்கள்.

ஏதாவது ஒரு நாள் பத்திரிகை கிடைக்க தாமதமானால் செய்திகள் தணிக்கை செய்யப்படுகின்றன என்பதை புரிந்துகொள்வோம்.

ஒருநாள் காலையில் இந்து பத்திரிகையுடன் பேரறிவாளன் வந்தார். 'அண்ணே- உங்களைப் பற்றி இந்துவில் செய்தி வந்திருக்குது' என்றார். அதனை வாங்கிப் பார்த்ததும் அதிர்ச்சியடைந்தேன்.

'பொள்ளாச்சியில் சுபா சுந்தரத்திற்கு அடைக்கலம் கொடுத்ததற்காக சுசீந்திரன் என்பவர் கைது செய்யப்பட்டார்' என்று அதில் செய்தி வெளியாகியிருந்தது. நான் பொள்ளாச்சிக்குச் செல்லவில்லை. சுசீந்திரன் என்பவரையும் தெரியாது. இப்படி ஒரு செய்தியா என்று கலங்கிப்போனேன். உண்மை என்ன வென்றால், சுபாவுக்கு அடைக்கலம் கொடுத்த சுசீந்திரன் என்பதற்கு பதில் சுபா சுந்தரத்திற்கு அடைக்கலம் கொடுத்த சுசீந்திரன் என்று இந்து நாளிதழ் தவறான செய்தியை வெளியிட்டிருந்தது. தவறான தகவலைத் தாங்கி செய்தி வரும்போது எப்படி ஒருவரது மனம் பாதிக்கும் என்பதை அன்று நான் உணர்ந்தேன். ராஜீவ் கொலை வழக்கைப் பொறுத்தவரை என்னை இப்படிப் பட்ட துரதிர்ஷ்டங்கள் தொடர்ந்து கொண்டே இருந்தன.

பெரியார், பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, எம்.ஜி. ஆர்., கலைஞர் என தமிழகத்தின் மூத்த அரசியல் தலைவர்களுடன் நெருங்கிப் பழகவும், அவர்களின் அரிய படங்களை எடுக்கவும் வாய்ப்புப் பெற்றவன் நான். பத்திரிகைத் துறை புகைப்படக்காரராக எனது பங்களிப்பை திறம்படச் செய்திருக்கிறேன். ஒவ்வொரு கட்சியின் தலைமை அலுவலகங்களிலும் மாட்டப்பட்டிருக்கும் தலைவர்களின் படங்களில் பெரும்பாலானவை நான் எடுத்தவைதான் என்பதில் எனக்கு பெருமையும் மகிழ்ச்சியும் உண்டு. பல தலைவர்களிடம் மதிப்பைப் பெற்றிருக்கும் நான், ராஜீவ் எனும் அகில இந்திய தலைவர் கொல்லப்பட்ட வழக்கில் குற்றவாளியாக சித்தரிக்கப்பட்டதும், சோறுபோடும் கருவியான கேமராவே என்னை



இந்த நெருக்கடிக்கு தள்ளியதையும் கொடுமை என்றுதான் சொல்ல வேண்டும்.

தூக்குக் கயிற்றில் வாழ்க்கை முடியப்போகிறதோ, மனைவி, மக்கள் நிராதரவாய் நிற்கப் போகிறார்களோ, பாடுபட்டு சம்பாதித்த நற்பெயரெல்லாம் பாழாகப் போகிறதோ என சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் கண்ணீருடன் சிந்தித்தபடியே காலம் கழித்த வேளையில்தான் அபயக்கரமாய் நீண்டது உலகத் தமிழர்களின் ஆதரவு. தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறன் உள்ளிட்ட தமிழ் உணர்வாளர்கள் மேற்கொண்ட மீட்பு முயற்சிக்கு என்னைப் பார்த்தறியாத தமிழர்களும் அள்ளிக்கொடுத்ததையும் வாரி வழங்கியதையும் நினைக்கையில் நீரூற்று ஆகியது என் கண்கள். அந்தத் தமிழர்களின் அன்பும் ஆதரவும் பிரார்த்தனையும் நான் உள்ளிட்ட 19 பேரை தூக்கு கயிற்றிலிருந்து மீட்டு சிறையிலிருந்து விடுவித்துள்ளது. அந்த ஈர நெஞ்சங்களுக்கு நன்றி சொல்லவும், எட்டு ஆண்டுகால சிறை அனுபவங்களை மக்களுடன் பகிர்ந்துகொள்ளவும் இந்த 'மறுபிறவி' மூலம் மகத்தான வாய்ப்பை வழங்கியது நக்கீரன்.

தமிழர்களின் உணர்வலைகளை பிரதிபலிப்பதில் முன்னணியில் இருக்கும் நக்கீரன் இதழின் ஆசிரியர் கோபால் அவர்களுக்கும் இணையாசிரியர் காமராஜ் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

**நீதியின் கண்களை நிரந்தரமாய் குருடாக்க முடியாது.**

(முற்றும்)

**தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறன் உள்ளிட்ட தமிழ் உணர்வாளர்கள் மேற்கொண்ட மீட்பு முயற்சிக்கு என்னைப் பார்த்தறியாத தமிழர்களும் அள்ளிக்கொடுத்ததையும் வாரி வழங்கியதையும் நினைக்கையில் நீரூற்று ஆகியது என் கண்கள்.**

# தமிழர் நடந்த பாதை

4

திரவிட இனம் இன்று தென்னிந்தியாவில் மிகுதியாய் நிறைந்து வாழும் இனமாக உள்ளதென்றாலும் இத் திரவிட இனத்திற்கு உரிமையுடைய மொழிகள் பல நடு இந்தியாவிலும் வட இந்தியாவிலும் இந்தியாவைத் தாண்டி அதன் மேற்குப் பகுதியிலும் இன்றும் வாழ்ந்து வருகின்றன.

குருக், மால்அடா, பிராகுவி, கோயா ஆகிய நான்கு மொழிகள் வடதிரவிட மொழிகளாகும். இவற்றுள் பிராகுயி தவிர ஏனைய மூன்றும் பீகார், அசாம், வங்காளம், மத்தியபிரதேசம் ஆகிய இந்தியப்பகுதிகளில் பேசப்பட்டு வருகின்றன. பிராகுயி என்னும் வடதிரவிடமொழி மட்டும் இந்தியாவைத் தாண்டி பாகிஸ்தானிலுள்ள கலத் [Kalat] ஹயர்பூர் (Hairpur) மாவட்டங்களிலும் இன்னும் பாகிஸ்தானுக்கு மேற்கே உள்ள ஆப்கானிஸ்தான், ஈரான் ஆகிய பகுதிகளிலும் ஏறத்தாழ மூன்று இலக்கம் மக்களால் பேசப்படும் மொழியாக இருக்கிறது.

ஆப்கானிஸ்தாணம், ஈரான் மேட்டுநிலம், யூப்ரடீஸ், டைக்கிரிஸ் ஆறுகளின் சமவெளிப்பகுதிகள் மற்றும் மெசபட்டோமியாவின் பகுதிகள் பலவற்றிலும் வழங்குகின்ற பல ஊர்ப் பெயர்கள், திரவிட மொழிகளின் உருவங்களை ஒத்துள்ளன என்று வரலாற்றுப் பேரறிஞர் கே.ஏ. நீலகண்ட சாத்திரியர் தம் தென்னிந்திய வரலாறு என்னும் நூலில் குறிப்பிடுகிறார். இதுகொண்டு திரவிடர்கள் இப்பகுதியிலிருந்து இந்தியாவிற்குள் ஊடுருவியிருக்க வேண்டும் என்று அவர் முடிவு செய்கிறார்.

மேலும் ஆப்கானிஸ்தான், ஈராக், யூப்ரடீஸ், டைக்ரிஸ் ஆகிய பகுதிகளில் வழங்கிய ஹுரியன் மொழியும் 'காவைட்' மொழியும் தமிழோடு உறவுடையதாய் உள்ளதை நீலகண்ட சாத்திரி தெரிவிக்கின்றார். ஈரான் பீடபூமியில் வாழ்ந்த பழங்குடி மக்களான காஸ்பியர்களுடைய பண்பாடு திரவிட மொழிகளைப்பேசும் மக்களுடைய பண்பாட்டோடு உறவுகொண்டுள்ளதென்றும் சாத்திரியார் பேசுகின்றார்.

டாக்டர் கால்டுவெல், திரவிட மொழிகளைச் சித்தியம் என்னும் மொழிக் குடும்பத்தில் இணைப்பார். இச் சித்திய மொழிகளில் முதன்மையாவன, பின்னிஷ், துருக்கி, மங்கோலியம், துங்கேசியம் என்பன. இம்மொழிகள் யாவும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வட ஆசியாவிலும் வட ஐரோப்பிய நாடுகளிலும் பழங்குடிகளாய் வாழ்ந்தவர்கள் பேசிய மொழிகளாகும்.

மொழி நூலறிஞர்களும், வரலாற்றறிஞர்களும் தமிழர் வரலாற்றை மேற்குறிப்பிட்ட மைய ஆசியப்பகுதிகளை ஒட்டிய இடத்திலிருந்தே தொடங்குகின்றனர். இருவரும் ஒருவருக்கொருவர் கைகுலுக்கிக் கொள்கின்றனர். டாக்டர் கால்டுவெல்லின் திரவிட மொழி ஆராய்ச்சி காட்டும் திசையிலேயே திரவிட இன வரலாற்றாசிரியர்களின் கவனமும் செல்கின்றது.

பாரசீகம் எனப்படும் இன்றைய ஈரான் பகுதியில் வாழும் ஆர்மீனிய மக்களின் உடற்கூறு இன்றை திராவிட மக்களின் உடற்கூற்றோடு பெரிதும் ஒத்துள்ளதென்று கே.ஏ.நீலகண்ட சாத்திரி எடுத்துக்காட்டுகின்றார். மேலும் சில பழக்கவழக்க ஒற்றுமைகளைக் காட்டியும் சாத்திரியார் தம் கருத்தை வலியுறுத்துகின்றார்.

பழைய சேரநாடாகிய கேரளத்திலும் தமிழீழத்திலும் சொத்துரிமை பெண்ணிற்கே உரியதாக இன்றும் நடைமுறை உள்ளது. இதனை மருமக்கள் தாயம் என்பர். இப்பழக்கம் காஸ்பிய இனத்தின் கிளையாகிய எலமைட் மக்களிடத்தில் முன்பு நடைமுறையில் இருந்ததெனச் சாத்திரியார் கூறுகின்றார். திரவிட மக்களிடம் இன்றும் இருக்கும் பாம்பு வழிபாடு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மேற்கு ஆசியாவில் இருந்துள்ளது. 'பெர்சிப் போலிஸ்' என்னும் நகரில் நடந்த அகழ்வாய்வில் இவ்வுண்மை பெறப்பட்டது. தெற்குப் பாபிலோனியாவில் உள்ள ஒரு நகரம் முன்பு 'ஊர்' என்ற பெயராலேயே அழைக்கப்பட்டுள்ளது. பாபிலோனிய மக்கள் நிலவையும் மலைமகளையும் வணங்கியுள்ளனர். பழந்தமிழகத்தில் நிலவிற்குத் தனிக்கோயிலே இருந்ததைச் சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது. பிறை தொழுதல் என்பது தமிழ் அகப்பொருள் இலக்கணத்தில் ஒரு துறையாகவே உள்ளது.

பண்டைய சுமேரியாவில் உள்ள கோயில் வழிபாட்டமைப்பு திரவிடர்களின் கோயில் வழிபாட்டமைப்போடு தொடர்புடையதாய் இருக்கிறது. சுமேரியக் கோயில்களில் கோயில் பணிக்காகத் தேவரடியார்கள் இருந்துள்ளனர். நம் தமிழகக் கோயில்களில் நெடுங்காலம்வரை இம் மரபு இருந்தது. இவையெல்லாம் நீலகண்ட சாத்திரியார் காணும் சுமேரிய தமிழ்ப்பண்பாட்டு ஒற்றுமைக் கூறுகளாகும்.

## பேரா.கு.அரசேந்திரன்

மொழியாராய்ச்சி மூலமாகவும் வரலாற்றாராய்ச்சி மூலமாகவும் மேற்குறித்தாங்கு ஆய்வு செய்து, முடிவுரைக்கும் அறிஞர்கள், சுருக்கமாகத் திரவிடர் வரலாற்றைப் பின் வரும்படியாகவே கூறுகின்றனர். அதாவது இந்தியாவிற்கு வடமேற்கே செழித்து வளர்ந்திருந்த எகிப்திய சுமேரிய நாகரிகத்திலிருந்தே சிந்து சமவெளி நாகரிகம் தோன்றியது. ஆரிய மொழிகள் எதனையும் சாராத இந்நாகரிகம், திரவிட நாகரிகமாக சிந்து சமவெளியில் அமைந்தது. சிந்து சமவெளியில் நாகரிகம் தோற்றிய திரவிடர்கள், பிறகு இமயமலையின் அடிவாரத்தில் உள்ள பஞ்சாப் முதல் வங்கம் வரை பரவி வாழ்ந்து சங்கைச் சமவெளியில் காலூன்றி மேலும் தெற்கு நோக்கி நகர்ந்து இந்தியாவின் தென்கோடிப் பகுதியாகிய தமிழகத்திற்கும் அதனையும் தாண்டிய இலங்கைக்கும் சென்று சேர்ந்தனர். இவ்வாறு திராவிடர்கள் தமிழகத்திற்குச் சென்று சேர்ந்தது, கி.மு. 1000 முதல் 500 வரையிலான காலமாக இருக்கவேண்டும்.

தமிழர்களின் தாயகம் பற்றி இதுவரையில் அறிஞர்கள் கண்டறிந்ததாகச் சொல்லப்பட்ட செய்திகள் யாவும் உண்மையா? தமிழர்களும் இந்திய மண்ணிற்கு, ஏன் தமிழ் மண்ணிற்கு-தமிழீழத்திற்கு ஒரு காலத்தில் வந்தேறிய குடிகள்தாமா? தமிழர்தாயகம் இந்தியாவைத் தாண்டிய மைய ஆசியப்பகுதிதானா. இக்கருத்துக்களுக்கு நேர்மாறான எதிர்க்கருத்துகள் உண்டா? தமிழரின் வரலாற்றுப்பாதையை மேலும் தொடர்வோம்!

[வளரும்]

# நோயற்ற வாழ்வே...

## சிறுநீரக கற்களை தவிர்க்க தாராளமாய் தண்ணீர் அருந்துங்கள்

**தண்ணீர் குடிக்கலாமா?**

காலையில் ஒன்றரை லீற்றர் தண்ணீரை வெறும் வயிற்றில் அருந்தி எல்லா நோய்களையும் குணமாக்கிக்கொள்ளும் தண்ணீர் வைத்தியம் இன்று பலரால் பின்பற்றப்படுகிறது.

கட்டடப்பணியில் ஈடுபட்டுள்ளவர்களும், பள்ளி, கல்லூரி ஆசிரியப் பெருமக்களும் நன்கு தண்ணீர் அருந்துவதில்லை. இதனால் அடிக்கடி சிறுநீர் கழிக்கப்போக வேண்டும் என்பதற்காகவே தண்ணீர் அருந்துவதைத் தவிர்க்கிறார்கள். நீண்ட நேரம் பேருந்தில் பயணிக்கிறவர்களும் இதேபோல் தவிர்த்து விடுகிறர்கள். இது நல்ல பழக்கமல்ல. பேருந்துப் பயணிகள் கையில் தண்ணீர் எடுத்துக்கொண்டு இறங்குவதற்குச் சற்று முன்பும், பயணத்திற்கு இருமணி நேரம் முன்பும் அருந்தவேண்டும்.



நடைப்பயிற்சி செய்பவர்களும், உடற்பயிற்சி செய்பவர்களும் உடலில் நீர்ச்சத்தை வியர்வை மூலம் அதிகம் அகற்றுகிறார்கள். அதே நேரத்தில் இந்த இழப்பை ஈடுகட்டப் போதுமான அளவு தண்ணீர் அருந்துவதில்லை. இதனால், இவர்களுக்கு மிக எளிதாகச் சிறுநீரகக் கற்கள் உருவாகிவிடும். தண்ணீர் நன்கு அருந்துவதால் பல நோய்கள் குணமாவதுடன் மன இறுக்கம் அகலும்.

ஒரு தடவைக்கு 250 மில்லி வீதம் 8 முறையாவது ஒவ்வொருவரும் நன்கு தண்ணீர் அருந்தவேண்டும்.

அசைவ உணவு, பால், தக்காளி போன்ற ஆக்ஸலேட் உப்பு அதிகம் உள்ள உணவை அதிகம் சாப்பிடுபவர்களும் உணவில் உப்பை நிறையச் சேர்த்துக்கொள்பவர்களும் சிறுநீரகக் கற்களை வலிந்து உருவாக்கிக்கொள்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள், இந்த உணவு வகையால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பு உள்ளவர்கள், அதிகமாகத் தண்ணீர் அருந்திவிடுங்கள்.

தினமும் கீரை சேர்ப்பவர்களும் நன்கு தண்ணீர் அருந்தவேண்டும். பாலைக் கெட்டியாக அருந்துவது தவிர்க்கப்படவேண்டும். அசைவ உணவு சராசரியாகத் தினமும் 80கிராம் வரையே இருக்கலாம்.

50 கிராமிற்கு மேல் வேர்க்கடலை சாப்பிடுவதும் உடலில் நீர்ச்சத்தைக் குறைத்து, சிறுநீரகத்தில் கற்களை உருவாக்கும். வைட்டமின் 'சி' மாத்திரை சாப்பிடுகிறவர்கள் மாத்திரையின் அளவைக் கூட்டாமல் பார்த்துக்கொள்ளுங்கள். 'சி' மாத்திரைகள் அதிகம் சாப்பிட்டால் கற்கள் உருவாக வாய்ப்புண்டு.

சிறுநீரகக் கற்களை, எலுமிச்சம் பழ சர்பத் நன்கு கரையச் செய்யும். இதில் கிடைக்கும் வைட்டமின் 'சி' யே ஒருவருக்குப் போதுமானது. தினமும் வாழைப்பழம் சாப்பிடுவதும் கற்கள் உருவாவதைத் தடுக்கும்.

தினமும் தண்ணீரை நன்கு அருந்தி உடலில் நீர்ச்சத்துக் குறையாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

*நன்றி: கல்கண்டு*

அம்பாள் வாகன சேவை
AMBAL TRANSPORT

பொருட்களை ஏற்றி இறக்கவும், மங்கள வைபவங்கள், ஸ்தல யாத்திரைகள், சுற்றுலாக்கள், ஐரோப்பிய நாடுகளுக்கான 9 இருக்கைகள் கொண்ட வாகனசேவைகளுக்கு



ஜெயம்:
26, Rue Perdonnet, 75010
Paris.
Mo: La Chapelle
Tel: 06 03 84 02 29 / 06 10 38 44 92 / 06 84 57 21 77

காலத்தைப் பதிவு செய்து மாயோன் எழுதுவது

# காவலமே நில் - இப்போ என் கதைகேள்!

வேதனையிலிருந்து எழுகின்றது தீயாய் ஒரு குரல்-வெறும் குயிலின் கூவலாக அல்ல, பெடையைத் தொலைத்த ஒரு ஆண்மயிலின் அகவலாய் எழுகிறது.

காற்று இந்த விதமாய்க் கனத்து வீசும் என்று நேற்றைக்கு நொந்தோமா? இல்லையே! நேற்று நாங்கள் நெஞ்சு நிமிர்த்தி நடந்து திரிந்த தெருக்கள்தானே?

இன்று எவனெவனோ கைகொண்டு, கழுத்தை நெரிக்க, நாங்கள் நெஞ்சிடிக்க, தலை குனிந்து, மருண்டு, மனசு வெருண்டு திரியும் வாழ்வல்லவா நமக்கு வாய்த்திருக்கிறது.

எங்களூர் அழகிழந்து போயிற்று இப்போ. மண் வரண்டதுதான், பாலையாக வெடித்ததுதான். மலர்கள் அவ்வளவா விரிந்து வாசனை வீசவில்லைத்தான்.

**மப்பின்றிக் கால மழை காண மண்**
**சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாமண்**
**ஏர் ஏறாமண்; காளை இழுக்கா மண்**
**பாறையாய் விளைந்தமண், எனினும்**
**பயன் விளைந்ததுகாண்.**

எங்கவூரில் என்ன இருந்தது? ஏறி உயர்ந்த மலைகள் இருந்தனவா? நடந்து திரியும் ஆறுகள் இருந்தனவா?

ஆழத்தில் நீர். அதனை அகழ்ந்தெடுத்து வாழத் தெரிந்தனரே. இந்த வையகம் செழிக்கும் வகை அறிந்தனரே.

ஏறி உயர்ந்த மலைகள் இல்லைத்தான். நடந்துதிரியும் ஆறுகளும் இல்லைத்தான். ஆயினும் என்ன இருந்தன தோள்கள். அது தெரியாதா?

தோளுக்கு வலிமை உண்டு. தோற்காத நாளும் உண்டு. நெஞ்சுக்கு நேர்மை உண்டு. நெறி பிறழா வாழ்வும் உண்டு.

**கடும் வெயில் அடிக்கும்**
**கருகிப்போய் மடிவோம்,**
**நெடும் கோடை நீளும்**
**நீண்ட பகலால் மடிவோம்**
**படும்பாடு-பட்ட வேதனை**
**படுவெய்யிற் கொடுமை**
**சுடும் விதம் நெருப்புத்தணல்**
**சொரிந்து தகிக்க வைக்கும்.**

ஆனால் தளரோம். தலை நிமிர்ந்து நாம் வென்றோம்.

எங்களூர் நேர்ப்பனைகள் தெரியுமா? நேரானது; நிமிர்ந்தது; நெஞ்சுயர்த்தி எழுந்தது. கடினமானது. கனகாலம் வாழத்தக்கது.

பனையின் இந்த வலிமையும், பனையின் இந்த நேரான தன்மையும் எங்கிருந்து பிறந்தது? எந்த நிலத்தில் இருந்து இது விளைந்தது?

எங்கள் நிலமல்லவா அது! எங்கள் வாழ்வல்லவா அது!

நாங்கள் எப்படி வாழவேண்டும் என்று பனை எங்களுக்கு உணர்த்திற்கு.

ஆனால் ஒரு விசயம்தான் நெஞ்சை உறுத்தும் விசயம்.

பனைகள் பார்த்துக்கொண்டிருக்க அவை நடந்தன. தென்னைகள் கேட்டுக்கொண்டிருக்க அவை நடந்தன. வேம்புகள் தலையசைத்துக்கொண்டிருக்க அவை நடந்தன. பனைகள் அதற்காகத் தலை குனியவில்லை; தட்டிக்கேட்கவில்லை. அதுதான் என் வெப்பியாரம். தென்னைகள் அதற்காக ஏங்கவில்லை. ஏனென்று கேட்கவில்லை. அதுதான் என் தீராக்கவலை. வேம்புகள் அதற்காகக் கொதித்து எழவில்லை. கோபம் கொண்டு குமுறவில்லை. அதுதான் என் வேதனை.

நேரான பனைகள் நெஞ்சு நிமிர்த்தி நம்மிடம் சொன்ன சேதி என்ன?

**நேராக வாழ்: வலிமையாக வாழ்;**
**சூழலிற்குத் தோதாக வாழ்.**

நேரான வாழ்வு, வலிமையான வாழ்வு. சூழலிற்குத் தோதான வாழ்வு. இந்த வாழ்க்கையைத் தானே நாம் வாழ்ந்தோம்.

இப்போது அதிலென்ன குறை? குறையா... கொடுமைவந்ததே கொன்று போட்டதே. கொடுமை என்றால் சொல்லவே கூசும் கொடுமை.

சொல்லமுடியாது. நால்வர் பெயர். கொடுமை என்னவென்று குறித்துக்கொள்.

**1. கிருஷாந்தி**
**2. ராஜினி**
**3. கோணேஸ்வரி**
**4. கமலிட்டா.**

நால்வர் மாத்திரம் தானா?

அல்ல. இன்னும் நிறைய. ஆயினும் பெயர் சொல்ல மறுத்தவர் பலர்; பேதையாய் மறந்தவர் சிலர்; பெண்ணாகி நின்றதனால் மறைத்தவர் சிலர்.

**நோகுதே நெஞ்சு**
**நொடிந்தின்னும் போகுதே உயிர்**
**வேகுதே மனசு - வேதனைத்தீயில்**
**வாட்டிய தசையாக**
**ஆகுதே உடல் - ஐயனே**
**ஆறிவார் இந்த அவலம்**

அந்த அவலம்; அந்தக் கொடூரம் இந்தவிதமாய் எழுந்த தன்மை எப்படி ஆயிற்று?

அவள் பிறப்பு, அவள் வளர்ப்பு, அவள் வாழ்வு எல்லாப் பெண்களையும் போன்றது. கிருஷாந்தியைப் போன்றது; ராஜினியைப் போன்றது;கோணேஸ்வரியைப் போன்றது; கமலிட்டாவைப் போன்றது.

வயதுக்கு வரும்வரை அவள் வாழ்வு ஆணாய் இருந்தது. வயதுக்கு வந்த பிறகோ அவள் வாழ்வு வேறு விதமாய் ஆனது. அவள் பெண்ணானாள். அவள் வாழ்வில் விசேட அடையாளமாயிற்று அது.

அவளுள் பெண்மை முழிக்கத்தொடங்கியது. அவள் என்ன சொல்கிறாள்?

'என் உடல் என் கவனத்திற்குரியதானது. என் பருவமாற்றம் எனக்குக் கூச்சம் தந்தது. வெட்கம் என்னைப் பிடுங்கித்தின்றது. ஆண்களின் முன்னால் கால்கள் தடுமாற்றம் அடைந்தன. கண்கள் பயத்தினால் மருண்டன. ஆண்களின் கைகள் உடலில் அனிச்சையாய்ப் பட்டால், என் உடல் நெருப்பு சுட்டாற்போல் சுருங்கியது.

நான் அப்படி வளர்க்கப்பட்டேன். அது சரியா, பிழையா என நான் விவாதிக்க விரும்பவில்லை. பிழை என்றுதான் இருக்கட்டுமன். ஆனால் என் வாழ்வு இதுதான். நான் இப்படித்தான் இருப்பேன். அப்படி இருப்பது என் வாழ்வாகிவிட்டது.

வளர்ந்த பிறகு, நான் சேலை கட்டத்தொடங்கிய பிறகு, மார்புச்சேலையை என் கைகள் சரி செய்வது இயல்பான வழக்கமாகிவிட்டது.

என் உடல் மீது நான் கொண்ட கவனம் அது. கற்பின் மீது நான் கொண்ட கவனம் அது.

கற்பு மனதிலானது. தெரியும் எனக்கு. ஆனால், எந்த ஒரு ஆணையும் என் உடல் மீது இச்சைப்பட நான் அனுமதிக்க முடியாது. என் உடல் உள்ளம் ஒருவனுக்கு மாத்திரமானது.

நான் வளர்க்கப்பட்டவிதம், என் உடலை நான் பேணியவிதம், உன் மனது ஒருவனிடம்தான் உயிர்ப்பாக இருக்கும் என்கின்ற உணர்வு - இதுதான் என்வாழ்வு.

விதவையானால், அந்த விதமாய் ஏதும் நடந்தால், அது அந்த நேரத்து மனநிலையைப் பொறுத்தது. மறுவிவாகம் மறுக்கப்படவில்லை. ஆனால் அது எங்களின் உணர்வைப் பொறுத்தவிடயம்.

இதிலிருந்துதான் நான் இதனையெல்லாம் பார்க்கிறேன்.

கிருஷாந்தியும், ராஜினியும், கோணேஸ்வரியும், கமலிட்டாவும் சிதைக்கப்பட்ட விதம், கொல்லப்பட்ட விதம், வெறும் பாலியல் வல்லுறவு. அதன் பின்னரான கொலை, அப்படி மாத்திரம் என்னால் பார்க்க இயலவில்லை.

இது எங்கள் பண்பாட்டின் மீதான சிதைவு. எங்கள் பண்பாட்டின் மீதான வல்லுறவு. எங்கள் பண்பாட்டின் மீதான கொலை.

உடல் பற்றியும், மனம் பற்றியும், கற்பு பற்றியும் எங்கள் வாழ்வின் ஒழுக்காற்றுக்கோர்வை பற்றியுமான எங்கள் கோட்பாடுகளின் மீதான - இடி, பூகம்பம், எரிமலை, கொடும் நெருப்பாறு.

இதிலிருந்து மீளல் எங்ஙனம் சாத்தியம்? மீளத் தொடங்கி விட்டோம். தெரியவில்லையா? செல்லத் தொடங்கிவிட்டோம் புரியவில்லையா? வாழத் தொடங்கிவிட்டோம் அறியவில்லையா? என்னைச் சிதைத்து, சீரழித்து, குண்டுவைத்து சிதறிப்போக முன்னம், சின்னா பின்னமாகிப்போக முன்னம்...

நான் வில்லெடுத்தேன். வாளெடுத்தேன். காளியாய் கனத்த ஆயுதங்களுடன் நான் களத்தில் இறங்கினேன். உணரவில்லையா? காலமே நில். இப்போ என் கதை கேள்.

# புகலிட நிகழ்வுகள்

## நெதர்லாந்து
## புனர்வாழ்வுக் கலைமாலை

தாயகத்தில் உணவின்றி, மருந்தின்றி தவிக்கும் எம் உறவுகளின் துயர் துடைக்கும் பொருட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நெதர்லாந்துப் பணியகத்தால் 10.07.99 சனிக்கிழமை Breda நகரில் 'புனர்வாழ்வுக் கலைமாலை' நடாத்தப்பட்டது.

நிகழ்ச்சிகளிலே குறிப்பிடும்படியாக ஜேர்மனி தமிழர் கலைபண்பாட்டுக் கழகத்தினரின் 'வெற்றி நிச்சயம்' எனும் நாட்டியநாடகம் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தது. இதில் பங்கேற்ற 20 இற்கும் மேற்பட்ட மாணவிகளும் அவர்களது ஆசிரியை திருமதி சாவித்திரி இமானுவேல் அவர்களும் பாராட்டுக்குரியவர்கள். நிகழ்ச்சிகளின் நடுவே அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் 'அதிர்ஷ்டம்' பார்க்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.





கலை நிகழ்ச்சிகளாக எழுச்சி நடனங்கள், சிறுவர் உரை, கவிதை, நாட்டியநாடகம், எழுச்சிகானங்கள் இடம்பெற்றிருந்தன. சிறப்புரையை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆரம்பகால நிறுவனர் திரு. Dr.மூர்த்தி பிரித்தானியாவிலிருந்து வருகைதந்து, ஆற்றியிருந்தார்.


## சுவிஸ் வாழ் தமிழ் மக்களே!

சிறீலங்காவில் உள்ள தேவையான உங்கள் ஆவணங்கள் சம்பந்தமான அலுவல்களை செய்ய பெற்றுத்தர உறுதியான முகவர் சேவை இங்கும்!

* பிறப்பு / இறப்பு பதிவு ஆவணங்களை பெற்றுத்தர
* திருமணப் பதிவு, திருமணமாகாத சான்றுப் பத்திரம்
* அடையாள அட்டை தொலைந்த / புதிதாக எடுக்க
* உறவினர்களை அழைப்பதற்கான சிறீலங்காவில் சுவிஸ் தூதரக ஆவண ஏற்பாடுகள் (இலங்கையில்)
* கடவுச்சீட்டு பெறத் தேவையான ஒழுங்குகள்

மற்றும் இவை சம்பந்தமான பலசேவைகளை (விரும்பினால் சுவிஸ் தூதரக உறுதிச்சான்றுடன்) வழங்க காத்திருக்கின்றோம்

* தொடர்புக்கு (சுவிஸ்) 076-5450938 ராம்

*திங்கள் - வெள்ளிக்கிழமைகளில்* 14h - 17h30-*வரையும்*
*சனி ஞாயிறு 24 மணி நேரமும்*

sw 23043


# மக்களை பாதுகாப்பதற்கான எமது கடமை
# பாரிஸ் எழுச்சிப் பெருவிழாவின் செய்தி

தம் தாய் மண்ணோடு தமிழ் மக்களின் உணர்வுபூர்வமான ஈடுபாடு என்பது உலகளாவியது. தமிழீழத்தில் அடக்குமுறை வாழ்வினுள் துன்புறும் மக்கள் மட்டுமல்ல, புலம்பெயர்ந்து வாழும் மக்களும் இன்று விடுதலைப் போரின் உறுதியான பங்காளர்களாகத் திகழ்கின்றனர் என்பதை சிறீலங்கா மட்டுமல்ல, உலக சமூகமும் அறியும். இவ் உண்மையை மீள இடித்துரைத்த விழாவாக பாரிஸ் எழுச்சி விழா அமைந்தது.

வன்னி உணவுத்தடை, கொடிய மனித வதைகள் என்பனவற்றை ஈவிரக்கமற்றுப் புரியும் சிறீலங்கா அரசின் அரசியல் இராணுவ பலத்திற்கு எதிராக, 500 மேற்பட்ட பாரிஸ் வாழ் தமிழீழ மக்கள் தேசிய உணர்வுகளைப் பிரதிபலிக்கும் லெப். கேணல் நாதன் அரங்கில் ஒன்று கூடினர். எதுவித பிற ஆர்வங்களுமற்று தனித்து விடுதலைப் போரிற்கான பலத்தை உறுதிப்படுத்தும் கரிசனையே குழுமியிருந்த மக்களிடம் நிரம்பிக் காணப்பட்டது.

அரங்கில் மறைந்த மாவீரர்களுக்கு அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இன்றைய அரசியல் இராணுவ பொருளாதார நிலவரங்கள் தொடர்பாக விரிவான உரைகள் இடம் பெற்றன.

சிங்கள அரசு போரை வெல்வதன் மூலம் மட்டுமே தீர்வைக் காணலாம் என நம்புகின்றது. இது தமிழர்களுக்கு தரப்பட்ட தீர்வு. எனவே மக்களை, போரின் கொடுமைகளில் இருந்து பாதுகாப்பதற்கு உழைக்க வேண்டியது இன்று உலகம் பூராவும் பரவி வாழும் தமிழ் மக்களின் கடமையாகும் என்ற அடிப்படை உண்மைகளை பேராளர்களின் உரை சுட்டிக்காட்டியது.

இன்று போரிற்கான ஆயுதங்கள் மட்டுமல்ல மக்களின் நாளாந்த வாழ்வுக்கான உணவு மருத்துவ பொருட்கள் முதல் அனைத்தையும் விநியோகிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பை புகலிடத் தமிழர்கள் கொண்டுள்ளனர் என்பது வலியுறுத்தப்பட்டது.

நாட்டின் நாளாந்த போர் நிலவரங்களை பத்திரிகை மற்றும் தகவல் ஊடகங்கள் ஊடாக அறிந்து வரும் மக்கள், கருத்துக்களை இலகுவாக கிரகித்து, 'அடுத்த கட்டபணி தொடர்பான கருத்துக்களில் ஆர்வம்' காட்டியமை அவதானிக்கப்பட்டது.

இன்றைய தேவைகளில் பிரதானமானது மக்களைப் பாதுகாப்பது என்ற பிரதான நோக்கத்தின் அடிப்படையில் விடுதலைப் போரிற்கு குழுமியிருந்த மக்களை பங்காற்ற அழைத்த போது, மக்களின் உணர்வு பூர்வமான ஈடுபாடு கட்டவிழ்த்து விடப்பட்டது.

தத்தம் உச்ச உணர்வை குழுமியிருந்தோர் வெளிப்படுத்த முயன்றமை கதிர்காமரின் உச்சக் கட்ட பரப்புரைகளை மக்கள் திரளின் ஈடுபாடு முறியடிக்கும் என்ற வரலாற்று உண்மையை புலப்படுத்தியது.

இறுதியில் தேசத்தின் அடுத்த கட்டம் மற்றும் கட்டுமானம் பற்றியும் விரிவான ஆய்வுடன் நிறைவு பெற்ற எழுச்சி விழா மக்களின் அதிகரித்து வரும் துடிப்பை வெளிக்காட்டியது. 'நம்புங்கள் தமிழீழம்' பாடல் அரங்கம் நிறைந்த ஈடுபாட்டுடன் பாடப்பட்டது.

விழாவில் கலந்து கொண்ட மக்கள் தமது நாளாந்த உழைப்பில் 15 பிரெஞ்சு பிராங்குகளை யாவது குறைந்தபட்சம் மக்களின் பாதுகாப்பிற்கு வழங்க வேண்டும் என்ற பொதுப் பிரகடனத்தின் பலத்தை அரங்கம் பிரதிபலித்தது.

## அரங்கில் பதிவான உணர்வலைகள்

(இவ் விழா புதிய ஆரம்பமாக அமைந்தமையினால் காதுகளை கூர்மைப் படுத்தியும் கண்களை விரித்து வைத்தும் கண்டதையும் கேட்டதையும் பதிவு செய்ய முயன்றோம்

★ விழாவுக்கான அழைப்புப் பெறாத ஒரு தமிழீழத்தவர் தன் தேசபக்தி கௌரவிக்கப்படவில்லை என ஏற்பாட்டாளர்களுக்கு கோபத்துடன் முறையிட்டார். ஏற்பாட்டாளர்கள் அவரது நியாயத்தையும் தார்மீக கோபத்தையும் புரிந்து கொண்டு அவரை மண்டபத்திற்குள் அழைத்தனர். அவர் அங்கு நிகழ்வுகளுடன் ஒன்றிணைந்ததுடன் தன் பங்களிப்பாக ஒரு பெரும் தொகையை வழங்கியமையை அறிய முடிந்தது.

★ விழாவில் கலந்து கொண்ட ஒரு பத்திரிகையாளர், ஏற்பாட்டாளரிடம் தனது பங்களிப்பாக எது இருக்க முடியும் எனக் கருதுகின்றீர்களோ அதைச் சொல்லுங்கள் எனக் கேட்டு பங்களித்தமை உணர்வுபூர்வமானதாய் அமைந்தது.

★ நீண்ட காலமாக மக்களின் விடுதலைக்காகப் உதவிவரும் ஒரு நடுத்தர வணிகர் தம்பதிகள் தம் பங்களிப்பை முடிவு செய்து வழங்க முன் சென்றபோது ஏன் நீங்கள் இன்னும் கொஞ்சம் கூடுதலாக செய்ய முடியாது என ஒருவர் நேசமுடன் கேட்டார். சற்று நிதானித்துச் சிந்தித்த தம்பதிகள், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து உடன்பட்டு கொண்ட பின்னர் மலர்ந்த முகத்துடன் தம் பங்களிப்பை உயர்த்தினார்கள்.

★ தன் கடினமான வணிக முதலீட்டு நெருக்கடிகள் மத்தியில் எம் தேச வணிகர் ஒருவர், நாட்டிற்காக வழ்ங்க முன்வந்த உதவி உச்சமானதாக அமைந்தது. தன் மனைவியுடன் அரங்கிற்கு வந்த அந்த நல்ல மனது, 'தனது தற்போதைய நெருக்கடிகளில் இருந்து மீள வேண்டும்' என அவரது நண்பர் ஒருவர் கூறியமை காதில் விழுந்தது.

★ முன்பு ஒருமுறை தம் தாலிக்கொடியை மக்களுக்கு வழங்கிய ஒரு முதிய தம்பதியினர், இம்முறை தம் சுகவீனமான நிலையிலும் தாம் கூட்டாகச் செய்யும் ஒரு வேலையில் கிடைக்கும் வருட ஊதியம் முழுவதையும் வழங்க முடிவு செய்தமை மனதை வருடியது. தமக்குக் கிடைக்கும் சிறிய சமூக உதவிப் பணத்தையே அவர்கள் இனி தமது நாளாந்த வாழ்க்கைக்காக நம்பியுள்ளனர்.

★ விழாவுக்கு குறித்த நேரத்திற்கு வந்த ஒரு பெண்மணி நிகழ்வு முடியும் வரை தனியே அமர்ந்து பேச்சுக்களை உன்னிப்பாகக் கேட்டு தன் பங்களிப்பை வழங்கினார்.

★ தன் சொந்த இல்லற வாழ்வில் நொந்து போன ஒரு இளைஞன், தன் சோகத்தை ஒதுக்கிவிட்டு எழுச்சி விழாவில் நேரத்துடன் வந்து கலந்து கொண்டதுடன் பங்களித்ததை பலரும் அவதானித்தனர்.

★ விழாவிற்காக அழைப்பிதழ் கேட்டுப்பெற்று கலந்து கொண்ட ஒரு வணிகர், எதிர்பார்ப்பிலும் 5 மடங்கு பங்களிக்க உறுதியெடுத்தமை ஏற்பாட்டாளர்களை வியக்க வைத்தது.

## சுதந்திரதாகம் எழுச்சி நிகழ்வு

21-ம் நூற்றாண்டை நோக்கிய பயணத்தில் இருக்கிறான் மனிதன். வான்பரப்பில் எத்தனையோ அதிசயங்கள். விஞ்ஞானச் சாதனைகளும் வேதனைகளுமாய் வானம் கறுத்தும் சிவந்தும் கொண்டிருக்கிறது. ஈழ வானம் மட்டும் இதற்கு விதிவிலக்கா? ஈழத் தமிழினம் விடுதலை வேள்வியில் தன்னை முற்றாக அர்ப்பணிக்கத் தொடங்கிவிட்டது. ஈழவிடுதலை வீரர்கள் தரைப்படை, கடற்படையென விரிந்து... ஆம், 21-ம் நூற்றாண்டில் வான் படையுடன் மிளிரப் போகிறார்கள். 21-ம் நூற்றாண்டில் உலகின் மிகச் சிறந்த தலைவனாக புலித் தலைவன் முப்படைகளுடன் எழுச்சி கொள்கிறான். அந்தப் பெருமிதத்தின் எழுச்சிக் கோலந்தான் 'சுதந்திரதாகம்' 99

**காலம்: 14.08.99**
**சனி மாலை**
**4.00 மணி**

**இடம்: இஷ்ரீன்**
**கலாச்சார**
**மண்டபம்**

**நிகழ்ச்சிகள்**

* **யுகப் பிரசவம்** - எழுச்சிக் கோலங்கள், * **சுடர் வணக்கம்** - நடனம், * **ஒற்றுமை** - சிறுவர் நாடகம், * **சவால்களும் சாதனைகளும்** - ஆய்வுரை, * நோர்வே கலைபண்பாட்டுக் கழகம் வழங்கும் **'வானம்'** - நாடகம், * நோர்வே கலைபண்பாட்டுக் கழக இசைக் குழுவினர் வழங்கும் **சுதந்திரப்பரணி** - இசை நிகழ்ச்சி

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

ஒழுங்குகள்: இஷ்ரீன் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவுடன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - நோர்வே.

# சூரிச்சில் கறுப்பு யூலை நினைவுகூரல்

தமிழர் வரலாற்றில் கறை படிந்த 1983-ம் ஆண்டு யூலையை நினைவுகூர்ந்து, 25.07.99 ஞாயிறு அன்று சூரிச் வோல்க் ஹவுஸ் மண்டபத்தில் நிகழ்ச்சிகள் பல, நிறைவான கருத்துக்களை முன் வைத்தன. பெருமளவு மக்கள் திரண்டு காட்சியளித்த இவ் விழாவை தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் பணியகத்தின் மகளிர் அமைப்பினர் மிகவும் திறம்பட ஒழுங்குசெய்திருந்தனர்.

குறிப்பிட்டடிருந்தபடி நிகழ்ச்சி ஆரம்பமாகியபோது, மலரப் போகும் தமிழீழத்தின் தேசியக் கொடியேற்றப்பட்டது. தேசியக் கொடியினை சிறப்பு விருந்தினராக வந்திருந்த லண்டன் பணியக பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முக்கிய செயற்பாட்டாளரான மிஸ் மான் (Miss Man) ஏற்றிவைக்க, மக்கள் பலத்த ஆரவாரத்துடன் வரவேற்றுக்கொண்டனர். தொடர்ந்து சுடரேற்றல் அமைதிவணக்க நிகழ்வுகளைத் தொடர்ந்து, கலை நிகழ்ச்சிகள் மேடையை அலங்கரிக்கத்தொடங்கின. அங்கையற்கண்ணி இசைக்குழுவின் புரட்சிக்கான இசையில் பாடகிகளே பெருமளவு பாடல்களைப்பாடியிருந்தும், சின்னஞ்சிறுமி ஒருவர் மிகவும் ரசிக்கக்கூடிய வகையில் அபிநயமாக பாடி அனைவரையும் அசத்தியிருந்தார். இவ் இசை நிகழ்ச்சியின்போது இரண்டு ஆண்டுகள் முன்னாலே சிங்களத்தின் கொடுமைகளை எடுத்துரைக்கும் ஒரு ஆரம்ப விளக்கத்தைத் தொடர்ந்து, தொடர்ச்சியாக பாடல்கள் அமைந்ததும், ஒரு மாறுதலான நடைமுறையாகும். இம் மாறுதலால் நிகழ்ச்சி தொய்வை எடுத்துவிடாது அடுத்து என்ன வரப்போகிறது என்றமாதிரி சிறப்பாக அமைந்தது.

நிகழ்ச்சியின் இடையில் சுக் கலைக்கோவில் நடன மாணவிகளால் மேடையேற்றப்பட்ட நடனமும் கூட சற்று மாறுபட்ட நிலையையே தோற்றுவித்தது. எடுத்துக்கொண்ட கருத்தை விளங்க வைப்பதற்காக அதற்கு தகுதியான பாடல்களை ஒன்றிணைத்து அதனை முழுமையான நடனமாக்கியதினூடாக இதனை அவதானிக்க முடிந்தது.

மகளிர் அமைப்பின் அங்கத்துவம்கொண்ட பலரும் கவிதை, பேச்சு, கருத்துரையாடல் போன்ற பல நிகழ்ச்சிகளுடன் மேடையில் இடையிடை தோன்றினார்கள். ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் வெவ்வேறு விதமாக ஒழுங்கமைக்கப்பட்டதால், மக்களை முழுமையான கலாரசனைக்கு அவை உட்படுத்தின. 'காற்றினை அழித்திட முடியுமா? புலிகாட்டிய பாதையில் மாறுமா?...' என்பதை மக்களிடம் நேரடியாக கேட்பது போல் ராதா நடனாலய மாணவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர். இப் பாடலுக்கான நடனம் நல்ல மேடை அமைப்பைப் பெற்றது.

கர்நாடக சங்கீதத்தில் நல்ல பண்டித்தியம் பெற்ற சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கத்தின் இசைக்கச்சேரியின்போது கருத்தாழமுள்ள பலபாடல்கள் பாடப்பட்டன. மாவீரர்கள் சிலருடைய குறிப்புகள், உரைநடையில் மகளிரால் காட்டப்பட்டன. மாலை நேர கருத்துச்சர நிகழ்வினூடாக பெண்களின் கடந்த கால நிலையும் தற்போதைய நிலையும் அலசப்பட்டது. இந் நிகழ்வில் நிருத்தியவகையிலான ஒரு நாட்டியத்தை வழங்கிய சுக் கலாச்சாரமன்ற நடனமாணவிகள் 'பண்டார வன்னியனின் படைநடந்த காடு பணியாது ஒரு போதும்- ஈழவளநாடு' என்று வன்னி மண்ணின் வீரவரலாற்றை மேடையில் விட்டுச்சென்றனர்.

சிற்றுரையாற்றிய சிறப்பு விருந்தினர் மிஸ் மான், மகளிர் அமைப்பின் பொறுப்பாளர், கலைபண்பாட்டுக்கழக பொறுப்பாளர் மூவருமே, கறுப்பு யூலையின் கறைபடிந்த எச்சங்களே தமிழர்களை தூண்டி இன்ற ஒரு மகத்தான வரலாற்று போராட்டத்தை கட்டியெழுப்பியிருப்பதாகவும், இந்த வரலாற்றுக்கான போராட்டத்தை வென்றெடுப்பதற்கு மக்கள் அனைவரும் ஒரு அணியில் திரண்டு செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக்கூறினர்.

பெண்கள் புனர்வாழ்வுக்காக விற்பனை செய்யப்பட்ட நல்வாய்ப்புச் சீட்டுக்கள், நல்வாய்ப்புப் பார்க்கப்பட்டதோடு, பெண்கள் புனர்வாழ்வு பணிக்காக 29,640 சுவிஸ் பிராங்குகளை சுவிஸ் நீண்டகால பணியாளர் ஒருவரிடம், மகளிர் அமைப்பினர் அனைவரும் ஒன்றுதிரண்டு மேடையில் வழங்கினர்.

முழு நிகழ்ச்சிகளும் ஒன்றை ஒன்று விட்டுக்கொடுக்காமல் சிறப்பாக அமைவதற்கு மகளிரது ஏற்பாடுகள் திருப்தியாக அமைந்திருந்தன. இனிவரும் காலங்களில் மகளிர் அமைப்பினர் மேலும் மேலும் சிறப்பான திட்டங்களை நடைமுறைப்படுத்துவார்கள் என்பதை மக்களிடம் நம்பிக்கை கொள்ளவைத்ததாகவே இந் நிகழ்ச்சிகள் அமைகின்றன. இறுதியாக அமைதியான கொடியிறக்கத்துடன் 'ஆடி' நிகழ்வுகள் ஓய்ந்தது

- சங்கையூர் குமார்


## இலங்கைத் தமிழர் கண்ணீர்

இலங்கையின் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக பல்வேறு பத்திரிகைகளில் வெளிவந்த ஆய்வுகளை உள்ளடக்கியது.

ஆசிரியர்:— தில்லைக்கூத்தன்

இந்நூலின் விற்பனை மூலம் பெறப்படும் நிதி வன்னியல் அல்லல்படும் மக்களுக்கே வழங்கப்படவுள்ளது.

தொடர்புகளுக்கு:— ஈழமுரசு பாரிஸ் பிரான்ஸ்





# ஈழமுரசு வாசகர் கருத்துக் கணிப்பு – 3

புகலிட நாட்டிலிருந்து வெளிவரும் தமிழ் தேசியப் பத்திரிகை என்ற வகையில் ஈழமுரசு தன்னுடைய பயணப் பாதையில் தனது பணியை சுய மதிப்பீடு செய்து கொள்வதற்காக வாசகர் கருத்துக் கணிப்பு ஒன்றை நடாத்துவதற்கு முன்வந்திருக்கிறது. ஈழமுரசினுடைய வளர்ச்சியிலும் அதனுடைய வருகையிலும், தரத்திலும் அக்கறை கொண்ட அனைத்து வாசகர்களும் இந்தக் கருத்துக்கணிப்பில் இயன்றவரை பங்கெடுத்து ஈழமுரசு முகவரிக்கு இந்தப் படிவத்தை அனுப்பி வைத்து எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். (ஆர்)

1. நீங்கள் ஈழமுரசின் சந்தாதாரரா? ஆம் ☐ இல்லை ☐ (ஆம் எனில் சந்தா இல. ----------)
2. சந்தாதாரர் இல்லை எனில், மாதத்தில் எத்தனை முறை ஈழமுரசு வாங்குகின்றீர்கள்?
   வாரந்தோறும் ☐ இரண்டு வாரத்துக்கு ஒரு முறை ☐ ஒரு வாரம் மட்டும் ☐ எப்போதாவது ☐
3. ஈழமுரசு இதழைப் படிக்க எவ்வளவு நேரம் செலவு செய்கின்றீர்கள்?
   1/2 மணி நேரம் ☐ 1 மணி நேரம் ☐ 2 மணி நேரமும் ☐ அதற்கு மேலும் ☐
4. கீழே தரப்பட்டுள்ள ஈழமுரசின் பக்கங்களை எப்படிப் படித்து வருகின்றீர்கள்?

| | வழக்கமாக | எப்போதாவது | படிப்பதே இல்லை |
|---|---|---|---|
| சினிமா ........ | ☐ | ☐ | ☐ |
| சிறுகதை ........ | ☐ | ☐ | ☐ |
| பெண்கள் ........ | ☐ | ☐ | ☐ |
| சிறுவர் ........ | ☐ | ☐ | ☐ |
| தொடர்கதை........ | ☐ | ☐ | ☐ |
| உலகக் கண் ........ | ☐ | ☐ | ☐ |
| மாயோன் பத்தி ........ | ☐ | ☐ | ☐ |
| வல்லூறு முகவர்கள் ........ | ☐ | ☐ | ☐ |
| மணலாறு ஒரு வீர வரலாறு ... | ☐ | ☐ | ☐ |
| பேம்பி........ | ☐ | ☐ | ☐ |
| கலைந்த சொற்கள் ........ | ☐ | ☐ | ☐ |
| விளையாட்டு ........ | ☐ | ☐ | ☐ |
| புகலிடம்........ | ☐ | ☐ | ☐ |
| அரசியல் பார்வை ........ | ☐ | ☐ | ☐ |
| பண்ணையார் ........ | ☐ | ☐ | ☐ |
| ஆசிரியர் தலையங்கம்........ | ☐ | ☐ | ☐ |
| அரசியல் ஆய்வுகள் ........ | ☐ | ☐ | ☐ |

5. ஈழமுரசில் வரும் செய்திகள் எப்படியிருக்கின்றன? அவற்றை விரும்பிப் படிக்கின்றீர்களா?

| | விருப்பம் | | | தரம் | | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகம் | ஓரளவு | குறைவு | நல்லது | பரவாயில்லை | மோசம் |
| உலகம் ........ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| இந்தியா........ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| தமிழீழச் செய்தி ........ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| குசும்புச் செய்திகள்........ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| உட்பக்கச் செய்தி [பொது] ........ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| முன் – பின் பக்கங்கள் ........ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |

6. நீங்கள் ஈழமுரசின் நிரந்தரமான வாசகராக அல்லது சந்தாதாரராக இருந்தால் எதற்காக ஈழமுரசை வாங்குகின்றீர்கள்?
   செய்திகளுக்காக ........ ☐
   இராணுவ அரசியல் ஆய்வுகளுக்காக ....... ☐
   இலக்கிய விடயங்களுக்காக ........ ☐
   வேறு விடயங்களுக்காக ........ ☐ (விபரம் குறிப்பிடவும்)........
7. நீங்கள் எப்போதாவது ஈழமுரசு வாங்குபவராக அல்லது முதல் தடவையாக ஈழமுரசு வாங்குபவராக இருந்தால், எந்த அடிப்படையில் அதை வாங்கத் தீர்மானித்தீர்கள்?
   ★ தலைப்பு செய்திகளால் ஈர்க்கப்பட்டதால் ☐
   ★ கடைகளில் ஒட்டப்பட்டிருந்த ஈழமுரசு விளம்பரப்படுத்தியில் உள்ள கட்டுரைத் தலைப்புகளைப் பார்த்து ☐
   ★ ஈழமுரசில் நல்ல விடயங்கள் வருவதாக நண்பர்கள் சிபார்சு செய்ததனால் ☐
8. ஈழமுரசில் இடம்பெறும் கலைந்த சொற்கள் உங்களுக்கு திருப்தியளிக்கிறதா? ஆம் ☐ இல்லை ☐
   இல்லையென்றால் காரணம் ........
9. ஈழமுரசின் கீழ்காணும் அம்சங்களில் உங்கள் கருத்தைக் குறிப்பிடுங்கள்

| | மிகச் சிறந்தது | நன்று | மோசம் |
|---|---|---|---|
| ஒட்டுமொத்த உள்ளடக்கம் ........ | ☐ | ☐ | ☐ |
| செய்திகளின் மொழிநடையும் அமைப்பும்........ | ☐ | ☐ | ☐ |
| கட்டுரைகளின் மொழி நடையும் உள்ளடக்கமும்.... | ☐ | ☐ | ☐ |
| இதழின் வடிவமைப்பு........ | ☐ | ☐ | ☐ |
| முன்பின்பக்க வடிவமைப்பு ........ | ☐ | ☐ | ☐ |
| இதழின் ஆவணப்பயன்பாடு ........ | ☐ | ☐ | ☐ |

10. உங்கள் வீட்டில் ஐரோப்பிய தமிழ் வானொலிகளைக் கேட்கும் வாய்ப்புண்டா?
    ஆம் ☐ இல்லை ☐
11. ஈழமுரசில் விசேடமான தொடர்கள் கட்டுரைகள் இடம்பெறவேண்டும் என்று விரும்புகின்றீர்களா?
    ஆம் ☐ இல்லை ☐
    விரும்பினால் – எந்த மாதிரியான விடயங்கள் என்று குறிப்பிடவும் ........
12. ஈழமுரசு இதழை மேம்படுத்த உங்கள் ஆலோசனைகள் ........

பெயர்: ........
வயது: 25க்கு கீழ் ☐ 25 – 35 வரை ☐ 35க்கு மேல் ☐
ஆண் ☐ பெண் ☐
முகவரி:........
........ நாடு ........
தொலைபேசி இலக்கம்:........
தொலைநகல் இலக்கம்:........

ஈழமுரசு முகவரிக்கு இப் படிவத்தை அனுப்பி வைக்கவும்

# ஐ. நாவை நோக்கிய அமைதிப் பேரணியில் சில காட்சிகள்








# அசாருதீன் இடம்பெறாத இந்தியு அணி



இந்திய கிரிக்கெட் அணி தலைமை மாற்றத்தையடுத்து முன்னாள் தலைவர் அசாருதீன் வரும்காலத்தில் அணியில் இடம்பெறுவாரா? இல்லையா? என்ற எதிர்பார்ப்புகள் பரவலாக நிலவியபோது சிறீலங்கா, சிங்கப்பூர் போட்டிகளுக்கான அணிவீரர்கள் 01.08.99 அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த அணியில் அசாருதீன் இடம்பெறவில்லை. ஆனால் இது அசாருதீனுக்கான நிரந்தரமுடிவு அல்ல அவரின் உடல்நிலை சரியாக இல்லாததாலேயே அவர் அணியில் இடம் பெறவில்லை எனக் காரணம் காட்டினாலும் அவரின் கிரிக்கெட் அஸ்தவனம் அண்மித்து விட்டதையும் மறுக்கமுடியாது. விக்கெட் காப்பாளர் மொங்கியாவும் தற்போதைய அணியில் இல்லை. இவர்கள் இருவருக்கும் பதிலாக விக்கெட் காப்பாளர் பிரசாந்தும் துடுப்பாட்டக்காரன் வினோத் கம்பளியும் இணைக்கப்பட்டுள்ளனர். வினோத் கம்பளி டெண்டுல்கரின் பாடசாலை நண்பர் மட்டுமன்றி கிரிக்கெட் நண்பரும்கூட அணித்தலைவராக டெண்டுல்கர் பொறுப்பேற்றவுடன் தனது. உற்ற நண்பனை சிபார்சு செய்ய தவறவில்லைப் போல் இருக்கிறது.

# சிறீலங்கா அணியின் அதிரடிமாற்றம்







உலகக்கிண்ண படுதோல்வியினைத் தொடர்ந்து சிறீலங்கா அணியின் அனைத்து மட்டத்திலும் பாரிய மாற்றம் நடைபெற்று வருகிறது. முதல்படியாக அணித்தலைவராக இருந்த அருச்சுனா ரணதுங்கா கழற்றிவிடப்பட்டு ஜெயசூரியா புதிய தலைவராக்கப்பட்டார். இந்நிலையில் உலகக்கிண்ண வெற்றியைத் தேடிய பயிற்சியாளர் வாட்மோர் ரணதுங்காவுடன் ஏற்பட்ட கசப்புணர்வினால் விலகிச்சென்றார். திரும்பவும் ரணதுங்கா இல்லாத நிலையில் பயிற்சியாளராக இணங்கி 50 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ஸ் மாதச்சம்பளத்தைப்பெற்று வாட்மோர் பணியைத் தொடர்கிறார். பல புதிய ஆட்ட நுணுக்கங்களையும் உத்திகளையும் இனங்கண்டு அதனூடாக 1996-இல் உலகக்கிண்ணத்தைப் பெற்றுக்கொள்ள வைத்த வாட்மோர் மீண்டும் அப்படியான அணியை கட்டி எழுப்பி வெற்றிகளைப் பெறுவாரா? என்ற ஆதங்கங்களுக்கிடையில் புதிய அணித்தேர்வில் அதிரடி முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கிறது. அருச்சுனா, அரவிந்தடி சில்வா தூக்கி எறியப்பட்டனர். மகாநாம தானாகவே கிரிக்கெட்டைவிட்டு ஒதுங்கிக்கொள்கிறார். பதிலுக்கு பலபுதிய முகங்கள் தலைகாட்டுகின்றன. அணித்தேர்வுக்கு முன்பு பயிற்சிகளை வாட்மோர் வழங்கிக்கொண்டிருக்கையில் அரவிந்தடி சில்வாவும் பயிற்சியில் கலந்துகொண்டிருந்தார். அப்போது றோய்டர் பத்திரிகையாளருக்கும் அரவிந்த டி சில்வாவுக்கும் இடையில் சிறு சர்ச்சை உருவாகி அதில் கோபங்கொண்ட சில்வா தண்ணீர் போத்தலால் பத்திரிகையாளரைத் தாக்கி அவமானப்படுத்த அவ்விடயம் பத்திரிகைகள் தரப்பில் பூதாகாரம் பெற்று காட்டுத்தீ போல் பரவ நிலைமையைச் சமாளிக்க சில்வா அணியிலிருந்து நீக்க வேண்டிய துர்ப்பாக்கியம் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கு ஏற்பட்டது.

# மாட்டினா மீண்டும் முதலாம் இடம்



சிறிய வயதிலேயே டெனிஸ் விளையாட்டில் கொடி கட்டிப் பறக்கும் மாட்டீனா கிங்கிஸ் பிரான்ஸ் ஓப்பன், விம்பிள்ரன் போட்டிகளில் தோல்வியடைந்ததால் முதல் ஸ்தானத்தை நழுவவிட்டார். பறிபோன நிலையை மீண்டும் கைப்பற்றிக்கொள்ளும் வகையில் 08.08.99 நடைபெற்ற 'Tie Classic' வெற்றி அமைகிறது. கலிபோனியாவில் இடம்பெற்ற இப்போட்டியின் இறுதியாட்டத்தில் அமெரிக்காவின் வளர்ந்துவரும் வீராங்கனை வீனுஸ் வில்லியம்சை மாட்டீனா கிங்கிஸ் மிக இலகுவாக 6:4, 6:0 என தோற்கடித்து 80,000 அமெரிக்க டொலரையும் பரிசாகப் பெற்றுக்கொண்டார். இவ் வெற்றியையடுத்து கிங்கிஸ் மறுபடியும் 09.08.99 இலிருந்து முதன்மை நிலையை அடைந்திருக்கிறார்.

# பிரேசிலை தோற்கடித்த மெக்சிக்கோ





உலகின் முதன்மை அணியாக பலவருடங்கள் திகழும் பிரேசில் உதைபந்தாட்ட அணி சென்றவருடம் பிரான்சிடம் உலகக்கிண்ணத்தை இழந்த போதும் தளராத பலமான அணியாகவே கருதப்படுகிறது. சென்றமாதம் அமெரிக்ககண்ட போட்டிகளில் வெற்றிகொண்ட தன்பலத்தை பிரேசில் நிரூபித்த போதும் 04.08.99 நடைபெற்ற 8 நாடுகள் கலந்துகொண்ட 'Con federation cup' இறுதிப்போட்டியில் மெக்சிக்கோவிடம் 4:3 என தோல்வியை சந்தித்துள்ளது. இப்போட்டியானது மெக்சிக்கோ நகரில் நடைபெற்றபோது 1 இலட்சத்திற்கும் அதிகமான பார்வையாளர்கள் கலந்துகொண்டதும் குறிப்பிடத்தக்கது. இரு உலகக்கிண்ணப் போட்டிகளும்" களம் அமைத்துக்கொடுத்தது இந்த மெக்சிக்கோ நகர்.

தொகுப்பு: பொன். தாமோதரம்.

# தேசிய கொடியும் தேசிய தலைவரும் பொறிக்கப்பட்ட தலைப்பட்டி



பிரமாண்டமான ஜெனிவா பேரணியில் இம்முறை விசேடமாக அவதானிக்கக்கூடிய விடயம் மக்கள் அனைவரும் அணிந்திருந்த தலைப்பட்டியாகும். இத் தலைப்பட்டியில் சிவப்பு, மஞ்சள், கறுப்பு ஆகிய மூன்று வர்ணக்கோடுகளுக்கிடையில் புலிச் சின்னமும், தேசிய தலைவரின் படமும் பொறிக்கப்பட்டு மக்கள் தலைகளில் அலங்கரிக்கப்பட்ட போது ஒரே சின்னத்தின் கீழ் ஒப்பற்ற தலைவன் வழியில் ஒன்றுதிரண்டு மக்கள் போராட்டத்தை புலம்பெயர்நாடுகளிலும்

# யாழ்ப்பாணத்தில் ஐந்து பெண்கள் படையினரால் கைது

யாழ். மாவட்டத்திலுள்ள திருநெல்வேலி, ஆனைக்கோட்டை, அளவெட்டி, நல்லூர் பகுதியைச் சேர்ந்த ஐந்து பெண்கள் இன்று காலையில் சிறீலங்கா படையினரால் வீடுகளில் வைத்து கைது செய்யப்பட்டனர். தொலைத்தொடர்பு நிலையத்தில் வேலை செய்யும் நாவலர் வீதி,நல்லூரரைச் சேர்ந்த இராமலிங்கம் கஜலட்சுமி (21 வயது), பாரதிபுரம், திருநெல்வேலியைச் சேர்ந்த திருமதி. புவனேந்திரன் கவிதாஞ்சலி (28 வயது), முருகன்வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த தெய்வேந்திரன் நிர்மலாதேவி (27 வயது), மருந்தகம் ஒன்றில் பணிபுரியும் கொற்றாவற்றை, அளவெட்டியைச் சேர்ந்த இராசரெத்தினம். வளர்மதி (31 வயது), ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சாந்தலிங்கம் மாலினி (21 வயது) ஆகியோரே படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்களில் கவிதாஞ்சலி, நிர்மலாதேவி ஆகிய இருவருடைய வீடுகளுக்குச் சென்ற படையினர் அவர்களைக் கைது செய்து கண்ணைக்கட்டி ரக் வண்டியில் ஏற்றிச்சென்றனர்.

இவர்களை கண்ணைக்கட்டி இழுத்துச் சென்றபோது அதை உறவினர்கள் தடுக்க முற்பட்ட வேளை, அவர்களைத் தாக்கி விட்டு படையினர் சென்றதாக சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

# வன்னிக்கான இலட்சக்கணக்கான தபால்கள் தேக்கம்

வன்னிக்கான போக்குவரத்துப்பாதை கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக தடைப்பட்டுள்ளதால் அப்பகுதிக்கு விநியோகிக்கப்படவேண்டிய இலட்சக் கணக்கான கடிதங்கள் வவுனியா தபால் அலுவலகத்திலும் மன்னார் தபால் அலுவலகத்திலும் தேங்கிக் கிடக்கின்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கு அனுப்பப்பட வேண்டிய காசோலைகள், சம்பளப் பட்டியல், காசுக்கட்டளைகள், நேர்முகப்பரீட்சைக் கடிதங்கள், வெளிநாட்டுக் கடிதங்கள் ஆகியனவும் இவற்றுள் அடங்கியுள்ளன.

தபால் பொதிகளை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கமே தமது பொறுப்பில் வன்னிக்குக் கொண்டு செல்வது வழக்கம் என்றாலும் சிறீலங்கா அரசின் பாதைத் தடையினால் இச் செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ளது தெரிந்ததே!

## தமிழீழ தொலைதொடர்பு சேவை புதிய இலக்கங்கள்

தமிழீழ மக்களின் தொலைத்தொடர்பு சேவை மக்களுக்கான தனது சேவைகளை மேலும் அதிகரித்துள்ளது. உங்கள் தொடர்புகளை இவ் இலக்கங்களுடன் மேற்கொள்ளலாம் என அறியத் தருகின்றார்கள்.

புதுக்குடியிருப்பு தொலைபேசி இலக்கங்கள்:-
00-873-761-932-759
00-873-762-077-524
தொலைநகல் இலக்கம்:-
00-873-761-932-760
ஸ்கந்தபுரம் தொலைபேசி இலக்கம்:- 00-873-761-932-798
தொலைநகல் இலக்கம்:-
00-873-761-932-810

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## லெப். கேணல்.......

ஆராய்ந்து வருகின்றனர். இராணுவக் கட்டளை அதிகாரிக்கான பயிற்சியை இவர் பெற்று வந்தவேளை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. பயிற்சியினை முடித்து வடக்குக் கிழக்கிற்கு சேவைக்கு அனுப்பப்படும் அச்சம் காரணமாக இவர் தற்கொலை செய்துகொண்டாரா என்பது குறித்தும் செய்திகள் தெரிகின்றன.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## இராணுவ.......

வாழைச்சேனை பகுதி படைமுகாம்களுக்கு மரக்கறி மற்றும் உணவுப்பொருட்களை விநியோகம் செய்துவரும் பாரவண்டிகளே இத் தாக்குதலுக்கு இலக்கானதாகத் தெரியவருகின்றது.

மட்டக்களப்பு - கொழும்பு வீதியில் வாழைச்சேனையில் இருந்து சுமார் 15 கிமீ தூரத்தில் புணானை அலிக்கட்டு எனும் சந்தி உள்ளது. இந்த வீதியில் குறுகிய தூர இடைவெளியில் பல படை முகாம்களும் உள்ளன. இந்த வீதியின் இரு மருங்கிலும் உள்ள பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. பிரதானவீதி மாத்திரமே படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. வீதியின் இடது புறமாக உள்ள பகுதி விடுதலைப் புலிகளின் குடும்பிமலை பிரதேசத்திற்குட்பட்ட பகுதியாகும். வலது புறமாக உள்ள பகுதி ஊடாகச் சென்றால் வாகரை பிரதேசத்திற்குச் செல்ல முடியும். எனவே விடுதலைப் புலிகள் இந்த தமது இரு பகுதிகளுக்குமான போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் வகையிலும், பிரதான வீதிக்கு பாதுகாப்பு வழங்கும் வகையிலும் இந்த முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

# புதிய அரச அதிபர்கள் பதவியேற்க தயக்கம்

சிறீலங்கா அரசினால் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான அரச அதிபர்கள் இடமாற்றம் செய்யப்பட்டது தெரிந்ததே. அவ்விடங்களிற்கு அம்மாவட்டங்களைச் சேர்ந்த மேலதிக அரச அதிபர்களை அரச அதிபர்களாக சிறீலங்கா அரசு நியமித்த போதிலும் அவர்கள் அப்பதவியை ஏற்கத் தயங்குவதாகத் தெரிய வருகிறது. கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக அய்யாத்துரையையும், முல்லைத்தீவு அரச அதிபராக எஸ். சுந்தரலிங்கத்தையும் சிறீலங்கா அரசு நியமித்தது. ஆனால் இந்நியமனங்களை ஏற்பதற்கு அவர்கள் தயக்கம் தெரிவித்துள்ளனர். இதேவேளை இடமாற்றம் செய்யப்பட்ட கிளிநொச்சி அரச அதிபர் ராஜநாயகம் தனது இடமாற்றத்தை உடனடியாக ரத்துச் செய்யுமாறு சிறீலங்கா அரசிடம் கேட்டுக்கொண்டுள்ளார். ஆனால் முல்லை. அரச அதிபர் இடமாற்றத்தினை ஏற்று கொழும்பு வந்துள்ளார். மேற்படி இடமாற்றங்களை இரத்துச் செய்யுமாறு சிறீலங்கா அரசிற்கு அழுத்தங்கள் ஏற்பட்டு வருகின்றன.

முன் நகர்த்துவதாகவே உணர முடிகிறது என பேரணியில் கலந்துகொண்ட ஒருவர் தெரிவித்தார்.

## புலிகளின் தொடருந்து

இப் பேரணியை முன்னிட்டு சுவிசின் அனைத்து பாகங்களிலும் இருந்து போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தனியார் பேருந்துகளும், தொடருந்துகளும் இப் பேரணிக்கென விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. சூரிச், பேர்ண், லவுசான் மக்களுக்கென தொடருந்து ஏற்பாடு செய்யப்பட்டது. இத் தொடருந்தில்' L.T.T.E என பெயர் தாங்கியவாறு சூரிச்சில் இருந்து புறப்பட்டு ஜெனீவாவை சென்றடைந்தது.

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 05.11.1966



விண்ணில்: 10.08.1998

### திருமதி இந்திராணி நவரெட்ணராஜா

கூடிப் பிறந்திருந்தோம்
குதுகலாமாய் வாழ்ந்திருந்தோம்
பிரியும்வேளைதனில் தனியாகச்
சென்றவளே...
நாட்கள் வாரங்களாகி
வாரங்கள் மாதங்களாகி
மாதங்கள் வருடமாகி ஓடிமறைந்தாலும்
உன் நினைவுகள் அன்றுபோல் இன்றும்....
வையகத்தில் வாழ்வுள்ளவரை தொடரும்...

நினைவுறும்
அன்பு சகோதரன்
ஐ.மதிசீலன்
Tel: 06.11.69.18.34
பிரான்ஸ்

தாயார் - புவனேஸ்வரி ஐயம்பிள்ளை
சகோதரம்: தயாமதி ஐயம்பிள்ளை
ஐயம்பிள்ளை சத்தியசீலன்
சகுந்தலாதேவி ஐயம்பிள்ளை
இலங்கை

தமிழர் தொலைபேசி நிலையம்
ALLO COM
itineris
SFR
ALLO BOX
27, Rue du Clos,
75020 Paris
Tel: 01 43 73 00 11 Fax: 01 43 73 02 64
M°: Maraîchers / Porte de Montreuil / Bus: 26
Bouygues Telecom
59, Rue d'Avron,
75020 Paris
Tel: 01 43 73 76 83
Fax: 01 43 73 96 31

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26
Pub

# நீலனின் மரணத்திற்கு பகிரங்க கண்டனம் தெரிவிக்க பிரான்சும் பிரிட்டனும் மறுப்பு

தமிழர் விடுதலைக்கூட்டணியின் நீலன் திருச்செல்வம் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டதையடுத்து அமெரிக்க அரசு பகிரங்கக் கண்டனம் தெரிவித்திருந்தது. ஆனால் பிரித்தானியாவும், பிரான்சும் அவ்வாறான பகிரங்கக் கண்டனங்களைத் தெரிவிக்க மறுப்புத் தெரிவித்ததுடன், அது தேவையற்ற விடையம் எனவும் தெரிவித்துள்ளனர். எனினும் கொழும்பிலுள்ள பிரெஞ்சுத் தூதரகமும் பிரித்தானிய தூதரகமும் நீலனின் குடும்பத்திற்கு தனிப்பட்ட ரீதியிலான கடிதங்களை மாத்திரம் அனுப்பிவைத்துள்ளன. நீலனின் மரணத்திற்கு இவ்விருநாடுகளும் பகிரங்க அறிக்கையை விடும் என சிறீலங்கா எதிர்பார்த்திருந்த போதிலும் இந்நாடுகள் அவ்வாறான அறிக்கைகள் எதனையுமே வெளியிடவில்லை. இதுபற்றி செய்தியாளர்கள் இரு தூதரகங்களிலும் வினவியபோது பகிரங்க கண்டன அறிக்கை விடுவது தேவையற்ற விடையம் என தூதரகங்கள் பதிலளித்துள்ளன. தூதரகங்களின் இந்நடவடிக்கையால் சிங்கள பேரினவாதிகள் கோபங்கொண்டுள்ளதுடன், விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக இரு நாடுகளும் செயற்படுவதுதான் இதற்குக் காரணம் எனவும் தெரிவித்துள்ளன. இதேவேளை சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் இரு நாடுகளிடமும் பகிரங்க கண்டன அறிக்கைகளை விடுமாறு தயவாகக் கேட்டிருந்தபோதிலும் தூதரகங்கள் அவ்வாறு செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில் புலிகளின் பாரிய காப்பரண்கள் படைநகர்வினை எதிர்கொள்ள அணிகள் தயார்

படுவான்கரைப் பிரதேசத்தை நோக்கி இராணுவ நடவடிக்கை ஒன்றினை சிறீலங்காப் படையினர் மேற்கொள்ள எடுத்துவரும் இந்நேரத்தில் அந்த இராணுவ நடவடிக்கையை எதிர்கொள்ள விடுதலைப் புலிகளும் தயாராகி வருகின்றனர்.

வவுணதீவி, செங்கலடி, மண்முனை, களுவாஞ்சிக்குடி ஆகிய பிரதேசங்களினூடாக முன்னேறுவதற்கே இராணுவத்தினர் திட்டங்களை வகுத்து வருகின்றனர். மேற்படி பிரதேசங்களினூடாக முன்னேறி வந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை கைப்பற்றிக் கொள்ளுவதே இராணுவத்தினரின் வியூகமாகும். ஆனால் இந்த இராணுவ நடவடிக்கையை எதிர்கொள்ள விடுதலைப்புலிகளும் தயாராகி வருகின்றனர். வவுணதீவு இராணுவ முகாமுக்கு சிறிது தொலைவிற்கு அப்பால் விடுதலைப்புலிகள் பாரிய காப்பரண்களை அமைத்து வருகின்றனர். அத்துடன் சுற்றாடல் பகுதியில் உள்ள மக்களையும் பாதுகாப்பான வேறு இடங்களிற்குச் செல்லுமாறும் அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். தற்பொழுது பாதுகாப்புக் காரணம் கருதி மண்முனையில் இருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லும் படகுச்சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பில் பரவலான விமானத்தாக்குதல்

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான கரடியனாறு, புல்லாவெளி, பெண்டுகள்சேனை ஆகிய பகுதிகளில் சிறீலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் தொடர்ந்தும் கடுமையான விமானத்தாக்குதல்களை நடாத்தி வருகின்றன. விமானத்தாக்குதல் நடக்கும் ஏககாலத்தில் படைமுகாம்களில் இருந்தும் எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன. கடந்த 8-ம் திகதியன்று இரவு 7.30 மணியளவில் கூட இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலால் ஏற்பட்ட சேத விபரங்கள் உடனடியாகத் தெரியாவிடிலும் மக்களின் உயிர், உடமை இழப்புக்கள் குறித்து அஞ்சப்படுகிறது. கிழக்கில் இராணுவத்தினர் மேற்கொள்ளவுள்ள இராணுவ நடவடிக்கைக்கு முன்னேற்பாடாகவே இவ் விமானத் தாக்குதல் இடம்பெறுவதாகக் கருதப்படுகிறது.

## லெப். கேணல் தர அதிகாரி தற்கொலை

சிறீலங்கா இராணுவத்தின் லெப்ரினன்ட் கேணல் உப்புள் துஷ்யந்த என்ற அதிகாரி கைத்துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார். சப்புகஸ்கந்த இராணுவப் பயிற்சி முகாமில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவர் தற்கொலை செய்துகொண்டதற்கான காரணத்தினை சிறீலங்காப் பொலிசார்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## மனித உரிமைகளின் பேரணிக்கு மன்னாரில் அனுமதி மறுப்பு

மன்னார் பகுதியில் சிறீலங்காப் படையினரால் அண்மைக் காலமாக மேற்கொள்ளப்படும் பாலியல் வல்லுறவுகள், படுகொலைகள் ஆகியவற்றை சர்வதேச அரங்கிற்கு வெளிக்கொணரும் முகமாக மன்னாரில் அரசசார்பற்ற நிறுவனங்களும், மனித உரிமை அமைப்புக்களும் இணைந்து மேற்கொள்ள இருந்த அமைதிப் பேரணிக்கு மன்னார் பொலிசார் அனுமதி வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளனர். பேரணியில் கலந்து கொள்ள மன்னாரின் தூர இடங்களில் இருந்து மன்னார் நகருக்கு பெருந்திரளான மக்கள் வந்திருந்தபோதும் பொலிசாரின் அனுமதி மறுப்பினால் மீண்டும் திரும்பிச் சென்றுள்ளனர். பொலிசாரின் இந்த நடவடிக்கைக்கு மன்னாரில் உள்ள பிரஜைகள் குழு, மனித உரிமை இல்லம், புனர்வாழ்வு, துயர் துடைப்புச் சங்கம் ஆகியன கண்டனம் தெரிவித்துள்ளன.

## இராணுவ உணவுவண்டிகள் மீது தாக்குதல் - இருவர் பலி

மட்டக்களப்பு - கொழும்பு வீதியில் புணானைக்கு அருகில் உள்ள அலிக்கட்டுச் சந்தியில் வைத்து படையினருக்கு உணவுப் பொருட்களை ஏற்றிச் சென்ற மூன்று பாரவண்டிகள் மீது நேற்று (8.8.99) இரவு 7.30 மணியளவில் இனந்தெரியாத துப்பாக்கி நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் சாரதி ஒருவரும் உதவியாளர் ஒருவரும் பலியானதுடன், மூன்று படையினரும் நான்கு சிவிலியன்களும் காயமடைந்தனர்.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

கே.ஆர்.எஸ். என்றபிறைசேஸ்
537 High Road, Wembley
Middlesey, Hao 2 Dj, Tel: 0181- 9024590
நிர்வாகி: G.சதீஸ்
Pub

★ Kingfish- 2.59 ல் இருந்து
★ நீலக்கால் [துப்பரவு செய்த] நண்டு £3.89 ல் இருந்து
★ 20 Kg Broken Basmath £7.99 இலிருந்து; 20 கிலோ Broken Basmath £7.99 இலங்கை மரக்கறிவகை 99P
★ CD 2.99 இல் இருந்து
★ Audio 99 இல் இருந்து
★ நல்லெண்ணை £3.49; 1/2 போத்தல் £1.79
★ ஞானம்காட் 10% விலைக் கழிவில்